பக்கங்கள்: பதினாறு

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 24 வள்ளுவர் ஆண்டு 2040 வைகாசி 20 புதன்கிழமை (03.06.2009) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 189

# ஜனாதிபதியின் இந்தியப் பயணம்

# மீள்குடியேற்றத்துக்கு உதவி பெறுவதற்கே

## அரச தரப்பில் ஊடகத்துறை அமைச்சர் அறிவிப்பு



கொழும்பு, ஜூன் 03

**வன்னியிலிருந்து இடம்பெயர்ந்த நிலையில் வவுனியா நலன்புரி நிலையங்களில் தங்கவைக்கப்பட்டிருக்கும் பல்லாயிரக்கணக்கான மக்களை விரைந்து மீள்குடியமர்த்துவதற்கான இந்தியாவின் உதவியைக் கோரியே ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அந்நாட்டுக்கு விரைவில் விஜயம் செய்யவுள்ளார். ஊடகத்துறை அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபயவர்தன இத்தகவலை நேற்று வெளியிட்டார்.**

இந்தியா இதுவரை இலங்கைக்கு பல கோடி ரூபாவை வழங்கி உதவி செய்துள்ளது என்றும் தொடர்ந்தும் உதவ அந்நாடு விருப்பம் தெரிவித்துள்ளது என்றும் அவர் மேலும் சொன்னார்.

அரசதகவல்திணைக்களத்தில்நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அமைச்சர்

(16 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கைக்குக் கடன் வழங்குவதை தடுக்க ஐரோப்பிய ஒன்றியம் முயற்சி

கொழும்பு, ஜூன் 3

சர்வதேச நாணய நிதியத்தினால் இலங்கைக்கு வழங்கப்படும் கடனை தடுத்து நிறுத்த ஐரோப்பிய ஒன்றியம் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது எனச் செய்திகள் வெளியாகியுள்ளன.

மனித உரிமை மீறல் குறித்து ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையில் முன்வைக்கப்பட்ட யோசனைகள் தோல்வியடைந்ததன் பின்னர் சர்வதேச நாணய நிதியக் கடனை முடக்க ஐரோப்பிய ஒன்றியம் திட்டமிட்டிருக்கின்றது என கொழும்பு வார இதழ் ஒன்று தெரிவித்துள்ளது.

(16 ஆம் பக்கம் பார்க்க)

## படையினரின் வெற்றியைக் கொண்டாடும் தேசிய விழா இன்று தலைநகர் கொழும்பில்

கொழும்பு, ஜூன் 03

புலிகளுக்கு எதிரான மோதல்களில் படையினர் பெற்றுக் கொண்ட வெற்றியைப் பெருமிதப்படுத்தும் விதத்தில் படையினரைக் கௌரவிக்கும் தேசிய விழா ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் இன்று கொழும்பில் கொண்டாடப்படவிருக்கிறது.

இந்த வைபவத்தை மிகவும் பிரமாண்டமான முறையில் காலிமுகத்திடலில் நடத்து

(16 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை, இந்திய அரசுகளுக்கு எதிராக சென்னையில் நேற்றுக் கண்டன ஆர்ப்பாட்டம்!

சென்னை, மே 3

இலங்கையில் நடைபெற்ற தமிழர் படுகொலையையும், சோனியாவின் துரோகத்தையும் கண்டித்து மக்கள் ஜனநாயக இளைஞர் கழகத்தின் சார்பில் நேற்று சென்னையில் உள்ள மெமோரியல் அரங்கத்திற்கு முன்னால் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

இந்த ஆர்ப்பாட்டத்திற்கு வ.டேவிட் செல்லப்பா தலைமை வகித்தார். மனோகரன் கண்டன உரை நிகழ்த்தினார். இக்கூட்டத்தில் இலங்கை அரசிற்கு எதிராகவும், இந்திய அரசிற்கு எதிராகவும் கண்டன முழக்கங்கள் எழுப்பப்பட்டன. வன்னியில் இறுதிக் கட்டப் போரில் பலியான தமிழருக்கு அஞ்சலி வணக்கம் செலுத்தப்பட்டது.

இந்த ஆர்ப்பாட்டத்தின்போது, ஈழத் தமிழருக்கு மறுவாழ்வளிக்கவும், புனர்நிர்மாணப் பணிகளை மேற்கொள்ளவும் ஐ.நா. சபையின் குழுவை அனுப்பவேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டது. (சி)

## இடம்பெயர்ந்தவர்கள் மத்தியில் ஊடுருவியுள்ள பயங்கரவாதிகளை தொடர்ந்து களையெடுப்போம்

### ஐ.நா. மனித உரிமைக் கவுன்ஸில் கூட்டத்தில் சமரசிங்க



ஜெனிவா,ஜூன்3

இடம் பெயர்ந்தவர்களுக்கான மனிதாபிமான மற்றும் புனர்வாழ்வுப் பணிகளை முன்னெடுக்கவேண்டியுள்ள அதேவேளை, பிரிவினைக்கு புத்துயிர் கொடுத்து அது மீண்டும் தலையெடுக்கவிடாது தடுக்க வேண்டிய தேவையும் உண்டு.

அதன் பொருட்டு இடம் பெயர்ந்த மக்கள் மத்தியில் ஊடுருவியுள்ள பயங்கரவாதிகளைக் களையெடுக்க வேண்டிய அவசியமும் தேவையும் அரசாங்கத்திற்கு உண்டு. அதனை அரசு செய்து கொண்டே இருக்கும்.

இவ்வாறு இங்கு நேற்று நடைபெற்ற ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் கவுன்ஸிலின் வருடாந்த மாநாட்டில் உரை யாற்றிய இலங்கையின் மனித உரிமைகள் மற்றும் இடர் முகாமைத்துவ அமைச்சர் மஹிந்த சமரசிங்க தெரிவித்தார்.

அவர் தமது உரையில் தெரிவித்த ஏனைய சில அம்சங்கள் வருமாறு:-

*எமது நாட்டின் பிரச்சினைக்கு தீர்வு காணுவதற்கு வேறு எந்த நாட்டினது மாதிரிகளையும் நாம் பின்பற்ற மாட்டோம். ஏனைய நாடுகள் சிபார்சு செய்யும் தீர்வுகளை செயற்படுத்த முனைய மாட்டோம். எமது நாட்டு மக்கள் அனைவருக்கும் ஏற்

(16 ஆம் பக்கம் பார்க்க)

## 'கனரக ஆயுதங்களைப் பயன்படுத்தவில்லை அதனாலேயே புலிகளுக்கு எதிரான போர் நீடித்தது'

கொழும்பு, மே 3

அரச படையினர் கனரக ஆயுதப் பாவனை மற்றும் விமானத் தாக்குதல்கள் போன்றவற்றில் இறுதி நேரத்தில் ஈடுபடாத காரணத்தால்தான் விடுதலைப் புலிகளுக்கெதிரான யுத்தம் நீடித்தது - என்று மனித மனித உரிமைக்களுக்கான அமைச்சர் மஹிந்த சமரசிங்க தெரிவித்திருக்கிறார்.

ஐ.நா. மனித உரிமைக் கவுன்ஸிலின் 11 ஆவது மாநாடு நேற்று ஜெனிவாவில் இடம்பெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே சமரசிங்க இதனைத் தெரிவித்தார்.

சமீபத்தில் இடம்பெற்ற ஐ.நா. மனித உரிமைக் கவுன்ஸில் கூட்டம் தேவையற்றது. இது எமக்கு ஏமாற்றம் அளிக்கிறது.

கனரக ஆயுதப் பாவனை, விமானத் தாக்கு தலில் இராணுவத்தினர் ஈடுபடாமல் இருந்தமையால்தான் விடுதலைப் புலிக ளுக்கெதிரான யுத்தம் நீடித்தது.

கனரக ஆயுதங்களைப் பாவிக்காத காரணத்தால்தான் இராணுவத்தினருக்கும் இழப்பும் ஏற்பட்டது -என்றும் அவர் தெரிவித்தார். (அ-சி)

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசுடன் இணைந்து அரசியல் தீர்வு ஒன்றை எட்ட முன்வரவேண்டும்

### ஐ.தே.கவின் எஸ்.பி.திஸநாயக்கா வேண்டுகோள்

கொழும்பு, ஜூன் 03

தமிழர்களின் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான அரசியல் தீர்வு ஒன்றை எட்டுவதற்காகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுவுடனும் அரசுடனும் இணைந்து செயற்பட முன்வர வேண்டும் - இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் தேசிய அமைப்பாளரும் மத்திய மாகாணசபையின் பிரதான எதிர்க்கட்சித் தலைவருமான எஸ்.பி. திஸநாயக்க வேண்டுகோள் விடுத்துள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இந்த வேண்டுகோளை விடுத்தார். அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு:-

புலிகள் தோற்கடிக்கப்பட்டு யுத்தம் இப்போது முடிவுற்றுள்ளது. இந்தச் சந்தர்ப்பத்தில்தான் தேசிய பிரச்சினையைத் தீர்ப்பதற்கான அரசியல் தீர்வின் தேவை அதிகரித்துள்ளது.

தமது பிரச்சினையைத் தீர்ப்பதற்காக அதிகாரப் பகிர்வைக் கோருகின்ற தமிழ் மக்களின் கோரிக்கை நிறைவேற்றப்படாமையால்தான் தமிழீழக் கோரிக்கை தமிழர் தரப்பால் முன்வைக்கப்பட்டது.

அந்தத் தமிழீழக் கோரிக்கையை அடிப்படையாக வைத்து உருவான புலிகள் அமைப்பு இன்று முற்றாக அழிக்கப்பட்டுவிட்டது. இருந்தாலும் தமிழரின் பிரச்சினையைத் தீர்க்கும் வழிமுறையான அரசி

(16 ஆம் பக்கம் பார்க்க)

### கல்விச்சுடர்

**நாளை**

தரம் - 05 புலமைப்பரிசில் மாணவருக்கான தயார்படுத்தல் பரீட்சைத் தொடர்

**உள்ளே**

ஆசிரியர் பொன்.சக்திவேல் தொகுத்து வழங்கும் இலகுவழி ஆங்கிலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ். மாவட்டச் செயலகத்தில், 10.05.2004 ஆம் திகதியன்று மேலதிக அரசாங்க அதிபராக கடமையைப் பொறுப்பேற்று கடந்த 06 வருடங்களாக, மிகுந்த நெருக்கடிகளுக்கு மத்தியில் அர்ப்பணிப்புடனும், ஆளுமையுடனும் மக்களுக்கு சிறந்த சேவையாற்றி, 01.06.2009 ஆந் திகதி முதல் வட மாகாண பிரதம செயலாளராக பதவி உயர்வு பெற்றுச் சென்றிருக்கும்,

**திரு. ஆறுமுகசுவாமி சிவசுவாமி**

அவர்கள் மேன்மேலும் பதவி உயர்வுகள் பெற்று சிறப்பான சேவை ஆற்றவும்சீர் சிறப்புடன் வாழவும்இறைவனை இறைஞ்சுவதுடன் அவரை மனதாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

அரசாங்க அதிபரும், மற்றும் செயலக உத்தியோகத்தர்களும்,ஊழியர்களும்.

**UNIVERSITY OF JAFFNA SRI LANKA**
**Postponement of Written test for the Post of Office Secretary (On Contract) at MRTC**

The written test for the post of Office Secretary (On Contract) for the Media Resource and Training Centre, scheduled to be held on 03.06.2009 at 9.30 a.m. in the Ramanathan Hall, University of Jaffna, Thirunelvely has been postponed due to unavoidable circumstances. New date will be notified later.

**Registrar.**

## கண்ணீர் அஞ்சலி



யாழ்ப்பாண பல்கலைக்கழகப் பீடாதிபதியும் மெய்யியல் துறை முன்னாள் தலைவருமான

**சோமசுந்தரம் கிருஷ்ணராஜா**

அவர்களின் மறைவு ஈடுசெய்யமுடியாதது. அன்னாரது உறவுகளுடன் நாமும் துயரத்தை பகிர்ந்து கொள்வதுடன் அவரது ஆத்மாசாந்தியடைய இறையருளை வேண்டுகின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி !!!

தலைவர், விரிவுரையாளர்கள், கல்வியியற்துறை
பட்டபின்கல்வி டிப்ளோமா பகுதிநேர மாணவர்கள், யாழ்.பல்கலைக்கழகம்.

## கண்ணீர் அஞ்சலி



எமது கலைப்பீடத்தின் பீடாதிபதியும் மெய்யியற் கழகத்தின் ஸ்தாபகருமாகிய

**பேராசிரியர் சோ.கிருஷ்ணராஜா**

அவர்களின் மறைவையொட்டி இதயம் நெகிழ்ந்த கண்ணீர் அஞ்சலியை செலுத்துகின்றோம். அன்னாரின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அவரது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

மெய்யியற்கழகம்,
மெய்யியற்துறை, யாழ். பல்கலைக்கழகம்.

## இரண்டாம் ஆண்டின் கண்ணீர்ப் பூக்கள்



அன்னை மடி விழிப்பு 28.02.1977 — அநியாய அழிப்பு 03.06.2007

அமரர்

**சுப்பிரமணியம் சாந்தீபன்**

(உபதபாலதிபர்) திருத்திமை தேம்பிறை

அழகுத் திருமகனே எம் அருந்தவப்புதல்வனே சாந்திபா!
ஆசையுடன் தம்பி! என நாம் அழைக்கும் குரலதுவும் ஓய்ந்ததடா
அன்பு முகம் பார்த்து ஆண்டிரண்டு ஆனதடா
பாலகிகள் பரிதவித்து அப்பா எனும் ஓசை ஒரு நாளும் ஓயவில்லை
பாச மனைவியின் சோகக் குமுறல்தான் தீரவோ வழியுமில்லை
படமாய் நீ இருந்த பல கதைகள் பேசுகின்றாய்
ஆண்டிரண்டு சென்றிடினும் மறாத சோகம் மனதில் நிலைக்குதடா
உனை அழித்தவரும் அழிந்தொழிந்து போனாடா
எமக்கு இதுவே ஆறாத வலியாச்சு- உன் ஆசை மனைவிக்கோ
சோகமே வாழ்வாச்சு
நீ வித்தகனாய் வாழ்ந்திடவோ விதிதான் விடவில்லையடா
உன் வித்தில் வந்துதித்த இரு முத்தும் புதல்விகளும்
உன் ஆசைக் கனவுகள் அத்தனையும் நிறைவேற்றுமடா
அதற்கான நல் ஆசியை நீ வானுலகில் தானிருந்து
வழங்கிடுவாய் ஆசையுடன்
உன் ஆத்மா சாந்தி பெற அன்பு உறவுகள் நாம்
ஆண்டவனை வேண்டுகின்றோம்.

ஆறாத துயரமுடன்
ஆழ்ந்திருக்கும் குடும்பத்தினர்

மிருசுவில் வடக்கு,
மிருசுவில்.

# இந்திய மாணவர் மீதான தாக்குதல்: ஆஸ்திரேலியப் பிரதமர் கண்டனம்

மெல்போர்ன், ஜூன் 03

அவுஸ்திரேலியாவில் இந்திய மாணவர்கள் மீது நடத்தப்பட்ட இனவெறித் தாக்குதலுக்கு அவுஸ்திரேலிய பிரதமர் கெவின் ரூட் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார். அத்துடன் சம்பந்தப்பட்ட குற்றவாளிகள் விரைவில் சட்டத்தின் முன்னால் நிறுத்தப்படுவார்கள் என்றும் அவர் உறுதி அளித்துள்ளார்.

பெடரேசன் சதுக்க ரயில்வே நிலையம் அருகே திங்கட்கிழமை அதிகாலை இந்திய மாணவர்கள் சார்பில் மூன்றாவது போராட்டம் நடத்தப்பட்டது. இப்போராட்டத்தின்போது, சிலர் வன்முறையில் ஈடுபட்டனர் எனக் கூறி அவர்கள் மீது பொலிஸார் தடியடி நடத்தினர். அத்துடன் அமைதிக்கு பங்கம் விளைவித்தனர் என குற்றஞ்சாட்டி 18 இந்தியர்களையும் பொலிஸார் கைது செய்தனர். கைதானவர்களின் பெயர் விவரங்கள் உடனடியாக வெளியாகவில்லை. அவர்கள் விடுதலை செய்யப்பட்டு விட்டனரா? அல்லது தொடர்ந்து காவலில் வைக்கப்பட்டுள்ளனரா என்ற தகவலும் அறிவிக்கப்படவில்லை.

# புலிகளுக்கு உதவியோர் பற்றிய புலன் விசாரணைகள் ஆரம்பம்

கொழும்பு, ஜூன் 03

யுத்த காலத்தின்போது புலிகளுக்கு உதவி செய்துவந்த படையினர், வர்த்தகர்கள், அரசியல்வாதிகள் மற்றும் ஊடகவியலாளர்கள் ஆகியோரைக் கண்டுபிடிப்பதற்கான விசாரணைகளைப் பாதுகாப்பு அமைச்சு ஆரம்பித்துள்ளது என்று ஊடகத்துறை அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபயவர்தன நேற்றுக் கூறினார்.

புலிகளுடன் தொடர்புபட்டிருந்த ஊடகவியலாளர்களின் பெயர்களை இந்த விசாரணையின் பின்னர் வெளிப்படுத்துமாறு ஊடகத்துறை அமைச்சு, பாதுகாப்பு அமைச்சிடம கேட்டுள்ளதாகவும் அவர் மேலும் சொன்னார்.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அமைச்சர் இத்தகவலைத் தெரிவித்தார்.

அவர் இது தொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

யுத்த காலத்தின்போது படையினரில் சிலர், ஊடகவியலாளர்கள், அரசியல்வாதிகள் மற்றும் வர்த்தகர்கள் ஆகியோர் புலிகளுக்கு உதவியிருக்கின்றனர். இது தொடர்பான தகவல்கள் பாதுகாப்பு அமைச்சிற்குக் கிடைத்துள்ளன.

சில அரசியல்வாதிகளின் வாகனங்கள் புலிகளின் வெடிகுண்டுகளை ஏற்றிச் செல்லப் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன, இதுபோன்ற பல சம்பவங்கள் இடம் பெற்றுள்ளன.

இவை தொடர்பாக பாதுகாப்பு அமைச்சு இரண்டு வாரங்களுக்கு முன் விசாரணையை ஆரம்பித்துள்ளது. இந்த விசாரணையின் முடிவில் பல உண்மைகள் வெளிவரும். புலிகளுடன் தொடர்புபட்டிருந்தவர்களின் பெயர்கள் வெளியிடப்படுவதோடு அவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கையும் எடுக்கப்படும்.

குறிப்பாக புலிகளுடன் தொடர்புபட்டிருந்த ஊடகவியலாளர்களின் பெயர்களை வெளியிடுமாறு நாம் பாதுகாப்பு அமைச்சிடம கேட்டிருக்கின்றோம்.

இதேவேளை, ஊடகவியலாளர் போத்தல ஜயந்த தாக்கப்பட்டமை தொடர்பில் நாம் கவலையடைகிறோம். இத்தாக்குதல் சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்தப்படும் - என்றார். (அ-சி)

## கண்ணீர் அஞ்சலி



யாழ்ப்பாண கலைப்பீடாதிபதியும் மெய்யியல் துறை முன்னாள் தலைவருமான

**பேராசிரியர் சோ.கிருஷ்ணராஜா**

அறிவுத் தெளிவோடு எங்கள் அறிவுக் கண்ணை திறந்து வைத்த எம் பேராசான் இந்த மண்ணுலகை விட்டு நீங்கியது - எம் இதயங்களை துன்பக் கனலாக்கி உள்ளது. அன்னாரின் ஆத்மா சாந்தி பெற இறைவனடியை இறைஞ்சுகின்றோம்.

மெய்யியல் சிறப்புக் கலை 1997/1998 மாணவர்கள்
யாழ்ப்பாண பல்கலைக்கழகம்.

## 17 ஆம் ஆண்டு நினைவலைகள்

தோற்றம் 19 * 12 * 1942



மறைவு 11 * 06 * 1992

**அமரர் மாணிக்கம் தங்கவடிவேல்**

(ஓய்வு பெற்ற தொழில்நுட்ப உத்தியோகத்தர் P.W.D)

திதி :03.06.2009 ஏகாதசி

அன்பின் திருவுருவே பாசத்தின் சிகரமே - அப்பா
அவனியிலே நாம் வாழ வழிகாட்டி நின்றீர்களே - இன்று
மீளாத்துயில் கொண்டு பதினேழு ஆண்டுகள்
ஆனாலும்
எம்மை விட்டு அகலவில்லை உங்கள் நினைவுகள்

*தங்கத் தாமரை,*
*அல்வாய்.*

*பிரிவால் துயருறும்:*
**குடும்பத்தினர்.**

## Our last salute to Professor S.Krishnarajah, Dean Faculty of Arts



You touched many
with your wit, kindness
& love;
You lived in virtue and
glory;
It hurts our hearts
when we lose you.
We won't see that
smile, that quick gait again....
But there is a corner within all our hearts
which is forever yours!
May your soul rest in peace!!!

**Head, Staff & Students**
**Department of Linguistics & English**

## மரண அறிவித்தல்



**கணபதிப்பிள்ளை மகாதேவா (மகா)**
(Notary Public & Ex.Hayleys)

*யாழ்ப்பாணம், வடமராட்சியில் உள்ள கரணவாய் வடக்கு, உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் கொழும்பில் உள்ள வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட மகாதேவா 01.06.2009 திங்கட்கிழமை காலமானார்.*

*அன்னார் காலஞ்சென்ற பிரபல வழக்கறிஞர் பொன். கணபதிப்பிள்ளை (J.P.U.M. - நடுவில்), காலஞ்சென்ற மரகதவல்லி தம்பதியினரின் சிரேஷ்ட புத்திரனும் காலஞ்சென்றவர்களான பிரபல சட்டத்தரணி அரபி சரவணமுத்து - இராஜலக்ஷ்மி தம்பதியினரின் மூத்தமருமகனும் திரிவேணியின் (Ladies College) அன்புக் கணவரும் தர்ஷியின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்ற கமலா (Zambia), மகேந்திரன் (Ms Accounting System), காலஞ்சென்ற சரோ ஞானபண்டிதன், கௌரி ஆகியோரின் அன்பு அண்ணாவும் மாணிக்கவாசகர் (Zambia), சாரதாதேவி, Dr.கேதீஸ்வரன், காந்தலி, காலஞ்சென்ற திலோ மற்றும் மஞ்சுவா ஆகியோரின் மைத்துனருமாவார்.*

*அன்னாரின் பூதவுடல் இன்று (03.06.2009) புதன்கிழமை காலை 8 மணிக்கு இல.71 பீற்றசன் லேனில் வைக்கப்பட்டு நாளை (04.06.2009) வியாழக்கிழமை காலை 9 மணிக்கு கிரியை கள் ஆரம்பிக்கப்பட்டு 11 மணிக்கு பூதவுடல் பொரளை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்பட்டு தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.*

தகவல்: மனைவி, மகள் குடும்பத்தினர்
71, பீற்றர்சன்லேன், கொழும்பு - 06.
T.P: 011-2365420

கரணவாய் வடக்கு,
உடுப்பிட்டி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## தலைவர்களைத் திணிக்கும் எத்தனமா?

விடுதலைப் புலிகளைத் தோற்கடித்தமை தொடர்பான வெற்றிக் கொண்டாட்டங்கள் தலைநகர் கொழும்பில் இன்று கோலாகலமாக நடைபெறுகின்றன.

விடுதலைப் புலிகளைத் தோற்கடித்தமை தொடர்பாகத் தாம் ஏற்கனவே வெற்றிப் பெருமிதத்தில் நாட்டுக்கு ஆற்றிய உரையில் ''இது புலிகளின் தோல்வியே தவிர, தமிழர்களின் தோல்வியே அல்ல!'' - என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கூறியிருந்தார். இன்று நடைபெறும் தமது படைகளின் வெற்றித் திருவிழாக் கொண்டாட்டங்களின் போது நாட்டு மக்களுக்குத் தாம் ஆற்றும் உரையில் இதை மீண்டும் அவர் குறிப்பிட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

ஆனாலும், இராணுவ ரீதியில் தோற்றவர்கள் புலிகளாக இருந்தாலும், அரசியல் ரீதியிலும் முற்றாகத் தோற்றுப் போய், தூக்கி வீசப்பட்டு விட்டோமோ என்ற வெறுப்பு நிலை - வெறுமை நிலை - இலங்கைத் தீவின் தமிழர்கள் மனதில் ஆழமாகப் பற்றிப் பீடித்து நிற்காமல் இல்லை என்பதையும் குறிப்பிட்டேயாக வேண்டும்.

தென்னிலங்கையில் சிங்களத் தலைமைகளிடமிருந்து - அதிகாரவர்க்கத்தவரிடமிருந்து - வரும் செய்திகள், அறிவிப்புகள், பிரகடனங்கள் அப்படித்தான் தோன்றுகின்றன.

'போரில் தோற்கடிக்கப்பட்டவர்கள் புலிகளே; தமிழர்கள் அல்லர்' - என்று ஜனாதிபதியும் அவரது அரசின் ஏனைய தலைவர்களும் வாயால் கூறும் வார்த்தைகள் உண்மையானவையாக இருக்குமானால், நாதியற்றிருக்கும் ஈழத் தமிழ் இனத்தைப் பெரும்பான்மையினர் வெளிப்படையாகவே அரவணைத்துக் காட்டவேண்டிய மிகப் பொருத்தமான - அவசியமான - சமய, சந்தர்ப்பம் இதுவாகும். ஆனால் அதற்கு மாறாக, அவர்களைப் புறமொதுக்கி, மனக் கிலேசத்துக்கு உள்ளாக்கும் விடயங்களே இப்போதும் வெளிப்படுத்தப்படுகின்றன.

இராணுவ வெற்றிக் களிப்பில் மிதக்கும் - பேரினவாதக் கட்சியான - ஜாதிக ஹெல உறுமய ''தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரை நாடாளுமன்றத்திலிருந்து வெளியேற்ற வேண்டும்!'' - என்ற கூக்குரலைத் தீவிரப்படுத்தியிருக்கின்றது.

நாட்டில் பாதுகாப்பு விடயங்களில் ஜனாதிபதிக்கு அடுத்து மிகச் செல்வாக்கு மிக்கவராக விளங்குபவரும், ஜனாதிபதியின் சகோதரரும், இலங்கைப் படைகளின் இன்றைய வெற்றி நிலைக்குக் காரணமான கதாநாயகன் என்று தென்னிலங்கையால் போற்றப்படுபவரும், பாதுகாப்பு அமைச்சின் செயலாளருமான கோத்தபாய ராஜபக்ஷவும் இக்கருத்தையே வலியுறுத்தியிருக்கின்றார்.

''தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரை நாடாளுமன்றத்திலிருந்து வெளியேற்றவேண்டும் என்பதே எமது நிலைப்பாடாகும். இதனைப் பலமுறை வலியுறுத்தியிருக்கிறேன்.'' - என்று அவரே அண்மையில் பகிரங்கப் பேட்டி ஒன்றில் கூறியிருக்கின்றார்.

இந்த நாடாளுமன்றத்தில் முடியாவிட்டால் அடுத்த நாடாளுமன்றத்திலாவது இதைச் செய்யவேண்டும் என அவர் வலியுறுத்தியிருக்கின்றார்.

ஒருபுறம் தமிழ் அரசியல் கட்சிகளை ஆளும் கட்சியுடன் சேருமாறு வெளியே புலப்படாத அழுத்தம் அவற்றுக்கு. மறுபுறம் சுயாதீனமாகச் செயற்படும் தமிழ்க் கட்சிகளையும் புலிகளை ஒழிப்பது போன்று அழித்தொழிக்கும் எத்தனம்.

தமிழர்களின் நியாயமான தேசியக் கோரிக்கைகளைப் பிரதிபலிப்பனவாகக் காட்டிக்கொண்ட வெகுஜன ஊடகங்கள் கூட அழுத்தங்களுக்கு இரையாகி ஆளும் தரப்புக்கு ஜால்ரா போடும் நிலைமை இன்னொருபுறம்.

இவற்றுக்கு மத்தியில் ''தோற்றது புலிகள்தான்; தமிழர்கள் அல்லர்!'' - என்ற கருத்து எடுபடக் கூடியதே அல்ல.

தமிழர்களின் நியாயமான அபிலாஷைகளை நிறைவு செய்யக்கூடிய தீர்வு எட்டப்படுவதன் மூலம் அமைதியும், சமாதானமும் ஏற்படுத்தப்பட வேண்டும் என யாரும் கருதுவார்களேயானால், அதற்கு அத்தகைய அபிலாஷைகளை நேர்மைத் திறத்துடன் பிரதிபலிக்கக்கூடிய தமிழ்த் தலைமைகளுடன்தான் பேசவேண்டும்.

தென்னிலங்கை ஆட்சித் தலைமைகளின் அதிகாரத்துக்குள் ஈர்க்கப்பட்டவர்களுடனோ அல்லது அதிகாரத் தரப்பின் விருப்புக்கு இசைவாக ஆடுபவர்களுடனோ மட்டும் பேசி இணக்கத் தீர்வு காண்பது என்ற எத்தனத்தின் மூலம் இலங்கை அரசுத் தலைமை தான் விரும்பும் - அல்லது தனக்குப் பிடித்தமான - ஒரு திட்டத்தைத் தீர்வாகத் தமிழர்கள் மீது திணிக்க முயல்கிறது போலும்.

ஆனால் அதன் மூலம் இணக்கமான - உண்மையான - நீடித்து நிலைக்கக்கூடிய - சமாதானமும் அமைதியும் ஏற்பட்டு விடாது; மாறாக, அடக்குமுறையின் மீது கட்டப்படும் போலி அமைதி மட்டுமே அதன்மூலம் எட்டப்படக் கூடும்.

ஈழத் தமிழர்களின் ஏக - அதிகாரபூர்வ - பிரதிநிதிகள் தாமே என்பதைப் பிரகடனப்படுத்தி, முன்னிறுத்திச் செயற்பட்ட புலிகள் இயக்கத்தை, இராணுவ நடவடிக்கைகள் மூலம் அழித்தொழிப்பதில் வெற்றி கண்டுள்ளதாகக் கருதும் கொழும்பு, அதனால் ஏற்பட்டிருக்கும் பிரதிநிதித்துவ வெற்றிடத்துக்குத் தான் விரும்பும் - தனக்குப் பிடித்தமான - தரப்புக்களைக் கொண்டுவந்து நிறுத்தும் தந்திரோபாய எத்தனத்தில் இப்போது ஈடுபட முயல்கிறது. அதன் முதல் கட்டமாகவே தனக்குப் பிடித்தமில்லாத தரப்புக்களை ஓரம் கட்டி, ஒதுக்கி, இல்லாமல் செய்யும் தந்திரத்தை அது இப்படி ஆரம்பித்திருக்கின்றதோ என்ற சந்தேகம் எழுகின்றது.

புலிகளுக்கு எதிரான படை நடவடிக்கைகளுக்கும் -

அந்த இறுதிக் கட்டப் போரில் பல்லாயிரம் பொதுமக்கள் கொன்றொழிக்கப்பட்டமை தொடர்பாக சர்வதேசம் நடத்த எத்தனித்த விசாரணைகளை முட்டுக்கட்டை போட்டுத் தடுப்பதற்கும் -

இலங்கைக்கு நேரடியாக ஒத்துழைத்து, உதவி, பங்களித்த பாரதம் இப்போது தமிழர்கள் தரப்பின் சுயாதீனப் பிரதிநிதிகளைக் கொழும்பு தன் விருப்புக்கேற்ப களையெடுத்து நீக்கி, இசைவானவர்களை மட்டும் தேர்ந்தெடுத்து முன்நிறுத்தும் எத்தனத்துக்கு உடந்தையாகிப் போகும் வாய்ப்புகளும் உள்ளன.

அதற்காகத்தான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முந்திக்கொண்டு போய் சென்னையினதும் புதுடில்லியினதும் காலில் விழுந்து இறைஞ்ச முயல்கின்றதோ என்று அரசியல் அவதானிகள் சந்தேகம் எழுப்புகின்றனர்.

# தடை செய்யப்பட்ட ஆயுதங்களின் பாவனையாலேயே அதிக எண்ணிக்கையான தமிழ் மக்கள் கொல்லப்பட்டனர்

## 'அமெரிக்கா' கத்தோலிக்க வார சஞ்சிகை தெரிவிப்பு

வன்னிப் பகுதியில் சிறிலங்காப் படையினர் பயன்படுத்திய தடை செய்யப்பட்ட ஆயுதங்களாலேயே அதிக எண்ணிக்கையான தமிழ் மக்கள் கொல்லப்பட்டுள்ளனர் என 'அமெரிக்கா' என்ற தேசிய கத்தோலிக்க வார சஞ்சிகை தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

வன்னியில் இடம்பெற்ற இறுதிச் சமரில் சில நாள்களில் சிறிலங்கா படையினர் 25 ஆயிரம் தொடக்கம் 30 ஆயிரம் பொதுமக்களைப் படுகொலை செய்தும் காயப்படுத்தியும் உள்ளதாக உதவிப் பணியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

கொத்துக் குண்டுகள், இரசாயன ஆயுதங்கள் என்பவற்றின் செறிவான பிரயோகத்தினாலேயே அதிகளவிலான மக்கள் கொல்லப்பட்டதாக ஒரு தொண்டர் நிறுவனப் பணியாளர் தெரிவித்துள்ளார். இந்தவகை ஆயுதங் கள் அனைத்துலக நாடுகளில் தடை செய்யப்பட்ட ஆயுதங்களாகும்.

தற்போது மோதல் இடம்பெற்ற பகுதி சுடுகாடாகக் காட்சி தருகின்றது. அங்கு எதுவுமே இல்லை. கட்டடங்களோ, தேவாலயங்களோ அங்கு இல்லை. எல்லாம் அழிவடைந்த நிலையில் உள்ளதாகத் தொண்டு நிறுவனப் பணியாளர் மேலும் தெரிவித்துள்ளார். அவர் தனது பெயரைக் குறிப்பிடவில்லை.

ஏனெனில் பொதுமக்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட பல கொடுமையான சம்பவங்களை பார்வையிட்ட சாட்சி அவர்.

அவர் அனைத்துலக மனிதாபிமான நிறுவனம் ஒன்றில் பணிபுரிந்தவர். வன்னிப் பகுதியில் பத்து வருடங்களுக்கு மேல் பணியாற்றிய அவர், கடந்த மே மாதத்தின் நடுப்பகுதியிலேயே அங்கிருந்து வெளியேறியிருந்தார் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(50)

## கொழும்புத்துறையில் தேர் வெள்ளோட்டம்

யாழ்ப்பாணம்,ஜூன் 3

கொழும்புத்துறை மேற்கு ஸ்ரீவதரி பீட விநாயகர் ஆலயத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட சித்திரத் தேரின் வெள்ளோட்ட நிகழ்வு இன்று புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறும்.

இந்த நிகழ்வில் நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசார்ய சுவாமிகள், செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன் ஆகியோர் கலந்து கொள்வர்.

நிகழ்வில் தேரை வடிவமைத்த சிற்ப ஆசாரியார்களைக் கௌரவிக்கும் நிகழ்வும் நடைபெறும்.

(சிறப்பிதழ் 10 ஆம் பக்கத்தில்)

(201-224)

## வெஸ்ற்மின்ஸ்ரர் பல்கலைக்கழகத்தின் கிளை விரைவில் யாழ்ப்பாணத்தில்

யாழ்ப்பாணம், ஜூன் 3

ஐக்கிய ராச்சியத்தைச் சேர்ந்த புகழ் பெற்ற வெஸ்ற்மின்ஸ்ரர் பல்கலைக் கழகத்தின் பட்டப்படிப்புகள் பீடம் ஒன்றினை யாழ்ப்பாணத்தில் விரைவில் ஆரம்பிப்பதற்கு கொழும்பில் இயங்கும் பிரபல 'டபிள்ஜரி' நிறுவனம்(IIT) முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது.

இது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று இன்றுபுதன்கிழமை 'பிள்ளையார் இன்' விடுதியில் நடைபெறுகின்றது.

இலங்கையில் கணனி தொடர்பான அறிவைப் பாடசாலை முதல் பல்கலைக் கழகத் தரம் வரை உயர்த்துவதற்கு பல்வேறு வழிகளில் முயற்சிகளை மேற்கொள்ளும் இந்த நிறுவனம் கடந்த ஆறு ஆண்டுகளாக கொழும்பில் வெள்ளவத்தையில் ஐக்கிய ராச்சியத்தைச் சேர்ந்த 'வெஸ்ற்மின்ஸ்ரர்' பல்கலைக்கழகப் பாடவிதானத்திற்கேற்ப கணனிச் சிறப்புப் பட்டப்படிப்புகளுக்கான கற்கை நெறிகளை நடத்தி வருகின்றது.

மூன்று அல்லது நான்கு ஆண்டு காலத்தைக் கொண்ட இப் பட்டக் கற்கை நெறி உலக தரம் வாய்ந்த பட்ட நெறியாக மதிக்கப்படும் ஒன்றாகும்.

ஜி.சீ.ஈ உயர்தரப் பரீட்சையில் மூன்று பாடங்களில் சித்தியடைந்தவர்கள் எவரும் இப்பட்ட நெறியை ஆங்கில மொழி மூலம் பயில முடியும்.

கொழும்பு 'டபிள்ஜரி' நிறுவனப் பட்டக் கற்கைநெறி பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் அல்பிரட் பெரேரா தலைமையில் மூவர் அடங்கிய குழுவினர் ஆயத்தப் பணிகளை மேற்கொள்வதற்காக நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந் துள்ளனர். இன்று புதன்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு யாழ்ப்பாணத்தில் இந்நிறுவனத்தின் பணிகளை ஆரம்பிப்பதற்கான ஆலோசனைகளைப் பெறும் பொருட்டான கலந்துரையாடல் ஒன்று 'பிள்ளையார் இன்' விடுதியில் இடம்பெற ஏற்பாடாகியுள்ளது. இப் பணியில் யாழ்ப்பாண இணைப்பாளராக அந்த நிறுவனத் தின் கணனித் துறை கணனித்துறைப் பட்டதாரி மாணவரான சிவச்சந்திரன் பாரதி செயற்பட்டு வருகின்றார். (50)

# புலிகளுக்கு எதிரான யுத்தத்தை முன்னெடுக்க பிரித்தானியாவும் இலங்கைக்கு ஆயுதம் வழங்கியது

## பரபரப்புத் தகவல்களை வெளியிடுகிறது 'த ரைம்ஸ்'

லண்டன்,ஜூன் 03

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு எதிரான யுத்தத்தை முன்னெடுக்க பிரித்தானியா மற்றும் சில ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுள் இலங்கைக்கு ஆயுதங் களை விற்பனை செய்துள்ளதாக 'த ரைம்ஸ்' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

சுமார் 13.6 மில்லியன் ஸ்ரெலிங் பவுண்ட்ஸ் பெறுமதியான இயந்திரதுப் பாக்கிகள், இராணுவ வாகனங்கள் உள்ளிட்ட பல்வேறுபட்ட இராணுவ தளபாடங்களை பிரித்தானியா இலங்கைக்கு விற்பனை செய்துள்ளது.

ஸ்லோவாக்கியா 1.1 மில்லியன் ஸ்ரெலிங் பவுண்ட்ஸ் பெறுமதியான ஆயுதங்களையும், பல்கேரியா 1.75 ஸ்ரெலிங் பவுண்ட் பெறுமதியான ஆயுதங்களையும் விற்பனை செய்துள்ளன.

இந்த அனைத்து ஆயுதக் கொடுக்கல் வாங்கல்களும் பூர்த்தியடைந்துள்ளனவா என்பது குறித்து உறுதிப்படுத்த முடியாத நிலை காணப்படுவதாக குறித்த பத்திரிகை சுட்டிக் காட்டியுள்ளது.

இராணுவத் தளபாட விற்பனைக்கு அரசாங்கங்கள் அனுமதியளித்த போதிலும், இலங்கைக்கு அனுப்பி வைக்கப்பட்டனவா என்பது குறித்து சரியான தகவல்கள் கிடைக்கப்பெறவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. மோசமான மனித உரிமை நிலைமைகள் காணப்படும் நாடுகளுக்கோ அல்லது உள்ளக பிரச்சினைகள் காணப்படும் நாடுகளுக்கோ ஐரோப்பிய ஒன்றியம் ஆயுதங்களை விநியோகம் செய்வதில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

### இலங்கைக்கு தொழில்நுட்ப உதவிகளை வழங்கிய பாகிஸ்தான் வான்படை

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான யுத்தத்தை முன்னெடுக்க பாகிஸ்தான் வான் படையினர் வழங்கிய தொழில்நுட்பம் சார்ந்த உதவிகளிற்கு பாகிஸ்தானிற்கான இலங்கை தூதுவர் எயார் மார்ஷல் ஜயலத் வீரகெட்டி நன்றி தெரிவித்துள்ளார்.

இலங்கைத் தூதரகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் அவர் இதனை தெரிவித் துள்ளார். முக்கியமாக சீன எப் - 7 ஜெட், சி- 130 விமானங்களிற் கான தொழில் நுட்ப உதவிகளையும் பயிற்சிகளையும் வழங்கியமைக்காக அவர் இதன் போது நன்றி தெரிவித்துள்ளார். (50)

| நாளை | |
|---|---|
| வைகாசி 21 | 04.06.2009 |
| | வியாழக்கிழமை |
| திதி: | துவாதசி |
| | மு.இ. 09.34 வரை |
| நட்சத்திரம்: | சித்திரை |
| | மு.ப. 07.45 வரை |
| [illegible] | [illegible] |
| [illegible] | [illegible] |

# யாழ்-கொழும்பு இடையிலான வான் வழிப்பாதை மாற்றப்படும்

## விமான சேவைகள் அதிகாரசபை அறிவிப்பு

கொழும்பு, ஜூன் 3

யாழ்ப்பாணத்திற்கும் கொழும்புக்கும் இடையிலான வான் வழிப் பாதையில் மாற்றங்களை ஏற்படுத்த திட்டமிட்டுள்ளதாக சிவில் விமான சேவைகள் அதிகாரசபை அறிவித்துள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசாங்கப்படையினருக்கும் இதுவரை காலமும் இடம்பெற்று வந்த யுத்தம் காரணமாக பிரத்தியேக வான் வழிப் பாதை பயன்படுத்தப்பட்டது.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களை தவிர்த்து இந்த விமானங்கள் போக்குவரத்தில் [illegible]ன.

எனினும், தற்போது யுத்தம் முடிவடைந்துள்ளதனால் குறுகிய பாதைகளைப் பயன்படுத்தி விமானங்கள் போக்குவரத்தில் ஈடுபட முடியும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இவ்வாறு வான் வழிப் பாதையில் ஏற்படுத்தப்படும் மாற்றங்களின் ஊடாக நேரத்தையும், பணத்தையும் மீதப்படுத்தலாம் என சிவில் விமான சேவை அதிகாரசபையின் தலைவர் லால் லியனராச்சி தெரிவித்துள்ளார்.

எக்ஸ்போ ஏவியேசன், தயா ஏவியேசன் மற்றும் டெக்கான் ஏவியேசன் ஆகிய மூன்று விமான சேவை நிறுவனங்களே தற்போது யாழ்ப்பாணத்திற்கும் கொழும்பிற்கும் இடையிலான விமான போக்கு வரத்து சேவைகளை மேற்கொண்டு வருகின்றன.

(50)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 18 * 02 * 1947



விண்ணில் 15 * 05 * 2008

திதி :ஏகாதசி

### திருமதி நகுலேஸ்வரி கிருஷ்ணன்

நெஞ்சம் குமுறுகின்றோம் நெடிய நின் பிரிவினாலே
தஞ்சமின்றி வாழ்கின்றோம் தவியாய்த் தவிக்கின்றோம்
அஞ்சேலென்று நமக்காறுதல் கூற இங்கு யாருமில்லை
நெஞ்சத்தால் எண்ணுகின்றோம் ஓராண்டு நினைவின்று

இல.28, துரைராஜா வீதி,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

என்றும் நினைவுடன்:
குடும்பத்தினர்.

## கணக்குப் பதிவாளர் தேவை

பிரபல கட்டடப் பொருட்கள் விற்பனை நிலையத்திற்கு கணக்குப் பதிவாளர் தேவை. வயது 25 இற்கும் 40 இற்கும் இடையில், உயர்தரத்தில் வர்த்தகம் படித்திருத்தல் வேண்டும்.

தொடர்பு:- 55,57, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

## ஊழியர் தேவை

பிரபல நிறுவனம் ஒன்றுக்கு கொழும்பில் தங்கிநின்று அலுவல்கள் பார்ப்பதற்கு ஆள்தேவை. வயது 30 இற்கும் 45 இற்கும் இடையில், சிங்களம் மற்றும் வாகனம் ஓட தெரிந்திருத்தல் வேண்டும்.

தொடர்பு:- 55,57, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

## துயர் பகிர்கின்றோம்



யாழ்.பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி
பேராசிரியர் சோ.கிருஷ்ணராஜா

அவர்களின் மறைவையொட்டிப் பெருந்துயர் அடைகின்றோம். அன்னாரின் இழப்பு நுண்கலைக் கழகத்திற்குப் பேரிழப்பாகும். இவரது பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யாழ்.பல்கலைக்கழகம். இராமநாதன் நுண்கலைக்கழக இசைத்துறையினர்.

(சி/556814)

## கண்ணீர் அஞ்சலி



யாழ்.பல்கலைக்கழக கலைப்பீடாதிபதியும் மெய்யியல் துறை முன்னாள் தலைவருமான
பேராசிரியர் சோ.கிருஷ்ணராஜா

அவர்களின் மறைவினையிட்டு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்வதுடன் அன்னாரின் பிரிவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

யாழ்.பல்கலைக்கழகம். (சி/556814) ஊழியர் சங்கம்.

## வடமாகாண கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவில் ஒழுக்காற்று விசாரணை உத்தியோகத்தர்களைச் சேர்ப்பதற்கான விண்ணப்பம்

கூட்டுறவு ஊழியர் நடைமுறை விதிக்கோவை அத்தியாயம் 5 இன் படி இழைக்கப்படும் குற்றங்கள் தொடர்பாக விசாரணை செய்வதற்காக கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவினால் ஒழுக்காற்று விசாரணை உத்தியோகத்தர்களை தெரிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் அரச சேவையிலுள்ள/அரச சேவையிலிருந்து இளைப்பாறிய தகுதி வாய்ந்த உத்தியோகத்தர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இதற்கான தகைமைகள் பின்வருமாறு:

01. 01.04.2009 இல் 70 வயதிற்கு குறைந்த அரச சேவையிலிருந்து இளைப்பாறிய உத்தியோகத்தர். (இலங்கை நிர்வாக சேவை/கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்/முகாமைத்துவ உதவியாளர் அதி சிறப்பு சேவை)

அல்லது

02. 01.04.2009 இல் 10 வருடங்கள் பூர்த்தி செய்த சேவையிலுள்ள பதவி நிலை உத்தியோகத்தர்கள்.

அத்துடன்

03. சேவைக் காலத்தில் ஏதாவது ஒரு குற்றத்துக்கு தண்டனை விதிக்கப்பெறாதவராக இருத்தல் வேண்டும்.

தெரிவு செய்யப்படும் விசாரணை உத்தியோகத்தர்களுக்கு விசாரணை மேற்கொள்ளப்படும் சந்தர்ப்பத்தில் கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு சுற்றுநிருபத்துக்கு இணங்க கொடுப்பனவுகள் செய்யப்படும்.

குறித்த மாதிரி படிவத்திற்கிணங்க தயாரிக்கப்படும் விண்ணப்பங்களை 30.06.2009 க்கு முன்பாக ''செயலாளர், கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு, வடமாகாணம், கன்னியா வீதி, வரோதய நகர், திருகோணமலை'' என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

அனுப்பப்படும் கடித உறையின் இடது பக்க மூலையில் ''ஒழுக்காற்று விசாரணை உத்தியோகத்தர்களை சேர்ப்பதற்கான விண்ணப்பம்'' எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

பொ.வாகீசன்,
செயலாளர்,
கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு வ.மா.
கன்னியா வீதி,
வரோதய நகர்,
திருகோணமலை.

### வடமாகாண கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவில் ஒழுக்காற்று விசாரணை உத்தியோகத்தர்களைச் சேர்ப்பதற்கான விண்ணப்பப் பத்திரம்

01. முழுப் பெயர் :....................
02. தற்போதைய முகவரி :....................
03. தொலைபேசி இலக்கம் :....................
04. தேசிய அடையாள அட்டை இலக்கம் :....................
05. 5.1 சேவையும் தரமும் :....................
5.2. அரச சேவையில் இறுதியாக வகித்த/வகிக்கும் பதவி :....................
5.3. திணைக்களம் :....................
5.4. பதவி நிலை உத்தியோகத்தராக சேவையாற்றிய/சேவையாற்றி வரும் காலம் :....................
06. ஒழுக்காற்று விசாரணை நடத்த முடியுமான மொழி: தமிழ்/சிங்களம்/ஆங்கிலம்
07. ஒழுக்காற்று விசாரணை நடத்த முடியுமான மாவட்டம்: யாழ்ப்பாணம்/வவுனியா/மன்னார்/கிளிநொச்சி/முல்லைத்தீவு
08. ஒழுக்காற்று விசாரணை நடத்துவதில் உள்ள அனுபவம் :....................
09. சேவையாற்றும் காலத்தில் ஏதேனும் ஒழுக்காற்றுத் தண்டனைகள் விதிக்கப்பட்டுள்ளதா? ஆம்/இல்லை

மேற்படி விவரங்கள் சரியானவை என சான்றுப்படுத்துகின்றேன்.

நான் ஒழுக்காற்று விசாரணை உத்தியோகத்தர் ஒருவராக தெரிவு செய்யப்பட்டால் தற்போது நடைமுறையில் இருக்கும் கூட்டுறவு ஊழியர் நடைமுறை விதிக்கோவை மற்றும் கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு சுற்றுநிருபம் என்பவற்றில் உள்ள நிபந்தனைகளுக்கு அமைவாக செயலாற்றுவதற்கும் ஒழுக்காற்று விசாரணை முடிவடைந்து மூன்று வார காலத்தினுள் எனது அறிக்கையை ஒழுக்காற்று விசாரணையுடன் தொடர்பான சகல ஆவணங்களுடன் உரிய ஒழுக்காற்று அதிகாரியிடம் ஒப்படைப்பேன் என்றும் இத்தால் உறுதியளிக்கிறேன்.

திகதி:............ ....................

திணைக்களத் தலைவரின் விதப்புரை விண்ணப்பதாரரின் கையொப்பம்

திரு/திருமதி/செல்வி.................... அவர்களால் முன் வைக்கப்பட்டுள்ள விண்ணப்பப் படிவத்தில் மேற்படி விவரங்கள் சரியானவை எனவும் அவர் பதவிநிலை உத்தியோகத்தராக 10 வருட சேவைக்காலத்தை பூர்த்திசெய்துள்ளார்/செய்யவில்லை என உறுதிப்படுத்துவதுடன் இவரது விண்ணப்பத்தை சிபார்சு செய்து முன்வைக்கிறேன்

திகதி.................... ....................

திணைக்களத் தலைவரின் கையொப்பம்

## இராமாவிலில் கல்விச்செயற்பாடு வெள்ளி ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூன். 3

கொடிகாமம் இராமாவில் நலன்புரி நிலைய மாணவர்களுக்கான கற்கை நெறிகள் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை ஆரம்பமாகவுள்ளன.

நலன்புரி நிலைய வளாகத்தில் யுனிசெப் நிறுவனத்தினால் அமைக்கப்பட்ட வகுப்பறைத் தொகுதி திறக்கப்படவுள்ளது.

இந்த நிகழ்வில் யாழ்.அரச அதிபர் உட்பட பலர் கலந்து கொள்ளவுள்ளனர்.

(1-207)

## வளர்ப்பு நாய்களுக்கு கருத்தடைச் சிகிச்சை

யாழ்ப்பாணம், ஜூன். 3

பருத்தித்துறை நகரசபை எல்லைக்குட்பட்ட வளர்ப்பு ஆண், பெண் நாய்களுக்கு கருத்தடை சத்திரசிகிச்சை செய்ய விரும்பும் பொதுமக்களை நேற்று முதல் ஒரு வார காலத்துக்குள் மேற்படி நகரசபையில் பதிவுகளை மேற்கொள்ளுமாறு பருத்தித்துறை நகரசபைச் செயலாளர் அறிவித்துள்ளார்.

(201)


**படிவம்**

இலங்கைத் தொழில் நுட்பக் கல்லூரி, இலங்கை சமுத்திரவியல் கல்லூரி அனுமதிக்கான விண்ணப்பப்படிவங்கள் விற்பனைக்கு உண்டு.

Bharathy Pathippakam,
130, K. K. S. Road, Jaffna.


## துயர் பகிர்கின்றோம்



நல்லூர் லயன்ஸ் கழக உறுப்பினரும்
Marsha systems நிறுவன உரிமையாளருமான லயன் கி.மாறன் அவர்களின் அன்புத் தந்தையார்
பேராசிரியர்

### சோ.கிருஷ்ணராஜா

(கலைப்பீடாதிபதி, யாழ்.பல்கலைக்கழகம்)

அவர்கள் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினர் துயரில் நாமும் பங்கு கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நல்லூர் லயன்ஸ் கழக உறுப்பினர்கள்.

## மரண அறிவித்தல்

### அருணாசலம் அன்னம்மா



அளவெட்டி மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அருணாசலம் அன்னம்மா நேற்று (02.06.2009) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் அருணாசலத்தின் (ஐயா அண்ணை) அன்பு மனைவியும் சியாமளா (பல்வைத்தியர் - கொழும்பு), சியாமதி (ஜேர்மனி), மனோகரன் (சின்னண்ணை - நீர்வேலி), சிவாநிதி ஆகியோரின் அன்புத் தாயும் செல்வரட்ணம் (பல்வைத்தியர் - கொழும்பு), சிவபாக்கியராஜா (ஜேர்மனி), ஜெயராணி (உப தபாலதிபர் - நீர்வேலி), ஜெயச்சந்திரன் (செலான் வங்கி, யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்பு மாமியும் கவிஷா, உதாரன், சுஜானி, சுஜானன், மதுஜா, பார்கவி, பிரணவன், அனுஜன், சாருஜன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.06.2009) புதன்கிழமை மு.ப. 10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக தம்மளை இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
இ.அருணாசலம்
(ஐயா அண்ணை - கணவர்).
T.P.: 077 5047348

அளவெட்டி மேற்கு,
அளவெட்டி. (55863)


COMPUTER EXPRESS
Institute of Information Technology
No 167, Kasthuriyar Road, Jaffna. 0212228250
80% off

மாபெரும் புலமைப்பரிசில்திட்டம் - 2009

| | | |
|---|---|---|
| Diploma in Microsoft Office 3 Months 2500/= | Diploma in Desktop Publishing 15090/= 4 Months 3000/= | Diploma in Web page Designing 15750/= 3 Months 3150/= |
| Diploma in Graphic Publishing 15750/= 3 Months 3150/= | Diploma in Hardware Engineering 15000/= 3 Months 3000/= | Diploma in AutoCAD 15000/= 3 Months 3000/= |
| Accounting Package (Quick Book) 15750/= 3 Months 3150/= | Diploma in Computer Science 15750/= 4 Months 3150/= | Honors Diploma in Computer Science 18000/= 4 Months 3600/= |

50% Off

ADVANCE COURSES
Diploma in Video Editing 4250/=
Diploma in Multimedia 3750/=

Computer Express ஆசிரியர் குழாமினால் வகுப்புக்கள் நடாத்தப்படும், சர்வதேச தரம்வாய்ந்த சான்றிதழ்கள், வரையறையற்ற செய்முறைப்பயிற்சி

வகுப்புக்கள் ஆரம்பம்
Batch
I : 04/06/2009 9 AM
II : 05/06/2009 9 AM
III: 06/06/2009 9 AM/2PM
IV : 07/06/2009 9 AM/2PM
V : 09/06/2009 9 AM


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விதை நடுகைப் பொருள்கள் விற்பனையாளரை பதிவுகள் மேற்கொள்ளுமாறு அறிவுறுத்து

யாழ்ப்பாணம், ஜூன் 3

யாழ். மாவட்டத்தில் விதை நடுகைப் பொருள்களின் விற்பனையில் ஈடுபட்டுள்ள சகல அரச, தனியார் நிறுவனங்களை விதை அத்தாட்சிப்படுத்தும் சேவைப் பிரிவில் பதிவு செய்து கொள்ள வேண்டும்.

விவசாயத் திணைக்களத்தின் விவசாய ஆராய்ச்சித் திணைக்களத்தில் இயங்கும் விதை அத்தாட்சிப்படுத்தும் மேற்படி சேவைப்பிரிவில் பதிவு செய்வதற்கான விண்ணப்பப் படிவங்களைப் பெற்று பதிவு செய்து கொள்ளுமாறு யாழ். அரச அதிபர் தெரிவித்துள்ளார்.

யாழ். செயலகத்தில் அரச அதிபர் கே.கணேஷ் தலைமையில் நடைபெற்ற மாவட்ட விவசாயக் குழுக்கூட்டத்தில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. இதில் மேலும் தெரிவித்தமை வருமாறு:

பதிவு செய்து கொள்ளாமல் விற்பனையில் ஈடுபடுவது 2003 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க விதைச் சட்டத்தின் பிரகாரம் தண்டனைக்குரிய குற்றமாகும்.

விற்பனைக்காக வைக்கப்படும் விதைகள் பொருத்தமான பொதிகளில் பொதி செய்யப் படவேண்டும்.

பொதி செய்யப்பட்ட ஒவ்வொன்றிலும் விவசாயத் திணைக்களத்தால் அத்தாட்சிப் படுத்தப்பட்ட விவரங்கள் அல்லதுபயன், இனம்,முளைதிறன் வீதம்,பொதியின் நிறை,பொதியிடப்பட்ட திகதி,உற்பத்தியாளர் அல்லது விற்பனையாளர் பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம் என்பன அடங்கியிருப்பதை விற்பனையாளர்கள் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

விற்பனைக்காக விதை உற்பத்தியில் ஈடுபடும் விவசாயிகள் யாழ். மாவட்டத்தில் இயங்கும் குடாநாட்டு விதை உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்தில் அங்கத்தவர்களாகச் சேர்ந்து விவசாயத் திணைக்களத்தால் வழங்கப்படும் அடிப்படை விதைகளை மட்டும் பயன்படுத்திய விதை உற்பத்தியில் ஈடுபடுதல் வேண்டும்.

யாழ். மாவட்டத்தில் பாதுகாப்பு வலயம் காரணமாக நெற்பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படாத நிலங்களை இவ்வருடம் நெற்பயிர்ச் செய்கையில் ஈடுபடுவதற்கான வேண்டுகோள்களை சம்பந்தப்பட்ட விவசாயிகள், கமக்காரர் அமைப்புகள் ஊடாக பிரதேச செயலகங்களுக்கு விண்ணப்பிக்குமாறு கோரப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் ஏற்பட்ட அசாதாரண காலநிலை காரணமாக பயிர்களுக்கு அதிக சேதம் ஏற்பட்டதால் அதனை ஈடு செய்யும் பொருட்டு நெற்பயிர்ச் செய்கையில் ஈடுபடுபவர்கள் எதிர்காலத்தில் நெற்பயிர்களுக்கு கமநல காப்புறுதி செய்து கொள்ளவேண்டும் எனத் தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (203- 201)

# கோப்பாய் கோட்ட மாணவர்களின் புகைப்பொருள் எதிர்ப்பு தின பரீட்சை முடிவுகள்

கோப்பாய், ஜூன் 3

வட பிரதேச நல்லொழுக்க சம்மேளனத்தினரால் சர்வதேச புகைப்பொருள் எதிர்ப்புத் தினத்தை முன்னிட்டு கோப்பாய் கோட்ட பாடசாலைகளுக்கிடையே புகைப்பொருள் விழிப்புணர்வுப் பரீட்சை நடத்தப்பட்டது.

இப்பரீட்சையில் 250 இற்கு மேற்பட்ட சாதாரண தர மாணவர்கள் தோற்றியிருந்தனர்.

இவர்களில் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்களும் ஆறுதல் பரிசு பெறும் 11 பேரின் விவரங்களும் வருமாறு:-

நீ.சுகன்ஜா (ஊரெழு கணேச வித்தியாலயம்), பா.தபோசிகா (ஊரெழு கணேச வித்தியாலயம்), வி.யசினா (ஊரெழு கணேச வித்தியாலயம்).

ஆறுதல் பரிசு பெறும் 11 பேர் விவரம்:

ஆ.சுயேந்தினி (அத்தியார் இந்துக் கல்லூரி, நீர்வேலி), கே.யோசிலிம் நிவேதா (அச்சுவேலி, புனித திரேசா மகளிர் கல்லூரி), மே.சருஜன் (இடைக்காடு, மகா வித் தியாலயம்), ப.சர்மிலா (ஆவரங்கால் நடராஜா இராமலிங்க வித்தியாலயம்), ச.ஜனார்த்தனன் (அச்சுவேலி மத்திய கல்லூரி) ர.ரவிசங்கர் (கோப்பாய் சரவணபவானந்தா வித்தியாலயம்), த.சிந்துஜா (இடைக்காடு ம.வி), ம.தனுசன் (ஊரெழு கணேச வித்தியாலயம்), த.தனுசியா (புத்தூர், வாதரவத்தை விக்னேஸ்வரா வித்தியாலயம்), சி. அனுசீலன் (இடைக்காடு ம.வி), கு.றொபின்சியா (அச்சுவேலி புனித திரேசா மகளிர் கல்லூரி).

(203-72)

# மாணவர்களின் கல்விச் செயற்பாடுகளுக்கு இடையூறாக இருப்பவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்

## வடமராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் வேண்டுகோள்

கரவெட்டி, ஜூன் 3

மாணவர்களின் கல்விச் செயற்பாடுகளுக்குத் தடைக்கல்லாக இருப்பவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.



இன்றைய மாணவர்கள் ஆங்கில அறிவில் மேம்பாடடையும் போதுதான் ஒரு மாணவன் முழுமையான அறிவைப் பூரணப்படுத்த முடியும்.

வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

பருத்தித்துறை மெதடிஸ்தபெண்கள் உயர்தர பாடசாலையில் அதன் அதிபர் திருமதி செல்வமலர் சுந்தரேசன் தலைமையில் நடைபெற்ற ஆங்கிலமொழி மூலமான ஜி.சீ.ஈ. உயர்தர விஞ்ஞான விழாவினை ஆரம்பித்து வைத்தபோது மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் பேசுகையில்:

இன்று ஆங்கிலக் கல்வியின் தரம் வீழ்ச்சியடைந்தே காணப்படுகின்றது.

ஆங்கிலக் கல்வியை மேம்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியது காலத்தின் தேவையாகும்.

இதற்கு ஆங்கில ஆசிரியர் பற்றாக்குறையும் சவாலாக இருப்பதை ஏற்றுக் கொள்ள வேண்டும்.

எவ்வித இன்னல்கள் நேர்ந்தாலும் எதிர்நீச்சல் போட்டு நாம் ஆங்கிலக் கல்வியை உயர்வடையச் செய்ய வேண்டும்.

இக்கல்வியின் மூலமே நாகரிகம் மிக்க உயர்வான சமுதாயத்தை உருவாக்க முடியும்.

இன்றைய மாணவர்கள் பல்வேறு இன்னல்களுக்கு முகங்கொடுத்தே கல்வியைப் பெற்று வருகின்றனர்.

மாணவர்கள் ஒழுக்கம் மிக்கவர்களாக இருக்கும்போதுதான் எதிர்பார்க்கும் இலட்சியத்தில் வெற்றியடைய முடியும்.

இன்றைய கலாச்சார மாற்றங்கள் மாணவர்களையும் கடுமையாகப் பாதிக்கின் றன.

மாணவர்களின் கல்வியைச் சீரழிப்பதற்குக்கூட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இந்த நடவடிக்கைகளுக்கு இடமளிக்கக்கூடாது.

மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளுக்கு இடர்கல்லாக இருக்கும் எவருக்கும் எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

இதற்குக் கல்விச் சமூகம் பூரண ஒத்துழைப்பு வழங்க வேண்டும் - என்றார்.

(203-[illegible])

## கச்சேரி-நல்லூர் வீதியில் அமைந்துள்ள

# சைக்கிள் பாதுகாப்பு நிலையத்தை உரிய இடத்தில் இயங்க வைக்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 3

கச்சேரி-நல்லூர் வீதியில், 11/3, இலக்க ஒழுங்கையில் அமைக்கப்பட்டுள்ள சைக்கிள் பாதுகாப்பு நிலையத்தை அகற்றி அதற்கென ஒதுக்கப்பட்ட இடத்தில் இயங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு யாழ்.மாநகர சபையிடம் யாழ்.மாவட்ட தனியார் பஸ் உரிமையாளர் சங்கங்களின் தலைமைச் செயலகம் கடிதம்மூலம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இது தொடர்பாக மாநகர ஆணையாளரிடம் அனுப்பி வைக்கப்பட்டுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

கச்சேரி-நல்லூர் வீதியில் 11/3, இலக்க ஒழுங்கையில் எமது சங்கத்தின் தலைமைச் செயலகம் அமைந்துள்ளது. கடந்த சில மாதங்களாகத் தங்களால் அனுமதிக்கப்பட்ட சைக்கிள் பாதுகாப்பு நிலையம் அதற்கென ஒதுக்கப்பட்ட இடத்தினைத் தவிர்த்து எமது காரியாலயத்தின் முன்றலில் உள்ள ஒழுங்கையின் இரு மருங்கிலும் சைக்கிள், மோட்டார் சைக்கிள் நிறுத்தி வைக்கப்படுகிறது.

இதனால் எமது அலுவலகத்திற்கு வருவோர், பணியாற்றுவோர் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

மக்களின் பாவனைக்குரிய பாதையில் இப்படியான செயற்பாடுகள் இடம்பெறுவதும் அதற்கு மாநகர ஆட்சி மன்றத்தின் பெயரைப் பாவித்தும் மிகுந்த வேதனையை அளிக்கின்றது.

இதனைத் தவிர்க்க ஆவண செய்து தருமாறு தங்களைக் கேட்டுக் கொள்கின்றோம் என்று அதில் உள்ளது.

குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்

# வீதிக்குப் போடப்பட்ட மண் திருடப்பட்டு வருகிறது

யாழ்ப்பாணம், ஜூன் 3

மட்டுவில், சந்திரபுரம்-கைதடி நவபுரம் இணைப்பு வீதியாகப் போடப்பட்ட மண் இரவோடிரவாக வாகனங்களில் ஏற்றிச் செல்லப்படுவதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

அப்பகுதியில் கடல் நீர் விளை நிலங்களுக்குள் வராமல் தடுப்பதற்கு போடப்பட்ட அணை மண்ணும் ஏற்றிச் செல்லப்படுவதாகவும் இதனால் மழை காலங்களில் உவர் நீர் விளை நிலங்களுக்குள் வரும் அபாயம் உள்ளதாகவும் அப்பகுதி மக்கள் தெரிவித்தனர். (203-207)

# விஞ்ஞான அறிவையும், ஆற்றலையும் விருத்திசெய்ய பாடசாலை மாணவர், ஆசிரியரிடையே போட்டிகள்

கோப்பாய், ஜூன் 3

அடிப்படைக் கற்கைகளுக்கான நிறுவனம் பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்களுக்கு விஞ்ஞான அறிவையும் ஆவலையும் விருத்தி செய்யும் வகையில் நாடளாவிய ரீதியில் போட்டிகளை நடத்தவுள்ளது.

ஆசிரியர்களுக்கான போட்டியில் காலம், ஒளித்தொகுப்பு, விசை, சுவாசித்தல், மனிதத் தொகுதிகள், மின்சாரம், நிலமின்னியல், அணு/ மூலக்கூறு, மூலக்கூற்றுச் சேர்க்கை, ஆவர்த்தன அட்டவணை, இரசாயனத் தாக்கம், பதார்த்தங்களின் நிலை போன்ற தலைப்புகளில் இருந்து ஐந்தைத் தெரிவு செய்து உரைநடைக் கவிதையாகவோ, பாடலாகவோ, கவிதையாகவோ நடையில் ஆக்கங்களை அனுப்பிவைக்க முடியும்.

மாணவர்களுக்கான போட்டியில் முதற்பிரிவில் தரம் 7, 8, 9 வகுப்புக்களை உள்ளடக்கியதாக ஆக்கங்கள் கட்டுரை, கதை, உரையாடல், நாடகம், கேலிச்சித்திரம், சுவரொட்டி ஆகியனவாக அமையும்.

இரண்டாம் பிரிவில் தரம் 10, 11 மாணவர்கள் தமது ஆக்கங்களை பிரிவு 1 இன் அதே வடிவங்களில் அனுப்பி வைக்க முடியும்.

ஆக்கங்களைப் பாடசாலை அதிபரின் உறுதிப்படுத்தலுடன் இணைப்பதிகாரி, விஞ்ஞான செயற்றிட்டப் பிரிவு, அடிப்படை கற்கைகளுக்கான நிறுவனம், ஹந்தான வீதி, கண்டி என்னும் முகவரிக்கு எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைத்தல் வேண்டும். (203-72)

# நலன்புரி நிலைய மக்களுக்கு சட்டத்தரணிகள் உதவி

வடமராட்சி, ஜூன் 3

வன்னியிலிருந்து இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மக்களுக்கு பருத்தித்துறை சட்டத்தரணிகள் சங்கம் உதவிகளை வழங்கவுள்ளது.

அத்தியாவசிய உணவுப் பொருள்கள், மருந்துப் பொருள்கள் என்பவற்றை அந்தந்த நிலையங்களுக்கு எடுத்துச் சென்று வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக பருத்தித்துறை சட்டத்தரணிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

(203-236)



வன்னியிலிருந்து இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள எமது உறவுகளுக்கென இந்துசமய அமைப்புக்கள் ஒன்றியத் தலைவர் நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரபரமாச்சார்ய சுவாமிகளிடம் நயினை ஸ்ரீ நாகபூசணி அம்பாள் ஆலய அறங்காவலர் சபையினர் காசோலை, பட்டுப்புடவைகள் கொண்ட பொதிகளை கையளிப்பதை முதலாவது , இரண்டாவது படங்களில் காணலாம்.

கொக்குவில் நந்தாவில் அம்மன் ஆலயம், நீர்வேலி ஸ்ரீ கணே[illegible] நிதியுதவி வழங்கப்படுவதை மூன்றாவது, நான்காவது படங்களில் காணலாம். (படங்கள்:லக்ஸ்மன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடமராட்சி மாணவர்களுக்கு தொழில்நுட்பப் பயிற்சி

வடக்கில் வசந்தம் 180 நாள் விசேட தொழில்நுட்ப பயிற்சித் திட்டத்தின் கீழ் யாழ்ப்பாணத் தொழில்நுட்பக் கல்லூரியில் 5 ஆயிரம் மாணவர்களுக்கு பயிற்சி வழங்கும் திட்டத்தின் கீழ் வடமராட்சி மாணவர்களின் நலன்கருதி விசேட பயிற்சி வகுப்புகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

மேற்படி பயிற்சி வகுப்புகள் யாழ்.தொழில்நுட்பக் கல்லூரி, வடமராட்சி சுருக்கெழுத்துக் கழகம் ஆகியவற்றின் ஏற்பாட்டில் வதிரி, கரவெட்டி ஆகிய இடங்களில் இடம்பெறவுள்ளன. இதற்கான நேர்முகப் பரீட்சைகள் எதிர்வரும் சனி, ஞாயிறு ஆகிய தினங்களில் காலை 9 மணிக்கு வடமராட்சி சுருக்கெழுத்துக் கழகத்தில் நடைபெறும். அத்துடன் வகுப்புகளுக்கான அனுமதியும் உடன் வழங்கப்படவுள்ளதாக யாழ். தொழில் நுட்பக் கல்லூரி அதிபர் கலாநிதி ந.யோகராஜன் அறிவித்துள்ளார்.

(201)

## வாண்மை விருத்தி செயலமர்வு

யாழ்ப்பாணம், ஜூன் 3

தீவக கல்வி வலய ஆரம்பக்கல்வி ஆசிரியர்களுக்கு 'செயலட்டைப் பிரயோகம்' தொடர்பான வாண்மை விருத்திச் செயலமர்வு நாளையும் மறுதினமும் தீவக வலய ஆசிரியர் நிலையத்தில் நடைபெறும் என தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் ஜி.வி.இராதகிருஷ்ணன் அறிவித்துள்ளார்.

(201)


AR APPURAJEN CABS



உள்ளூர் VAN சேவை

1.மொத்த ஓட்டம்<=60 Km இற்கு உள்1Km = ரூபா 30.00+day charge ரூபா 300.000

2.மொத்த ஓட்டம் >=60 Km இற்கு மேல்1Km = ரூ.30

உடன் அழையுங்கள்

T.P: 021 222 6659, 077 3114803



திருமண வாழ்த்து

03.06.2009

'அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை பண்பும் பயனும் அது'

இன்று மணக்கோலம் பூணும்



கோப்பாய் திரு.புவனேந்திரன் தம்பதியரின் புதல்வன் செல்வன் நிதர்ஷன்

கோண்டாவில் Dr.குகதாசன் தம்பதியரின் புதல்வி செல்வி லிஷாயினி

நீவிர்,
இல்லறமாம் நல்லறத்தில் இணைந்தே மகிழ்ந்திட
இனிய நல்லேற்றங்கள் நிறைவாய்ப் பெற்றிட
பதினாறும் அடைந்தே பாங்காய் வாழ்ந்திட
பல்லாண்டு பண்போடும் புகழோடும் விளங்கிட

கணனியில், பொறியியலும் விலங்கினில் மருத்துவமும்
கருத்தொருமித்தே கனிவாய் இழைந்திட
மங்கலம் நிறை மனை மாட்சியில்
மாண்புடன் உறவுகள் அன்புடன் பேணிட

இன்னா செய்தார்க்கும் இனியன செய்வதே
எம்மவர் தர்மப்பண்பாய் தேர்ந்திட
ஆல்போல் தழைத்து அறுகுபோல் வேரூன்றி
அன்புப் பிணைப்பினில் ஒரு மனமாகி

செம்புலம் சேர்ந்த வான் நீர் போல
செம்மையாய்க் கலந்தே ஒருயிராகி
வள்ளுவன் வாசுகி வாழ்ந்த பெருவாழ்வை
வண்ணமாய்ப் பெற்று வளமுடன் வாழ்க!

எமது மனமார்ந்த நல்வாழ்த்துக்கள்!

'இரஞ்சித வாசா',
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.

குலசிங்கம் குடும்பம்.
(ஓய்வுநிலை அதிபர்).

(85786)



அராலி ஆவரம்பிட்டி
ஸ்ரீ முத்துமாரி அம்பாள்



6ஆம் நாள் கப்பல் திருவிழா இன்று

வழுக்கை ஆறு சங்கமிக்கும் அராலிக் கடல் மத்தியில்
சண்ட பாரதி வல்லி கப்பலில்........

ஆடிவரும் தாயே - உன்னை
தேடிவரும் பக்தர்களுக்கு - நீ
நாடி வந்து அருள் கொடு தாயே!

அனுசரணை:
சிறி நதியா நகை மாளிகை &
டிஜிட்டல் கலர் லாப் வீடியோ & ஸ்ருடியோ
லக்ஸன் பிளாசா கட்டடம்
108A, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

(சி/558810)


# பனை அபிவிருத்திச் சபை
## மேலதிக தோட்டப் பயிர் அபிவிருத்தி அமைச்சு
## பொது முகாமையாளர் பதவிக்கான வெற்றிடம்

01. மேலதிக பெருந்தோட்டப் பயிர் அமைச்சின் கீழ் இயங்கும் பனை அபிவிருத்திச் சபையின் மேற்குறிப்பிடப்பட்ட பதவிக்கான வெற்றிடத்தை நிரப்புவதற்குத் தகுதி வாய்ந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

02. **பதவி விவரம்**
பொதுமுகாமையாளர், தலைவர், பணிப்பாளர் சபையின் வழிகாட்டலில் பனை அபிவிருத்திச் சபையின் அபிவிருத்திச் செயற்பாடுகளை, நிதி நிர்வாக செயற்பாடுகள் அனைத்திற்கும் பொறுப்பானவராக இருப்பார்.

03. **கடமைகளும் பொறுப்புகளும்**
பனை அபிவிருத்திச் சபையின் அனைத்து நிர்வாக, நிதிச்செயற்பாடுகள் முகாமைத்துவம் செய்தல், பனங் கைத்தொழில் துறையை அபிவிருத்தி செய்வதற்கும் முன்னேற்றுவதற்குமான திட்டங்களை வகுத்தலும், நெறிப்படுத்தலும், கொள்கை விடயங்களில் பணிப்பாளர் சபைக்கு ஆலோசனை வழங்கல், சம்பந்தப்பட்ட நிறுவனங்களுடன் செயற்பாடுகளை ஒருங்கிணைத்தலும் அதில் ஈடுபடுதலும்.

04. **வயது எல்லை**
50 வயதுக்கு மேற்படாதவராக இருக்க வேண்டும். வயதெல்லையானது அரச நிறுவனங்களில் சேவையில் உள்ளவர்களுக்குப் பொருந்தாது.

05. **சம்பளக் கட்டமைப்பு**
I சம்பளக் குறியீடு
HM 1-3-2006
II மாதாந்த சம்பள அளவுத் திட்டம்:
ரூபா 41,745-15X1,100-58,245

06. **கல்வித் தகைமைகளும் அனுபவமும்**
அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் விவசாயம் / விஞ்ஞானம் / முகாமைத்துவம் / வர்த்தகம் / கலை (பொருளாதாரத்தில் விசேடத்துவம்) இல் இளமாணி, முதுமாணி பட்டப்படிப்புடன் அல்லது அதற்குச் சமமான தகைமையும் அதன்பின் அரச நிறுவனமொன்றில் அல்லது வேறு அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் 15 வருட கால நிறைவேற்று தரத்தில் சேவை அனுபவம்

அல்லது

அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் விவசாயம் / விஞ்ஞானம் / முகாமைத்துவம் / வர்த்தகம் / கலை (பொருளாதாரத்தில் விசேடத்துவம்) இல் முதலாம் அல்லது இரண்டாம் தரச் சித்தியுடன் இளமாணி பட்டப்படிப்பும், முதுமாணி டிப்ளோமாவும் அல்லது அதற்கு சமமான தகைமையும் அதன் பின் அரச நிறுவனமொன்றில் அல்லது வேறு அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் 17 வருட கால நிறைவேற்றுத் தரத்தில் சேவை அனுபவம்.

அல்லது

அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் விவசாயம் / விஞ்ஞானம் / முகாமைத்துவம் / வர்த்தகம் / கலை (பொருளாதாரத்தில் விசேடத்துவம்) இல் முதலாம் அல்லது இரண்டாம் தரச் சித்தியுடன் இளமாணி பட்டப்படிப்பும், அல்லது அதற்கு சமமான தகைமையும், அதன் பின் அரச நிறுவனமொன்றில் அல்லது வேறு அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் 20 வருட கால நிறைவேற்றுத் தரத்தில் சேவை அனுபவம்.

07. **ஏனைய தகைமைகள்**
- கனணியில் சிறந்த அறிவு
- முகாமைத்துவத்தில் சிறந்த திறமை
- பனை சம்பந்தமான துறையில் சிறந்த அறிவு

08. **நியமனத்தின் தன்மை**
நிரந்தரமானது

09. **தேர்வு முறை**
விண்ணப்பதாரி நேர்முகத் தேர்வின் மூலம் தெரிவுசெய்யப்படுவார்.

10. **சேவை நிபந்தனைகள்**
இப்பதவிக்கு நியமிக்கப்படுபவர், தனது மாதாந்த சம்பளத்தில் 8.0% ஊழியர் சேமலாப நிதிக்குப் பங்களிப்புச் செய்வதுடன், பனை அபிவிருத்திச் சபை ஊழியர் சேமலாப நிதிக்கும் ஊழியர் நம்பிக்கை நிதிக்கும் ஊழியர் சார்பில் பங்களிப்புச் செய்யும்.

11. **விண்ணப்பிக்கும் முறை**
மாதிரி படிவத்திற்கு அமைவாக தயாரிக்கப்பட்ட விண்ணப்பத்தை, பகுதி 06, 07 இல் குறிப்பிட்ட தகைமைகளுக்குரிய சான்றிதழ் / ஆவணங்களின் பிரதிகளுடன் அனுப்பி வைக்கப்பட வேண்டும். இவ் விண்ணப்பம் "**செயலாளர், மேலதிக பெருந்தோட்டப் பயிர் அபிவிருத்தி அமைச்சு, 561/3, எல்விற்றிகல மாவத்தை, கொழும்பு 05**" எனும் முகவரிக்கு 19 ஜூன் 2009ஆம் திகதியன்றோ அல்லது முன்னரோ கிடைக்கக் கூடியவாறு அனுப்பி வைக்கவும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "பொது முகாமையாளர் பதவிக்கான விண்ணப்பம்" எனக் குறிப்பிடப்பட வேண்டும்.

குறிப்பு:
(அரச நிறுவனங்களில் தொழில் புரியும் விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களைத் தேவையான ஆவணங்களின் பிரதிகளுடன் அந்நிறுவனங்கறளின் தலைவர்களுக்கூடாக அனுப்ப வேண்டும். விண்ணப்ப முடிவு திகதிக்குப் பின்னர் பெறப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது).

**லீலா தசநாயக்க,**
செயலாளர், மேலதிக பெருந்தோட்டப் பயிர் அபிவிருத்தி அமைச்சு,
561/3, எல்விற்றிகல மாவத்தை, கொழும்பு 05.

### பனை அபிவிருத்திச் சபை
### மேலதிக தோட்டப் பயிர் அபிவிருத்தி அமைச்சு
### பொது முகாமையாளர் பதவிக்கான விண்ணப்பம்

01. முழுப்பெயர் :
02. பெயர் முதலெழுத்துடன் : திரு. / திருமதி / செல்வி
03. விலாசம் :
04. பிறந்த திகதி : வருடம்: மாதம்: நாள்:
05. விண்ணப்ப முடிவு திகதியில் வயது :
06. தேசிய அடையாள அட்டை இல. :
07. சிவில் நிலை :
08. கல்வித் தகைமைகளும் அனுபவங்களும் :
(சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்பட வேண்டும்)

| பட்டம் | பாடம் | வருடம் | பல்கலைக்கழகம் |
|---|---|---|---|

09. ஏனைய தகைமைகள்: (ஆவணங்களின் பிரதிகள் இணைக்கப்படல் வேண்டும்)
- கனணியில் சிறந்த அறிவு
- முகாமைத்துவத்தில் சிறந்த திறமை
- பனை சம்பந்தமான துறையில் சிறந்த அறிவு

10. ஏதாவது குற்றங்களுக்காக நீதிமன்றத்தால் தண்டிக்கப்பட்டவரா? ஆம் / இல்லை
11. பிறப்புச் சான்றிதழ், தேசிய அடையாள அட்டை, கல்விச் சான்றிதழ் மற்றும் ஏனைய தகைமை சான்றிதழ்களின் பிரதிகள் இவ்விண்ணப்பத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.
12. மேற்குறிப்பிட்ட தகவல்கள் எனது அறிவிற்கெட்டியவரை சரியானதும் உண்மையானதும் என உறுதிப்படுத்துகின்றேன்.

...................... ......................................................
திகதி விண்ணப்பதாரியின் கையொப்பம்

13. ஏற்கனவே அரச சேவையிலுள்ள விண்ணப்பதாரிகளுக்கு

எனது இல.:

நிறுவன தலைவரின் சிபாரிசு

.............................. ஆகிய விண்ணப்பதாரி ............ இல் .................. ஆக தொழில் புரிகிறார். அவர் எந்தவிதமான ஒழுக்காற்று நடவடிக்கைகளுக்கும் உட்படுத்தப்படவில்லை. அவர் மேற்குறிப்பிடப்பட்ட பதவிக்கு தேர்வு செய்யப்பட்டால் அப்பதவியை ஏற்பதற்கு எமது நிறுவனத்தால் விடுவிக்கப்படுவார் / விடுவிக்கப்படமாட்டார்.

...................... ......................
திகதி நிறுவனத் தலைவரின் கையொப்பம்
உத்தியோக முத்திரை.

(சி/558815)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




சுடர் சிந்தனை :- '' அன்பினால் உலகையே வெல்ல முடியும் ''

ஆசிரியர் பொன்.சக்திவேல் தொகுத்து வழங்கும்

# இலகுவழி ஆங்கிலம்

BY Pon. Sakthivel AIAB (Lond) ACEA
(Lond) Special English Trained Teacher (E.S.U Sri Lanka.)

உச்சரிப்பு சரியாக அமைவதற்கு சொற்களின் உச்சரிப்பை பிரிப்பதை (Syllable) என அழைப்பர். அதற்கிணங்க முக்கியமான சொற் களை கீழே காணலாம். இவை Day to Day Conversation நாளாந்த பாவனை வாக்கியங்களில் வரும். இவற்றைப் பலமுறை படித்து பழக்கப்படுத்திக்கொள்ளவும்.

15.05.2009 Continuity.....

| | சொற்கள் | பிரிப்பு | உச்சரிப்பு | கருத்து |
|---|---|---|---|---|
| 611. | Pleasurable | Pleas - ur - able | பிளஷரபில் | மகிழ்வளிக்கின்ற |
| 612. | Plenty | Plen - ty | பிளென்ரி | நிறைவு |
| 613. | Policy | Pol - i - cy | பொலிசி | செயற்றிட்டம் |
| 614. | Political | Po - lit - i - cal | பொலிட்டிக்கல் | அரசியல் |
| 615. | Poplin | Pop - lin | பொப்பிளின் | பருத்தி துணிவகை |
| 616. | Popularity | Pop - u - lar - i - ty | பொப்புளாரிட்டி | பொதுமக்களிடையே மதிப்பு |
| 617. | Population | Pop - u - la - tion | பொப்புலேஷன் | குடிசனத்தொகை |
| 618. | Positive | Pos - i - tive | பொஸிட்டிவ் | உறுதியான |
| 619. | Possession | Pos - ses - sion | பொசெஷன் | பெற்றிருத்தல் |
| 620. | Possible | Pos - si - ble | பொஸிபிள் | நிகழக்கூடிய |
| 621. | Postage | Post - age | போஸ்ரிஜ் | தபாற்கட்டணம் |
| 622. | Postmortem | Post - mor - tem | போஸ்ட்மோரெம் | பிரேத பரிசோதனை |
| 623. | Postpone | Post - pone | போஸ்பொன் | தள்ளிப்போடு |
| 624. | Practicable | Prac - ti - ca - ble | பிறற்றிக்கபிள் | செயற்படத்தக்க |
| 625. | Prediction | Pre - dic - tion | பிறிடிக்ஷன் | வருவது உரைத்தல் |
| 626. | Prefer | Pre - fer | பிறிபர் | விரும்பி எடு |
| 627. | Preference | Pref - er - ence | பிறெபெறன்ஸ் | முன்னுரிமை |
| 628. | Pregnancy | Preg - nan - cy | பிறெக்னன்சி | கருவுற்ற நிலை |
| 629. | Prepare | Pre - pare | பிறிப்பெயர் | தயார்செய் |
| 630. | Preposition | Prep - o - si - tion | பிறெப்பொசிஷன் | முன்னிடைச்சொல் |
| 631. | Presentation | Pres - en - ta - tion | பிறசன்ரேஷன் | வெகுமதி அளித்தல் |
| 632. | Presently | Pres - ent - ly | பிறசன்ட்லி | உடனே |
| 633. | Preserve | Pre - serve | பிறிசேவ் | அழியாது காப்பாற்று |
| 634. | Presidency | Pres - i - den - cy | பிறெசிடென்சி | தலைவர்பதவி |
| 635. | Pressure | Pres - sure | பிறெஷர் | அமுத்தம் |
| 636. | Prevent | Pre - vent | பிறிவென்ற் | நடைபெறாமல் செய் |
| 637. | Previous | Pre - vi - ous | பிறிவியஸ் | முந்திய |
| 638. | Primary | Pri - ma - ry | பிறைமறி | முதன்மையான |
| 639. | Principled | Prin - ci - pled | பிறின்சிபிள்ட் | ஒழுக்கவிதிப்படியுள்ள |
| 640. | Privacy | Pri - va - cy | பிறைவசி | இரகசியம் |
| 641. | Private | Pri - vate | பிறைவிற் | தனியாருடைய |
| 642. | Privilege | Priv - i - lege | பிறிவிலிஜ் | தனிச்சலுகை |
| 643. | Probable | Prob - a - ble | புறபபிள் | நிகழக்கூடிய |
| 644. | Probably | Prob - a - bly | புறபபிளி | அனேகமாக |
| 645. | Problem | Prob - lem | புறபுளம் | பிரச்சினை |
| 646. | Procedure | Pro - ce - dure | புறசீஜர் | நடைமுறை |
| 647. | Proceed | Pro - ceed | புறசீட் | தொடர்ந்து செய் |
| 648. | Produce | Pro - duce | புறடியூஸ் | விளைவி |
| 649. | Product | Prod - uct | புறடக்ற் | உண்டுபண்ணப்பட்ட பொருள் |
| 650. | Professional | Pro - fes - sion - al | புறபெஷனல் | தொழில்சார்ந்த |
| 651. | Profit | Prof - it | புறபிட் | இலாபம் |
| 652. | Professor | Pro - fes - sor | புறபெசர் | பேராசிரியர் |
| 653. | Proficiency | Pro - fi - cien - cy | புறபிஷென்சி | செயற்றிறன் |
| 654. | Programme | Pro - gra - mme | புறோகிறாம் | நிகழ்ச்சிநிரல் |
| 655. | Progressive | Pro - gres - sive | புறோகிறசிவ் | சீர்திருத்தத்தை ஆதரிக்கிற |
| 656. | Prohibit | Pro - hib - it | புறொஹிபிட் | தடைசெய் |
| 657. | Project | Pro - ject | புறொஜெக்ட் | திட்டம் |
| 658. | Promise | Prom - ise | புறொமிஸ் | வாக்குறுதி |
| 659. | Promotion | Pro - mo - tion | புறமோஷன் | பதவி உயர்வு |
| 660. | Pronunciation | Pro - nun - ci - a - tion | புறனன்சியேஷன் | உச்சரிப்பு |
| 661. | Propaganda | Prop - a - gan - da | புறப்பகன்ட | கோட்பாட்டு விளக்கம் |
| 662. | Property | Prop - er - ty | புறப்பட்டி | சொத்து |
| 663. | Propose | Pro - pose | புறப்போஸ் | முன்மொழி |
| 664. | Protein | Pro - te - in | புரோட்டின் | புரதப்பொருள் |
| 665. | Protest | Pro - test | புறரெஸ்ட் | எதிர்ப்பைத் தெரிவி |
| 666. | Proud | Proud | புறவுட் | தற்பெருமை |
| 667. | Prove | Prove | புறுவ் | உண்மையை நிரூபி |
| 668. | Proverb | Prov - erb | புறவேப் | பழமொழி |
| 669. | Provide | Pro - vide | புறவைட் | தருவித்துக்கொடு |
| 670. | Provision | Pro - vi - sion | புறவிஷன் | உணவுப்பொருள் |
| 671. | Publication | Pub - li - ca - tion | பப்ளிகேஷன் | வெளியீடு |
| 672. | Publicity | Pub - lic - i - ty | பப்ளிசிட்டி | பிரசித்தம் |
| 673. | Pumpkin | Pump - kin | பம்கின் | பூசணிக்காய் |
| 674. | Punctual | Punc - tu - al | பங்சுஅல் | காலம் தவறாத |
| 675. | Punishment | Pun - ish - ment | பனிஷ்மென்ற் | தண்டனை |
| 676. | Purchase | Pur - chase | பேச்சஸ் | கொள்வனவு |
| 677. | Purpose | Pur - pose | பேப்பஸ் | நோக்கம் |
| 678. | Pursuit | Pur - suit | பேர்சூற் | முயற்சி |
| 679. | Pushing | Push - ing | புஷ்இங் | ஊக்கமுடைய |
| 680. | Put around | Put - aro - und | புற் எரவுன்ட் | சுற்றிவளை |
| 681. | Put away | Put - aw - ay | புற் எவே | ஒதுக்கித்தள்ளு |
| 682. | Put back | Put - ba - ck | புற் பாக் | பழையநிலைக்கு கொண்டுவா |
| 683. | Put behind | Put - be - hind | புற் பிஹைன்ட் | பின்னுக்கு வை |
| 684. | Put down | Put - do - wn | புற் டவுன் | செயலிழக்கச்செய் |
| 685. | Put in | Put - in | புற் இன் | கொண்டிரு |
| 686. | Put into | Put - in - to | புற் இன்ரு | ஒருநிலைக்குக் கொண்டுவா |
| 687. | Put off | Put - off | புற் ஒப் | தள்ளிவை |
| 688. | Put on | Put - on | புற் ஒன் | மேற்கொள் |
| 689. | Put out | Put - out | புற் அவுட் | செயலிழக்சசெய் |
| 690. | Put to | Put - to | புற் ரூ | பற்று, பிடி |
| 691. | Put up | Put - up | புற் அப் | உயர்த்து |
| 692. | Put with | Put - with | புற் வித் | பொறுத்துக்கொள் |
| 693. | Quadrisyllable | Quad - ri - syl - la - ble | குவாட்றிசிலைபிள் | நான்கு அசைச்சொல் |
| 694. | Qualification | Qual - i - fi - ca - tion | குவொலிபிகேஷன் | தகுதி |
| 695. | Qualify | Qual - i - fy | குவொலிபை | தகுதி உடையவராக்கு |
| 696. | Quality | Qual - i - ty | குவொலிட்ரி | பண்பு |
| 697. | Quantity | Quan - ti - ty | குவொண்ரிற்ரி | அளவு |
| 698. | Quarrel | Quar - rel | குவொரல் | சண்டை, சச்சரவு |
| 699. | Quarter | Quar - ter | குவோட்டர் | நான்கின் ஒருபகுதி |
| 700. | Query | Que - ry | குவிறி | வினா |
| 701. | Question | Ques - tion | குவெஸ்சன் | கேள்வி |
| 702. | Questionnaire | Ques - tion - naire | குவெஸ்சனெர் | கேள்விப்பட்டியல் |
| 703. | Queue | Queue | கியூ | வரிசை |
| 704. | Quickly | Quick - ly | குவிக்லி | விரைவாக |
| 705. | Quiet | Qui - et | குவைட் | அமைதி |
| 706. | Quote | Quote | கோட் | எடுத்துக்கூறு |
| 707. | Radar | Ra - dar | ராடர் | ராடர் கருவி |
| 708. | Radiant | Ra - di - ant | றேடியன்ற் | பிரகாசமான ஒளி |
| 709. | Radio | Ra - di - o | றேடியோ | வானொலி |
| 710. | Raffle | Raf - fle | றபில் | குலுக்கல் சீட்டு |
| 711. | Rainbow | Rain - bow | றெயின்போ | வானவில் |
| 712. | Rarely | Rare - ly | றேயலி | அரிதாக |
| 713. | Readable | Read - a - ble | றீடெபிள் | படிக்கக்கூடிய |
| 714. | Reaction | Re - ac - tion | றீஅக்ஷன் | ஒருசெயலின் எதிர்ச்செயல் |

## Transformation of Sentences - வாக்கியங்களை மாற்றுதல்

**Analysis.அனலிஸிஸ் - பிரித்து அறிதல்**

ஒரு சொற்றொடரை பல பகுதிகளாக பிரித்து அறிதலை Analysis - (சொற்றொடர் பகுப்பியல்) விரிவாகப் பயிலுமுன்பு மாணவர்கள் கீழ்க்காணும் விவரங்களை அறிந் திருத்தல் அவசியமானதாகும்.
சொற்றொடர்கள் பூரணவாக்கியம், அபூரண (நிறைவற்ற) வாக்கியம் என இரு வகைப் படும்.

**01. பூரண வாக்கியம் Complete Sentence**

Complete Sentence அதாவது பூரண வாக்கியம் எனச் சொல்லப்படுவது யாதெனில் முழுமையான பொருளை விளக்கி நிற்பதாகும்.

E.g :-
உதாரணம்

1. Parathan is a boy.
   பரதன் ஒரு சிறுவன்.
2. I do not eat meat.
   நான் இறைச்சி சாப்பிடுவதில்லை.
3. Some students are walking along the road.
   சில மாணவர்கள் பாதையில் நடந்துகொண்டிருக்கிறார்கள்.
4. The principal came to the class.
   அதிபர் வகுப்புக்கு வந்தார்.
5. We shall pass this year.
   நாம் இவ்வருடம் சித்திபெறுவோம்.

**02. அபூரண வாக்கியம் - Incomplete Sentence**

ஒரு முழுமையான பொருளை விளக்காமல் நிற்கின்ற வாக்கியம் அபூரண வாக்கியம் - நிறைவில்லா வாக்கியம் எனப்படும்.

E.g :-
உதாரணம்

1. When she comes - அவள் வரும் பொழுது
2. When she came - அவள் வந்தபொழுது
3. As she comes - அவள் வருவதால்
4. As she came - அவள் வந்தபோது
5. While she was writing - அவள் எழுதிக்கொண்டிருந்த வேளையில்
6. Though she was writing - அவள் எழுதிக்கொண்டிருந்த போதிலும்
7. If she was writing - அவள் எழுதிக்கொண்டிருந்தால்
8. Which was good - நல்லதாக இருந்தது
9. Who was clever - புத்திசாலியாக இருந்தான்
10. That I was writing - நான் எழுதிக்கொண்டிந்தேனென்று

இவற்றின் தொடர்ச்சி எதிர்வரும் வெள்ளிக்கிழமை இலகுவழி ஆங்கிலம்-21 இல் வெளிவரும்......

மேலதிக தொடர்புகளுக்கு :-
உதயன் கல்விச்சுடர்,
361, கஸ்தூரியார் வீதி,யாழ்ப்பாணம்.
தொலைபேசி -
071-4273035,021-2223837

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வர்ணப் படங்களின் பதிவுப் பெட்டகம்

தொகுப்பு: ஔண்யன்




(நன்றி:நுண்கலைத்துறை, யாழ்.பல்கலைக்கழகம்)


வல்வெட்டித்துறைச் சிவன் கோயில் திருவீதி மடமொன்றில் காணப்படும் சுதைச் சிற்பமாகும். சுதைச் சிற்பம் என்பன மிகப் பண்டைக்காலம் தொட்டு சிற்ப ஆக்கத் திற்குப் பயன்படுத்தப்படும் ஒரு வெளிப்பாட்டு முறையாகும். குழைம (Plastilic) முதன்மையுடைய இச் சிற்ப ஆக்க மரபு பல்வேறு ஊடகங் களின் (உ+ம் மண், குங்கிலியம், மரப்பிசின்...) கலப்பினால் ஆக்கப் பட்டு வந்துள்ளது. சீமெந்தின் வருகை இவ்வகைப்பட்ட பாரம் பரிய ஊடகக் கையாள்கையை முடிவுக்குக் கொண்டு வந் துள்ளது. யாழ்ப் பாணத்தில் விரைவாக அணைந்து கொண்டு வரும் இம் மூத்த ஆக்க மரபு களுக்கான உதாரணங்களில் இதுவும் ஒன்று.
(படமும் தகவலும்: பாலன்குட்டி)




ஒளியூட்டும் சாதனமாக மட்டுமன்றிப் பண்பாட்டின் அம்சமாகவும், மங்கலத்தின் குறியீடாகவும் தமிழரிடையே விளக்குகளின் பயன்பாடு இருந்து வந்துள்ளது. செப்பாலான கைவிளக்குகளே அதிகம் பாவனையில் இருந்துள்ளன. இந்நிலையில் 'சிம்னி லாம்புகள்' (விளக்குகள்) என்று கூறப்படும் கண்ணாடியிலான முகப்புகளைக் கொண்ட விளக்குகள் அறிமுகமாகத் தொடங்கின. இன்று நம் பயன் பாட்டிலுள்ள 'ஹரிக்கேன் லாம்பு'களின் ஆரம்ப வடிவங்கள் இவைதான். இவ்வாறு ஆரம்ப கட்டத்தில் பயன்படுத்தப்பட்ட லாம்பு ஒன்றையே (சிம்னி அற்ற நிலையில்) படத்தில் காண்கிறீர்கள்.
(படமும், தகவலும்: நேசன்)



பஞ்சபூதங்களில் ஒன்றான நெருப்பு அழிவின் குறி யீடாகவே இந்துக் களிடையே அர்த்தப் படுத்தப்படுகின்றது. அழிவிலிருந்து தம்மைக் காக்க இறைவனை வேண்டி தீ மிதிக்கும் சடங்குகளை தொன்றுதொட்டே இந்துக்கள் நிகழ்த்தி வருகிறார்கள். தக தகக்கும் நெருப்பின் இடையே பக்தி பூர்வமாக ஏதோ ஒரு நேர்த் தியை மனதில் வைத்துக் கொண்டு நடந்தால் தீயின் வெம்மை அவர்களை ஒன்றும் செய்யாது என்பது இந்துக்களின் நம்பிக்கை. இதனால்தான் தீ மிதிப்பை 'பூ மிதித்தல்' என்று குறிப்பிடுகின்றார்கள். புங்கன்குளம் வில்வையடி ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் ஆலயத்தில் நடைபெற்ற பூ மிதிப்பு நிகழ்வில் ஆலயத் தின் பூசகர் பி.தில்லை நாதன் நெருப்பின் நடுவே சடங்கு சம்பிரதாயங்களை நிகழ்த்தியபடி நடந்து வருவதைப் படத்தில் காணலாம்.
(படமும், தகவலும்: நந்தன்)



உச்சி வெயில் சுட்டெரிக்கும் கோடை காலம் குடாநாட்டில் ஆரம்பமாகிவிட்டது. கோடையின் வெம்மையைத் தணிக்க மக்கள் பலவித வழிகளையும் நாடுகிறார்கள். கோடை காலத்தில் மக்களிடையே வெள்ளரிப்பழம், வத்தகைப்பழம் என்பவற்றுக்கு தனி மரியாதை உண்டு. ஏனெனில் இவை உடலுக்குக் குளிர்ச்சியை உண்டுபண்ணுவதோடு, ஊட்டச்சத்துகளையும் கொண்டுள்ளவை. அத்தோடு கோடையை அண்டிய காலப்பகுதியிலேயே இவற்றின் அறுவடை காலமும் இருப்பதும் இதற்குக் காரணம். பனையோலையால் செய்யப்பட்ட 'குடலை'யில் வெள்ளரிப்பழத்தைக் கட்டி, வண்டிலில் வைத்து விற்பனை செய்வது நம்மண்ணின் ஒரு மரபாகவே மாறிவிட்டது. இளைஞன் ஒருவன் குடலையில் கட்டப்பட்ட வெள்ளரிப்பழம், வத்தகைப்பழம் என்பவற்றை மும்முரமாக விற்பனை செய்வதைப் படத்தில் காணலாம். (படமும், தகவலும்: [illegible])



கின்னஸ் சாதனை செய்வதென்பது ஒரு இனிப்பான விடயம் தான். ஆனால் இனிப்பை வைத்தே உலக சாதனை ஒன்று நிகழ்த் தப்பட்டுள்ளது. படத்திலே நீங்கள் பார்க்கின்ற பிரமாண்டமான கழுதை உருவம் முற்றுமுழுதாக இனிப்புகளைக் கொண்டே உருவாக் கப்பட்டுள்ளது. 60 அடி நீளமும், 23 அடி அகலமும், 61 அடி உயரமும் கொண்ட இந்த இராட்சதக் கழுதையின் சிலை, 8000 இறாத்தல் நிறை யுடைய இனிப்புப் பண்டங்களால் ஆக்கப்பட்டது. அமெரிக்காவின் பிலடெல்பியா மாநிலத்தில் 2008 ஆம் ஆண்டு நவம்பர் இரண்டாம் திகதி இந்த உருவம் அமைக்கப்பட்டு பிரமாண்டமான இனிப்புச் சிலை என்ற கின்னஸ் சாதனையைப் படைத்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மது அருந்தும் பெண்களுக்கு மார்புப் புற்றுநோய் ஏற்படச் சாத்தியமுண்டு



மது அருந்தும் மத்திய வயதுப் பெண்களுக்கு மார்புப்புற்று நோய் உருவாகும் சாத்தியம் உண்டு எனச் சமீபத்தைய ஆய்வு ஒன்று தெரிவிக்கிறது.

டாக்டர்களால் சிபார்சு செய்யப்பட்ட ஆரோக்கிய அளவை விட கூடுதலாகக் குடிக்கும் பெண்களுக்குப் புற்றுநோய் பீடிக்கும் சாத்தியம் 50 வீதத்தால் அதிகரிக்கிறது என இங்கிலாந்து சுகாதார அமைச்சு எச்சரிக்கை விடுத்துள்ளது.

மது பானங்கள் குறிப்பாக 'உவைன்' வர்க்கம் வெவ்வேறு 'அற்ககோல்' செறிவுகளில் சந்தைப்படுத்தப்படுவதால் எவ்வளவு உச்சமட்டம் பருகலாம் எனத் தீர்மானிப்பதில் குழப்பம் ஏற்படுகிறது. பலர் எவ்வளவு அலகு மதுபானத்தைக் குடிக்கிறோம் என உணராமலே அதிகளவு மதுபானத்தை அருந்தி விடுகிறார்கள். நாள் ஒன்றுக்கு 14 ஐ.எஸ். அலகு மதுபானத்தைக் குடிக்கும் மத்திய வயதுப் பெண்களுக்குப் புற்றுநோய் பீடிக்கும் சாத்தியம் 50 வீதத்தால் அதிகரிக்கிறது எனக் கண்டறியப்பட்டுள்ளது. இங்கிலாந்தில் கடந்த வருடம் மத்திய வயதுப் பெண்கள் 2000 பேர் மார்பகப் புற்று நோய்க்கு ஆளாகியிருந்தனர்.

## தகவல் பெட்டகம்

குடிகாரர்களின் மற்றும் கொலை, களவு, கற்பழிப்பு, சமூக விரோதச் செயல்கள், கடத்தல்கள், பயமுறுத்திப் பணம் பறித்தல் மற்றும் விபச்சாரத் தொழிலில் ஈடுபடுவது போன்ற பெரும் பிரச்சினைகளைக் கையாளப் பகீரதப் பிரயத்தனம் செய்யும் அரசுகளுக்கு, போதைப் பொருள் பாவனை மேலும் புதிய சிக்கல்களைத் தோற்றுவித்திருக் கிறது.

எனவே இப் பிரச்சினைகளைக் கட்டுப்பாட்டில் கொண்டுவரு வதற்கு 'அற்க கோல்' பாதிப்பு கள் பற்றி மக்களுக்கு விழிப்புணர்ச்சி ஏற்படுத்தப் படுதல் அவசியம். குடி போதை நபர்களால் அவர்கள் குடும்பத்திற்கு ஏற்படும் அசௌகரியங்கள், துன்பங்கள், இழப்புக்களையும் அவற்றால் உருவாகும் சமூகச் சிக்கல்களையும் எடுத்துக் காட்டி, அவற்றை விட அவர்களின் உடற் கலங்கள் சீரழிக்கப்படுவது, குடல் பாதிப்பு உட்பட, அற்ககோல் விளைவிக்கும் பாரிய தீமைகளைக் கூறி மக்களைக் குடி போதையிலிருந்து காப்பாற்றுவது அரசுகளின் பாரிய கடமையாகும். ★★★



# மனமே சாய்ந்துவிடாதே!



நம்மில் ஒரு சிலர் எந்த நேரமும் தமக்கு ஏதோ நோயிருக்கிறது; உடல் சுகமாக இல்லை என்று சொல்லிக் கொண்டேயிருப்பார்கள்; அவர்கள் தலையிடி, மயக்கம், கை, கால்நோவு, நெஞ்சிறுக்கம் போன்ற பல விதமான தொடர்ந்த முறைப்பாடுகளைச் சொல்வார்கள். சிலர் பெருமூச்சு விடுவார்கள். இதனை நமது கலாசாரத்தில் மனக் கஷ்டத்தின் வெளிப்பாடாகக் கருதுவார்கள். இவ்விதம் அடிக்கடி தொடர்ந்து சொல்லப்படும் முறைப்பாடுகளை மெய்ப்பாடு [SOMATIZATION] என்பார்கள்.

மெய்ப்பாடுகள் எந்த நோய்க்குரியவை எனக் கண்டுபிடிப்பது கஷ்டமாக இருக்கும். சுகாதார சேவையாளர், ஒரு குறிப்பிட்ட நோயின் அறிகுறியாக இருக்குமோ என்று தீர்மானிக்கும்போது, நோயாளர் அந்த நோய்க்குப் பொருந்தாத வேறு முறைப்பாடுகளை வெளிப்படுத்துவார். எனவே நோயைக் கண்டுபிடிப்பது மிகுந்த கடினமாக இருக்கும். முறைப்பாடுகள் உடல் நோயின் காரணமானவையல்ல. உளநோயின் காரணமானவையே என்ற முடிவுக்கே வரவேண்டியிருக்கும். அநேகமாக உள சமூகப் பிரச்சினையின் காரணமாகவே இவை உருவாகின்றன. சில உடல் நோய்கள் இருந்தாலும் அவரின் பலவிதமான முறைப்பாடுகளுக்கு அந்த நோய்கள் காரணமாக இருக்காது.

இவ்விதமான நோயாளிகள் அடிக்கடி எல்லாவிதமான வைத்தியர்களையும் நாடிச் சென்று, தம்மைப் பரிசோதித்துக் கொள்வர். சுதேச வைத்தியர்கள், உள்ளூரில் உள்ள பரியாரிகள், ஆங்கில வைத்தியர்கள் போன்ற அனைவரையும் மாறி மாறிச் சென்று காட்டி ஏமாற்றமடைவர். அவர்கள் குணமடையாமலே காணப்படுவர். எந்த விதமான மருந்துகளைக் கொடுத்தாலும் குணமடைவதேயில்லை. எந்தவிதமான உடற் பரிசோதனைகளை- இரத்தம், மலம், சலம், ஈ.ஜி.சி., X றே - போன்றவற்றைச் செய்தபோதும் அவை எந்த உடல் நோய் நிலையையும் காட்டுவதில்லை. அவற்றின் அறிக்கைகள் சாதாரணமாகவே இருக்கும்.

வயது முதிர்ந்தோர் மெய்ப்பாட்டு நோய் கூடும்போது அனுங்குவார்கள். அனுங்கினால் கொஞ்சம் சுகம் என்பார்கள். சில வேளைகளில் இளைஞர்கள் திடீரெனப் பேச்சை இழந்துவிடுவார்கள். கை, கால்களின் செயற்பாடுகளை இழந்துவிடுவர். விழுங்குவதில் கடினத்தை உணர்வார்கள். இவ்விதமான உடற் தொழிற்பாடுகளை இழத்தலுக்கு பரீட்சையில் தோல்வியடைதல், எதிர்பார்த்த பெறுபேறுகளைப் பெறாமை, காதல் தோல்வி போன்ற நெருக்கீடுகளும் காரணமாக அமையலாம். இவற்றின் தீவிரம் வெகு விரைவிலோ அல்லது சில நாள்களிலோ குறைந்து மறைந்து விடக் கூடும். குறிப்பிட்ட உள நலக் காரணியைக் குணமாக்கும்போது இந்த நிலைமைகள் தாமாகவே மாறிவிடும். சமயச் சடங்குகளும் பாரம்பரிய சிகிச்சை முறைகளும் இந்த நிலைமைகளை எளிதாகக் குணப்படுத்தி விடுவதை அனைவரும் அறிந்திருக்கலாம்.

05

மெய்ப்பாட்டிற்கு எந்த விதமான மருந்தும் தேவையில்லை என வைத்தியர் உணர்ந்த போதும், நோயாளி ஏதாவது மருந்து தேவை என்று எதிர்பார்க்கும்போது அவர் நோயாளியின் நம்பிக்கைக்கும் திருப்திக்குமாக மருந்துப் போலிகள் [PLACEBO] என்பவற்றைக் கொடுக்கக்கூடும்.

மனக் குழப்பத்திற்கும் உணர்ச்சிக் கோளாறுகளுக்கும் உள்ளாகியிருப்பவர்கள் தமது உடலியியற் குணங்குறிகளை முறையிடுவதன் மூலம் தமக்கு விருப்பமில்லாத பொறுப்புக்களில் இருந்து விடுபடலாம் என எண்ணுவர் அல்லது வேலை செய்யும் இடத்தில் ஏற்படக்கூடிய சிக்கலையும், மற்றவரை அடிமைகளாக நடத்தும் ஆக்கிரமிப்பு நோக்கமுள்ள- உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுகின்ற - நிர்வாகியைச் சந்திப்பதையும் தவிர்த்துக்கொள்வர். சில வேளைகளில் இவர்களின் இந்த மெய்ப்பாடு மற்றவர்களின் கவனத்தையும் அனுதாபத்தையும் பெற்றுக்கொடுக்கும் என்ற எதிர்பார்ப்பாகவும் இருக்கலாம்.

சிலர் சில சமயங்களில் "இதென்ன தலையிடி" என்று அலுத்துக் கொள்வார்கள். இது உண்மையான "தலையிடி" அல்ல சிலர் தொடர்ந்து நண்பர்களுடன் கதைத்துக் கொண்டிருப்பதில் களைப்படைந்து எனக்குத் "தலையிடிக்கிறது" என்று சொல்லி விலகிச் சென்று விடுவார்.

இந்த உடல் முறைப்பாடுகளான மெய்ப்பாடு, மற்ற உளநோய்களான மனச்சோர்வு, பதகளிப்பு, நெருக்கீடு போன்றவற்றின் காரணமாக அமையலாம்.

நம்மில் சிலர் தமது காரியங்கள் என்றால் மிகத் தெளிவாகவும் கவனமாகவும் யாரை யாரைச் சந்திக்க வேண்டுமோ சந்தித்து, நிறைவேற்றிக் கொள்வார்கள். மற்றவர்களுக்காக இதே விதமான காரியங்களைச் செய்ய வேண்டி வரும் போது "எனக்கு அந்த விஷயம் அவ்வளவு தெரியாது, விளங்கேல்ல, தலையிடியாயிருக்கு" என்று சொல்லி ஒன்றும் செய்யாமலே விட்டு விலகிவிடுவர். இத்தகையோர் வல்லவர்கள்; பெரும்பாலும் வாழ்வில் முன்னேறுவார்கள்.

வேறு சிலர் தமது காரியங்களைச் செய்ய மாட்டார்கள். தள்ளிப்போட்டு விடுவார்கள். "களையாயிருக்குது, பிறகு பார்ப்பம்" என்று சொல்வார்கள். மற்றவர்களின் காரியம் என்றால் ஓடி ஓடிச் செய்வார்கள். தீர்க்க தரிசனத்துடன் மிகச் சரியாக உரிய நேரத்தில் செலவையும் பார்க்காமல் செய்து கொடுத்து மகிழ்வார்கள். இத்தகையோர் நல்லவர்கள்; ஏமாளிகள்; பெரும்பாலும் வாழ்வில் பின்தங்கி விடுவார்கள்.

உதாரணத்துக்கு ஒரு சம்பவத்தை குறிப்பிடலாம். 9 ஆம் வகுப்பு படிக்கும் ஒரு மாணவன் கணிதத்தில் கொடுக்கப்பட்ட வீட்டு வேலையை அன்று செய்து முடிக்கவில்லை. ஆசிரியர் மற்ற மாணவர்கள் முன் ஏசப் போகிறாரே என்ற பயத்தில் அவனுக்கு வயிற்று வலி வந்துவிட்டது. தாயார் பள்ளிக் கூடத்திற்குச் செல்ல வேண்டாம் என்று மறித்து விடுகிறார். வயிற்று வலி கூடவே தாயார் அருகில் உள்ள வைத்தியரிடம் காட்டுகிறார். வைத்தியர் பரிசோதித்துப் பார்த்தபோது வயிற்று வலி இருப்பதாகத் தெரியவில்லை. "எங்கே படிக்கிறீர்? ஏன் பாடசாலைக்குப் போகவில்லை?" என்று கேட்டார். "வயிற்றுவலி" என்று மாணவன் சொன்னான். அந்த மாணவன் அந்த அறையில் சுவரில் இருந்த மணிக்கூட்டைப்பார்த்தான். நேரம் 11.05. அவனின் முகத்தில் ஒரு தெளிவு ஏற்பட்டது. வயிற்றுவலி குறைவது போலிருந்தது. வைத்தியர் மாணவனின் முகத்தில் தென்பட்ட தெளிவையும் மாற்றத்தையும் அவதானித்தார். "கணித பாடம் எத்தனை மணிக்கு?" என்று கேட்டார். மாணவன் "10.20 இல் இருந்து 11 மணிவரை" என்றான். வைத்தியர் சிரித்துக் கொண்டே "வயிற்று வலி இப்போதில்லைத் தானே, நீ அம்மாவோடு வீட்டுக்குப் போகலாம்" என்றார்.

இரா. சந்திரசேகர சர்மா M.A.



# மிருகங்களின் கண்கள் இரவில் பளிச்சிடுவதுதேன்?



இரவில் வாகனங்களில் பயணம் செய்யும் போது வீதி ஓரங்களிலுள்ள பற்றைகள், புதர்களில் நின்று எம்மைப் பார்க்கும் மிருகங்களின் கண்கள் பிரகாசிப்பதுண்டு- தூரத்தில் இருந்து பார்த்தால் தீவட்டிகள் போல் அவை தெரியும்.

இரவில் வேட்டைக்குப் போகிறவர்கள் மின்'ரோச்' களைக் கொண்டு போவார்கள். பற்றைகளுக்குள் 'ரோச்' வெளிச்சத்தைப் பாய்ச்சினால் அங்கே நிற்கும் மிருகம் [முயல், மான்,பன்றி சில சமயம் சிறுத்தைகளும் கூட] எம்மைப் பார்க்கும். அப்பொழுது அவைகளின் கண்கள் பளிச்செனமினுங்கும். வேட்டையாடுபவர் பளிச்சிடும் இடத்தை நோக்கிச் சுட்டால் அம்மிருகம் சூடுபட்டு இறக்கும்- குறிதவறினால் தப்பி ஓடிவிடும்.

ஆனால் அவைகளின் கண்கள் ஏன் பிரகாசிக்கின்றன என்பது தெரியுமா? இரவில் அவைகளின் கண்கள் இயற்கையாகவே பளிச்சிடுவதில்லை. வேறு திசையில் இருந்து வரும் வெளிச்சம் படும் போதுதான் அவைகளின் கண்கள் பளிச்சிடும். அந்தத் தன்மை மனிதர்களுக்கு இல்லை.

இதன் இரகசியம் என்னவென்றால் பெரும்பாலான மிருகங்களின் கண்களில் பளிங்குத்தன்மை கொண்ட ஒரு பதார்த்தம் இருக்கின்றது. இது வெளிச்சம் படும்போது பிரதிபலிக்கிறது. மேலும் கும் இருட்டிலும் கூட மிருகங்கள் மிகச் சாதாரணமாக நடமாடவும், இரைதேடவும் கண்களில் உள்ள இந்தப் பொருளின் உதவியால் பார்க்க முடிகின்றது.

இந்தப் பிரதிபலிக்கும் வெளிச்சம் மிருகத்துக்கு மிருகம் வெவ்வேறு வண்ணங்களைக் கொண்டிருப்பதுண்டு. இது அவைகளின் கண்களில் உள்ள இரத்தக் குழாய்களின் எண்ணிக்கையைப் பொறுத்த விடயமாம். அதிக இரத்தக்குழாய்களைக் கொண்ட மிருகத்தின் கண்கள் சிவப்பு நிறமாக ஜொலிக்கும். குறைந்த குழாய்களைக் கொண்டது வெண்மையாகத் தெரியும். மஞ்சள், நீல நிறமாகப் பிரதிபலிக்கும் கண்களைக் கொண்ட மிருகமும் உண்டு.

-ரம்யன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கொழும்புத்துறை மேற்கு

# ஸ்ரீ வதரிபீட விநாயகர் ஆலய

## சிற்பத் தேர் வெள்ளோட்ட விழா சிறப்பு மலர் - 03.06.2009



### பிரதமகுருவின் ஆசியுரை



*"படமாடக் கோயில் பகவற்கொன் றீயில்*
*நடமாடக் கோயில் நம்பர்கங்காக*
*நடமாடக் கோயில் நம்பர்க்கொன் றீயில்*
*படமாடக் கோயில் பகவற்க தாமே"*

என்னும் திருமந்திரம் செய்வது போல் பக்தர்களுக்கும் மனிதர்களுக்கும் செய்யும் சேவை இறைவனுக்குச் செய்யும் திருத்தொண்டாகின்றது. ஒவ்வொரு மனிதர்களின் மனத்தையும் இறைவன்பாற் செலுத்தும் சக்தி ஆலயங்களுக்குத்தான் உண்டு. அத்தகைய ஆலயங்களை காலத்துக்குக் காலம் புதுப்பொலிவுடன் செப்பனிடுவது மானிடர் அனைவரது கடனாகும். ஆலயங்கள் புதுப்பொலிவு பெறும்போதே இறைவன் திருவருள் நிறைவதுடன் மக்களுக்கும் தெய்வ நம்பிக்கை அதிகரிக்கிறது. அந்த வகையில் அடியார்களின் பெரும் உதவியாலும் நிர்வாகத்தவரின் முயற்சியாலும் சிற்பாசாரியாரின் ஆற்றலாலும் இன்று இவ்வாலயம் புதிய சித்திரத்தேரை பெற்றுள்ளது. அஞ்ஞானத்தை வதம் செய்யும் மெஞ்ஞானப் பொருளாகிய எம்பெருமான் கொலுவிருக்கும் சித்திரத் தேரைக் கண்டு வணங்கும் பாக்கியம் பெற்ற நாங்கள் எல்லோருமே உண்மையில் கோடி புண்ணியம் செய்தவர்களே யாகும். அத்தேரில் வீற்றிருந்து எமக்கெல்லாம் குறைவில்லா திருவருளை அளவின்றி வழங்க எல்லாம்வல்ல வதரிபீடப் பெருமானை வணங்கி நிற்கின்றேன்.

"லோகா சமஸ்தா சுகினோ பவந்து"

சிவஸ்ரீ தி. சங்கரராஜக் குருக்கள்
*பிரதமகுரு, கொழும்புத்துறை ஸ்ரீ வதரிபீட மன்றுளாடும் விநாயகர் தேவஸ்தானம்.*

### ஆசியுரை



கொழும்புத்துறை மேற்கு ஸ்ரீ வதரிபீட விநாயகப் பெருமானுக்கு புதிய தேர் உருவாக்கப்பட்ட செய்தி அறிந்து மிகுந்த ஆனந்தம் அடைகின்றேன். யோகர் சுவாமிகள் நாளும் பொழுதும் உலாவிய திருவூரில் முழுமுதல் கடவுளாக வீற்றிருந்து அருள்பாலிப்பவர் எமது விநாயகப் பெருமான். திருவருள் சிறப்புமிக்க இத்திருத்தலத்தின் சிற்பம் நிறைந்த தேரினைக் காண்பதற்கு இறைவனே எமக்கு எல்லாம் என்று நினைவுகூரும் வகையில் உருவாக்கப்பட்ட திருத்தேரில் விநாயகப் பெருமான் பவனி வந்து எம் மண்ணை ஆற்றுப்படுத்த வேண்டும் எனப் பிரார்த்தித்து திருப்பணியில் மிகுந்த ஆர்வம் செலுத்திய நிர்வாக சபையினருக்கும் சிற்பக் கலைஞர்களுக்கும் அடியார்களுக்கும் வாழ்த்தினையும், நல்லாசியையும் கூறி அமைகின்றேன்.

சுபம்,

ச. கணநாதசர்மா
*ஆலய அர்ச்சகர், கொழும்புத்துறை மேற்கு ஸ்ரீ வதரிபீட மன்றுளாடும் விநாயகர் தேவஸ்தானம்.*

### தேர் வெள்ளோட்டம் காணும் விநாயகப் பெருமான்



சைவப் பாரம்பரியத்தின் மேன்மையைக் காத்த திருவூர் கொழும்புத்துறை. இத்திருவூரின் சிறப்புக்கு மூலகாரணன் மன்றுளாடும் மகிமை மிகு விநாயகர் அற்புதம் நிறைந்த திருக்கோயில், இத்திருக்கோவில் சூழலில் குடில் அமைத்து அருமையான ஒளிபரப்பியவர் யோகர் சுவாமிகள். பலவூர் கடந்து இவ்வூரில் வசித்த யோகர் சுவாமிகளின் தெய்வீகம் பிரவாகித்த திருவருள் வியக்கத்தக்கது. சீர் நிறைந்த வாழ்வு தரும் மன்றுளாடும் மகிமை மிகு விநாயகப் பெருமானுக்கு அழகான சிற்பத்தேர் உருவாக்கப்பட்டு வெள்ளோட்ட விழா நடப்பதறிந்து மிகவும் ஆனந்தமடைகிறேன். சிற்பக்கலைஞர் திரு. செ.பாலச்சந்திரன் அவர்களின் கைவண்ணத்தில் புதியதேர் உருவாகியிருப்பது பாராட்டுக்குரியது. கலாகேசரி தம்பித்துரை அவர்கள் உருவாக்கிய அற்புதமான கலைஞர்கள் வரிசையில் சிற்பக்கலைஞர் திரு.செ. பாலச்சந்திரன் இன்று சிறப்புப்பெற்று விளங்குகிறார். அருட்சிறப்பு மிக்க விநாயகப்பெருமான் புதிய தேரில் பவனிவந்து மக்களை ஆற்றுப்படுத்த வேண்டிப் பிரார்த்திக்கிறேன். அல்லற்பட்டு அகதிகளாக துடிக்கும் அப்பாவி மக்களுக்கு ஐந்து கரத்தவனாக அங்குச பாகனாக விளங்கும் ஆனைமுகப்பெருமான் ஆறுதல் தரவேண்டும் என இவ்வேளை அனைவரும் பிரார்த்திப்போம். என் வாழ்வில் சமயச் சொற்பொழிவுத் துறையில் வளர்ச்சிபெற வழிதந்த திருக்கோயில்களில் இத்திருக்கோயிலும் பெரும்பங்கு வகித்தமை மறக்க இயலாது. எல்லாம் வல்ல வித்தக விநாயகப்பெருமானின் வெள்ளோட்ட விழா சிறக்க எனது நல்வாழ்த்துக்களைச் சமர்ப்பிக்கிறேன். திருப்பணியில் ஈடுபட்டு உழைத்த அனைவருக்கும் எனது நன்றியும் நல்லாசியும் உரித்தாகட்டும்

*"யாவர்க்கும் இன்னுரை தானே"*

ஆறு.திருமுருகன்,
*தலைவர்,*
*ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை.*



### அருளாசிச் செய்தி



கொழும்புத்துறை மேற்கு இடத்தில் இருந்து அருளாட்சி புரியும் விநாயகப் பெருமானுக்கு புதிதாக அமைக்கப்பட்ட சித்திரத் தேர் வெள்ளோட்ட நிகழ்ச்சி நடைபெறுவதையிட்டு மகிழ்ச்சி அடைகின்றோம். வரலாற்றுப் பெருமைமிக்க இவ்வாலயத்தில் நடைபெறுகின்ற நிகழ்ச்சி ஊருக்கும், ஊர் மக்களுக்கும் பெருமையைத் தருகின்றது. நம் சமயம் பல தத்துவ செயற்பாடுகளை உள்ளடக்கியது. கலையினூடாக இறைவனைக் கண்டு அனுபவிப்பது நம் மரபாகும். இதனையே தேரின் தத்துவமும் செயற்பாடும் நமக்கு உணர்த்துகின்றது. தேரின் தத்துவம் மனித வாழ்க்கையை நெறிப்படுத்துவதாகும். ஆலயங்களில் நடைபெறும் விழாக்களில் தேர்த்திருவிழா முதன்மையடைகின்றது. தேரின் வடம் பிடித்தால் வானில் இடம் பிடிக்கலாம் என்ற வகையில் ஒவ்வொரு அடியவரும் தேரின் வடத்தை தொட்டு இழுக்கும் போது தம் வாழக்கை நிலையை உணர்கின்றான். தேரின் மேற்பகுதியாக ஆகாய வளியையும் நடுப்பகுதி ஆன்ம நிலையையும் கீழ்ப்பகுதி மாயாதத்துவத்தையும் வெளிப்படுத்துகின்றன. இத்தத்துவத்தினைக் கொண்ட தேரை சிற்பக் கலைஞர் பாலச்சந்தருடைய கைவண்ணத்தில் உருவாகிய தேர் பெருமைக்குரியதாகும். இப்பணியில் ஈடுபட்ட அடியப் பெருமக்களை வாழ்த்துகின்றோம். சித்தர் பரம்பரையை நினைவுபடுத்திய யாழ்ப்பாணம் யோகர் சுவாமிகள் பிறந்து, வாழ்ந்து, வழிபாடு செய்த இவ்வாலயத்தில் நடைபெறும் விழா நாட்டுக்கும் நாட்டு மக்களுக்கும் அமைதியையும் மகிழ்ச்சியையும் தருவதாகும். அனைவரும் மண்ணில் நல்லவண்ணம் வாழ இறைவனைப் பிராத்திக்கின்றோம்.

**"என்றும் வேண்டும் இன்ப அன்பு"**

**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்,**
*2ஆவது குருமஹா சந்நிதானம்.*

### தலைவரின் ஆசியுரை



*"கணபதி தாளைக் கருத்திடை வைப்போம்*
*குணம் அதிற்பலவாம்; கூறக்கேளீர்;*
*உட்செவி திறக்கும்; அகக்கண் ஒளிதரும்*
*அக்னி தோன்றும்; ஆண்மை வலியுறும்*
*திக்கெலாம் வென்று ஜெயக்கொடி நாட்டலாம்"*

என்ற பாரதியார் பாடலுக்கமைய குறைவில்லாச் செல்வங்கள் அள்ளி வழங்கும் வள்ளலே எம் விநாயகப்பெருமான். அப்பெருமானின் திருவருள் பெருங் கருணையாலும் அவர்தம் பக்தர்களின் பெரு முயற்சியாலும் நிர்வாகத்தவரின் அளப்பரிய ஆற்றலாலும் , மாய இருளகற்றி குன்றா ஒளிபரப்பி, பேரருள் பொழிய இன்று சித்திரத்தேர் கொள்ளும் பெருமானின் அழகோ பேரழகு! இப்பேரழகுப் பெருமானின் மலர்மிசை ஏகினான் மாணடி சேர்வதற்கும் நிலமிசை நீடுவாழ்வதற்கும் குறைவிலா குணப்பெரும் குன்றின் பேரருள் புரியவேண்டும் என மனதார பிரார்த்தித்து ஆசி வழங்குகின்றேன்.

ஜெகதீசன் முத்துக்குமாரசாமி, தலைவர்,
கொழும்புத்துறை மேற்கு
*ஸ்ரீ வதரிபீட மன்றுளாடும் விநாயகர் தேவஸ்தானம்.*

### வரலாறு

இவ்வாலயத்தின் வரலாறு இலங்கையை ஆட்சி செய்த தமிழ் அரசர்களோடு தொடர்புடையது. ஸ்ரீ விஜய கூழங்கைச் சக்கரவர்த்தி என்பார் இற்றைக்கு 700 வருடங்களுக்கு முன் யாழ்ப்பாணம் நல்லூரில் அரசு செய்தார். இவர் தமிழ் நாட்டின் தென்மதுரையில் உள்ள திருமருங்கூர் என்ற கிராமத்தில் இருந்து கந்தச்செட்டி, கதிர்காமச்செட்டி, வேலுச் செட்டி எனப் பல குடும்பங்களை கடல் வழியாக தோணிகளில் மன்னாரில் உள்ள விடத்தல்தீவுக்கு வருவித்து, அங்கிருந்து பூநகரி வழியாக கொழும்புத்துறையில் வந்து இறங்கச் செய்து கொழும்புத்துறையில் குடியமர்த்தப்பட்டனர் என தோம்பு மூலமாகவும், கர்ணபரம்பரையாகவும் அறியமுடிகிறது.

தற்போது இங்கே வாழ்கின்றவர்களின் மூதாதையர்கள் முறைப்படி மூலமூர்த்தியை பிரதிஷ்டை செய்து யந்திரம், மந்திரம், தந்திரம் என்பவற்றால் தாபித்து வழிபட்டு வணங்க வழிகோலினர். இலங்கை அன்னியர் வசப்பட்ட காலமாகிய கி.பி.1623 அளவில் காணிகளின் தோம்பு அரசினால் பதிவுசெய்யப்பட்டது. இவ்வாலயமும் இப்பதிவிலே இடம்பெற்றுள்ளது. தமிழ்நாட்டின் வேதாரணியத்தில் அமைந்துள்ள மூலமூர்த்தியாகிய நடராஜப் பெருமானைத் தனது தந்தையாகவும் விநாயகமூர்த்திப் பிள்ளையாரைத் தனது பெயராகவும் பெற்ற தால் 'செட்டி வேதாரண்யம் மன்றுளாடும் பெருமான் விநாயக மூர்த்தி பிள்ளையார் கோயில்' என இவ்வாலயம் தோம்பிலே பதியப்பட்டது.

#### வதரி நகர் உறைவோன்

வதரி என்றால் இலந்தை எனப் பொருள்படும். ஆகவே பழைய காலத்திலே, இப்பதியில் இலந்தை மரங்கள் மிகுந்த பிரதேசமாகவும், இலந்தைக்குளம் அருகில் இருந்ததாலும், இலந்தைக்குளம் பிள்ளையார் என்றும் அழைப்பர். அருள்மிகு மன்றுளாடும் வதரிபீட விநாயகர் ஆலயம் தவத்திரு சிவயோக சுவாமிகள் வாழ்ந்த பதி, நாவலர் பெருமானின் உந்துதலால், உருவாகிய சைவ வித்தியாசாலை அருகில் அமைந்து ஆலமரம்போல் வளர்ந்து வருவதால் அதுவும் வரலாற்றுச் சிறப்பம்சமாகும்.

இற்றைக்கு 350 வருடங்களுக்கு முன் நல்லூர் அரசகுமாரன் எதிர்மனசிங்கனை போர்த்துக்கேயத் தளபதி பிலிப் டீ ஒலி வேரா என்பவன் இக்கோயில் முன்றலில் வைத்தே சிரச்சேதம் செய்தான் என்றும், இவ்வேளையில் இக்கோயில் குருக்களும் வாளேந்தி போர் புரிந்து அரசகுமாரனுடன் வீரமரணம் எய்திய காட்சியை இந்தக் கோயிலின் இராஜகோபுரத்தில் தென்பகுதியில் காணமுடியும்.

#### திராவிட மரபுத்தேர்

ஸ்ரீவதரிபீட விநாயகப் பெருமானுக்குரிய திராவிட மரபு முகபத்திர எண்கோண சிற்பத்தேர், மிக அழகாகவும், சிறப்பாகவும், சித்திரம் போலவும், சிற்பக் கலைஞர்களால் உருவாக்கம் பெற்று இன்று வெள்ளோட்டம் காண்பது திருவருள் என்றே நாம் கூறவேண்டும். இதற்கேற்ப தேர்த்தரிப்பிடமும், சிறப்பாகவும், காத்திரமாகவும் நிர்மாணம் பெற்றதும் மேலும் ஒரு சிறப்பம்சமாகும். இந்தச் சிறப்புத் தேரில் சரித்திர வரலாறு, யாழ்ப்பாணச் சித்தர் பரம்பரை விநாயகர் புராணக் காட்சிகள், விக்கிர வரி ஆகியன தேரினை அலங்கரிக்கின்றன. அழகிய சிம்மாசனம், யாழிகள், கம்பீரமான குதிரைகள் யாவும் புதிய சிற்பத் தேருக்கு மெருகூட்டுகின்றன.

இவ்வாலயம் கடந்த மூன்று வருடங்களுள் இராஜகோபுரம், தேர், தேர்முட்டி, ஆலய தூண்களில் அழகான விநாயகப் பெருமானின் நடனச் சிற்பங்கள் என்பன அமைக்கப்பட்டு இவ்வாலயம் அழகுற விளங்குகின்றது. இவ்வாலயத்தில் வீற்றிருக்கும் விநாயகப் பெருமான் தன்னைத் தஞ்சமென அடையும் அடியார்களுக்கு நல்லருள் பாலித்துக்கொண்டிருக்கின்றார்.

- ஆலய நிர்வாக சபையினர்.

### கலைஞர்கள் கௌரவிப்பு

முற்பகல் 11 மணிக்கு ஆலய நிர்வாக சபைத் தலைவர் **J.முத்துக்குமாரசாமி** அவர்களின் தலைமையில் திராவிட மரபு முகபத்திர சிற்பத்தேர் வடிவமைத்தவர்கள் ஸ்தபதி **திரு.செ.பாலச்சந்திரன்** அவர்களும் ஸ்தபதி **ம.விஜயரட்ணம்** அவர்களும் அவர்களின் குழுவினர்களும்.

ஸ்ரீகாளிகா சிற்பாலயம், புத்தூர்.


தஷ்சனா பல்பொருள் மாளிகை
G.P.S. றோட், கல்வியங்காடு.
*உரிமையாளர்:*
பொன்னையா பரமேஸ்வரன் (*தம்பியண்ணா*)

தர்ஷிகா எலக்ரிக்கல்ஸ்
60, கொழும்புத்துறை வீதி,
பாண்டியன்தாழ்வு, யாழ்ப்பாணம்.

கஜன் லோன்றி
56, கொழும்புத்துறை வீதி,
பாண்டியன்தாழ்வு, யாழ்ப்பாணம்.

மோகன் பல்பொருள் களஞ்சியம்
நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.

சுத்தமாகவும் சுவையாகவும் தயாரிக்கப்பட்ட சைவ, அசைவ உணவு வகைகளுக்கு நாடவேண்டிய இடம்
விக்னா ஹொட்டல்
462, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

தரமாகவும் சுத்தமாகவும் பொதிசெய்யப்பட்ட பொருள்களையும், ஐஸ்கிறீம் வகைகளையும், பிஸ்கட் வகைகளையும், பாடசாலை உபகரணங்களையும் ஒரே கூரையின் கீழ் பெற்றுக்கொள்ள
கூட்டுறவு நகர்
நல்லூர் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்
ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.

மின்சார உபகரணங்கள், மின்னிணைப்புப் பொருள்கள், தண்ணீர்ப் பம் வகைகள், நீர் பைப் வகைகள், தண்ணீர்த் தாங்கிகள் என்பவற்றை நியாயமான விலையில் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய சிறந்த ஸ்தாபனம்
சுந்தர்சன் யாழ்.வீதி, மானிப்பாய்.

சாந்தன் ஸ்ரோர்ஸ்
கொழும்புத்துறை வீதி,
பாண்டியன்தாழ்வு, யாழ்ப்பாணம்.

செல்வம் வீடியோ சென்ரர்
56, கொழும்புத்துறை வீதி,
பாண்டியன்தாழ்வு, யாழ்ப்பாணம்.

உறுதியும் உத்தரவாதமுள்ள 22 கரட் தங்க வைர நகைகளை பெற்றுக்கொள்ள சிறந்த ஸ்தாபனம்
சாரங்கா நகைமாடம்
157/1,கஸ்தூரியார் வீதி,யாழ்ப்பாணம். T.P.: 021 222 6972, 8869
கிளை ஸ்தாபனம்
சாரங்கா ஜூவெல்லர்ஸ்
கொழும்பு- 11, T.P. 011 2434971

தரமான சுத்தமான பலசரக்குப் பொருள்களை மொத்தமாகவும் சில்லறையாகவும் நியாய விலையில் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்:
ஜெகன் களஞ்சியம்
477, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
T.P. 021 222 5035

கணனி முறையில் அழகாக வடிவமைத்து ஒவ்(f) செற் ஸ்கிறீன் பிரின்டிங் முறையில் அச்சுப் பிரதி செய்துகொள்ளவும் கூல் லெமினேசன் செய்துகொள்ளவும் நீங்கள் நாடவேண்டிய சிறந்த ஸ்தாபனம்
கணபதி பிறிண்டேர்ஸ்
54/2, தலங்காவல் பிள்ளையார் வீதி, திருநெல்வேலி மேற்கு,
திருநெல்வேலி. T.P. 060 221 5077

புரியாணி வகைகள், சிற்றுண்டி வகைகள், குளிர்பான வகைகள் ஆகியவற்றை சுவையாகவும், தரமாகவும் பெற்றுக் கொள்ள நீங்கள் நாடவேண்டிய ஒரே ஒரு ஸ்தாபனம்
ஹொட்டல் றொலெக்ஸ்
340, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். T.P. 021 222 2308
கிளை: 360, காலி வீதி,
கொழும்பு-06 T.P. 011 2360462
ஓடர்கள் குறித்த தவணையில் குறித்த நேரத்தில் கவனிக்கப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.மாவட்டக் கூடைப்பந்தாட்ட அணி சாதனை: வவுனியாவை வீழ்த்தி வடமாகாணச் சம்பியனானது

வலி.வடக்கு,ஜூன்3

வடமாகாண விளையாட்டுத் திணைக்களம் மாவட்டங்களுக்கு இடையே நடத்திய ஆண்களுக்கான கூடைப்பந்தாட்டப் போட்டியில் யாழ்.மாவட்ட அணி வடமாகாணச் சம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

திருகோணமலையில் நடைபெற்ற இறுதிப்போட்டியில் யாழ்.மாவட்ட அணியும் வவுனியா மாவட்ட அணியும் மோதிக் கொண்டன.

போட்டி ஆரம்பமாகி முடிவடையும் வரை யாழ்.மாவட்ட அணியின் கையே ஓங்கியிருந்தது. போட்டி ஆரம்பமாகியதும் வவுனியா அணி தீவிரமாக விளையாடிய போதும் அதனைக் கட்டுப்படுத்தி மிகச் சிறப்பான முறையில் யாழ்.மாவட்ட அணி விளையாடியது.

முதல்பாதி ஆட்டம் முடிவடைந்தபோது யாழ்.மாவட்ட அணி 29:19 புள்ளிகள் என்ற அடிப்படையில் முன்னிலையில் காணப்பட்டது.

இரண்டாம்பாதி ஆட்டத்திலும் யாழ்.மாவட்ட அணி 24:14 புள்ளிகள் என்ற அடிப்பண்டயில் தொடர்ந்து முன்னிலை வகித்தது.

ஆட்ட நிறைவில் யாழ்.மாவட்ட அணி 63:33 புள்ளிகள் என்ற அடிப்படையில் வவுனியா அணியை வெற்றிகொண்டு வடமாகாணச் சம்பியனாகத் தெரிவுசெய்யப் பட்டது.

இதன்மூலம் தேசிய மட்டத்தில் இடம் பெறவுள்ள போட்டிகளில் கலந்துகொள்ளும் தகுதியை யாழ்.மாவட்டக் கூடைப் பந்தாட்ட அணி பெற்றுள்ளமை குறிப்பிடத் தக்கதாகும். (4-86)

## ஊர்காவற்றுறை சென்.அன்ரனிஸ் மாணவன் சாதனை



ஊர்காவற்றுறை,ஜூன்3

ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி மாணவன் மாயான் தினேஸ் அண்மையில் இடம்பெற்ற யாழ்.மாவட்ட மெய்வல்லுநர் போட்டியில் 21 வயதுப் பிரிவில் 800 மீற்றர், 5000 மீற்றா ஓட்டப் போட்டிகளில் முதலாம் இடத்தையும், 1500 மீற்றர் போட்டியில் இரண்டாம் இடத்தையும் பெற்றுச் சாதனை படைத்தார்.

நெடுந்தூர ஓட்டப் போட்டியில் சாதனை படைத்து மாகாண மட்டப் போட்டிக்குத் தெரிவாகிய இவர் தீவக வலயத்திற்கும் பெருமை தேடிக் கொடுத்துள்ளார். (50-328)

# யூனியன் கல்லூரியை 3 விக்கெட்டுகளால் வீழ்த்தியது கரவெட்டி விக்னேஸ்வரா

வலி.வடக்கு,ஜூன்3

இலங்கைப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ்.மாவட்டப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கம் யாழ்ப்பாணப் பாடசாலைகளின் 15 வயதுப் பிரிவினர்களுக்கு இடையே நடத்திவரும் லீக் முறையிலான கிரிக்கெட் போட்டி ஆட்டமொன்றில் கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி மூன்று விக்கெட்டுகளினால் வெற்றி பெற்றுள்ளது.

தெல்லிப்பழை யூனியன கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற போட்டி ஆட்டத்தில் யூனியன் கல்லூரியும் விக்னேஸ்வராக் கல்லூரியும் மோதிக்கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய யூனியன் கல்லூரி 24.2 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 78 ஓட்டங்களைப் ...ற்றுக்கொண்டது. அன்ராஜ் 13 ஓட்டங்...யும், ஜெரூசன் 10 ஓட்டங்களையும் ...றுக்கொண்டனர். உதிரிகளாக 37 ஓட்...ளும் பெறப்பட்டன.

...னேஸ்வராக் கல்லூரியைச் சேர்ந்த ...வாச... 4 ஓவர்கள் பந்துவீசி 13 ஓட்டங்களுக்... 4 விக்கெட்டுகளையும் ஆதவன் 8 ஓவர்கள் பந்துவீசி ஓர் ஓட்டமற்ற ஓவருடன் 17 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுகளையும், ஜெயதர்சன் 1.2 ஓவர்கள் பந்துவீசி ஓர் ஓட்டமற்ற ஓவருடன் ஓட்டம் எதுவுமின்றி ஒரு விக்கெட்டையும் கஜகரன், நித்தியவர்ணன் ஆகியோர் தலா ஒரு விக்கெட் டைக் கைப்பற்றினார்கள்.

79 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு பதிலுக்குத் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய விக்னேஸ்வராக் கல்லூரி 30.4 ஓவர்களில் 7 விக்கெட்டுகளை மாத்திரம் இழந்து 80 ஓட்டங்களைப் பெற்று வெற்றி இலக்கை அடைந்தது.

ரஜீபன் 19 ஓட்டங்களையும் ஆதவன் 10 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர். உதிரிகளாக 27 ஓட்டங்களும் கிடைத்தன.

யூனியன் கல்லூரி சார்பில் அன்ராஜ் 9.5 ஓவர்கள் பந்துவீசி 4 ஓட்டமற்ற ஓவர்களுடன் 20 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுகளையும், அகீசன் ஓர் ஓவர் பந்துவீசி 11 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள். (4-86)

# உயரம் பாய்தலுக்கான மெத்தைகள் சீரான முறையில் வழங்கப்படவில்லை

வலி.வடக்கு,ஜூன்3

யாழ்.மாவட்டத்தில் உள்ள பாடசாலைகளின் மாணவர்களுக்கென எடுத்துவரப்பட்ட உயரம் பாய்தலுக்கான மெத்தைகள் சீரான முறையில் வழங்கப்படவில்லையென சில கல்வி வலயங்களின் விளையாட்டுத்துறை ஆசிரியர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

யாழ்.குடாநாட்டுப் பாடசாலைகளுக்கென மூன்று செற் மெத்தைகள் (ஒரு செற்றில் மூன்று துண்டுகள்) எடுத்துவரப்பட்டன. இவ்வாறு எடுத்துவரப்பட்ட மெத்தைகளில் ஒரு செற் வடமராட்சி கல்வி வலயத்துக்கும் மற்றொரு செற் யாழ்.கல்வி வலயத்துக்கும் வழங்கப்பட்டுள்ளன.

மூன்றாவது செற்றில் உள்ள மூன்று துண்டுகளும் தனித்தனியே பிரிக்கப்பட்டு வலிகாமம், தென்மராட்சி, தீவகம் ஆகிய கல்வி வலயங்களுக்குத் தனித்தனித் துண்டுகளாக வழங்கப்பட்டுள்ளன.

உயரம் பாய்தலுக்கு ஒரு துண்டு மெத்தையை வைத்துப் பயன்படுத்தமுடியாத நிலையில் வலிகாமம், தென்மராட்சி, தீவகம் ஆகிய மூன்று கல்வி வலயங்களுக்கும் வழங்கப்பட்ட தனித்தனித் துண்டு மெத்தைகள் பயனற்ற முறையில் காணப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

பயன்படாத முறையில் இந்த மெத்தைகளை வழங்குவதிலும் பார்க்க ஏதாவது ஒரு கல்வி வலயம் பயன்படுத்தக் கூடிய முறையில் இதனை வழங்கியிருக்கலாம் என விளையாட்டுத்துறைப் பொறுப்பாசிரியர்கள் விசனம் தெரிவித்தனர். (50-86)

# யாழ்.மாவட்டப் பாடசாலைகளுக்கிடையிலான ஆண்களுக்கான தடகளப் போட்டி முடிவுகள்

வலி.வடக்கு,ஜூன்3

யாழ்.மாவட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெற்ற ஆண்களுக்கான தடகளப் போட்டியில் வெற்றியீட்டியவர்களின் விவரங்கள் வருமாறு:

**17 வயதுப் பிரிவு**

*100 மீற்றர் ஓட்டம்:* அ.கவாஸ்கர் (யாழ்.சென்.பற்றிக்ஸ் கல்லூரி), செ.அனுராஜ (பரு.ஹாட்லிக் கல்லூரி), தி.தயாபரன் (வட.கம்பர்மலை அ.த.க. பாட.)

*200 மீற்றர் ஓட்டம்:* தி.தயாபரன் (வட.கம்பர்மலை அ.த.க. பாடசாலை), அ.எட்வின் ஜோய் (யாழ்.சென்.ஜோன்ஸ் கல்லூரி), இ.கிசோர் (கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி).

*400 மீற்றர் ஓட்டம்:* உ.அகிலன் (அளவெட்டி அருணோதயாக் கல்லூரி), ச.ஐங்கரன் (கரணவாய் மகாவித்தியாலயம்), அ.எட்வின் ஜோய் (யாழ்.சென்.ஜோன்ஸ் கல்லூரி).

*800 மீற்றர் ஓட்டம்:* செ.அகில்ராஜ் (தெல்லி.கட்டுவன்புலம் மகாவித்தி.), ஜெ.ஸ்ரீலவன் (யாழ்.மத்திய கல்லூரி), ம.தயாபரன் (கொடிகாமம் அ.த.க. பாடசாலை).

*1500 மீற்றர் ஓட்டம்:* ச.ஐங்கரன் (கரணவாய் மகாவித்தியாலயம்), ஜெ.ஸ்ரீலவன் (யாழ்.மத்திய கல்லூரி), ச.அனுசன் (விடத்தற்பளை கமலாசினி வித்தி.).

*110 மீற்றர் தடைதாண்டல் ஓட்டம்:* அ.கவாஸ்கர் (யாழ்.சென்.பற்றிக்ஸ் கல்லூரி), க.இராகுலன் (கொக்குவில் இந்துக் கல்லூரி), த.கபிலன் (யாழ்.சென்.ஜோன்ஸ் கல்லூரி).

*400 மீற்றர் தடை தாண்டல் ஓட்டம்:* அ.கவாஸ்கர் (யாழ்.சென்.பற்றிக்ஸ் கல்லூரி), பு.தாஸ்மகான் (கரணவாய் மகா வித்தியாலயம்), ம.தயாபரன் (கொடிகாமம் அ.த.க. பாடசாலை).

*நீளம் பாய்தல்:* உ.அகிலன் (அளவெட்டி அருணோதயாக் கல்லூரி), தி.கோபிராஜ் (உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி), இ.ரஞ்சித் (மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாட.).

*உயரம் பாய்தல்:* யோ.பிரசாந் (நெல்லியடி மத்திய மகா வித்தி.), ர.நிரோஜன் (அள்வெட்டி அருணாசலம் வித்தி.), பு.கிரிசானந்தன் (நெல்லியடி மத்திய மகா வித்தி.), ர.விதுசன் (யாழ்.மத்திய கல்லூரி).

*முப்பாய்ச்சல்:* உ.அகிலன் (அளவெட்டி அருணோதயாக் கல்லூரி), ம.ரஜீகரன் (தென்ம.சந்திரபுரம் ஸ்கந்தா வித்தி.), தி.கோபிராஜ் (உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி).

*குண்டு போடுதல்:* பு.பானுபிரியன் (யாழ்.சென்.ஜோன்ஸ் கல்லூரி), சோ.தனஞ்சயன் (பருத்.ஹாட்லிக் கல்லூரி), இ.நிமலேந்திரா (உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி).

*தட்டெறிதல்:* க.இராகுலன் (கொக்குவில் இந்துக் கல்லூரி), சி.ஹரிதரன் (யாழ்.மத்திய கல்லூரி), அ.அரிகரன் (நெல்லியடி மத்திய மகா வித்தி.).

*ஈட்டி எறிதல்:* லோ.லவஸ் லிவிஸ்டன் (யாழ்.சென்.பற்றிக்ஸ் கல்லூரி), ர.வதுசன் (யாழ்.மத்திய கல்லூரி), ர.பத்மரஞ்சன் (புலோலி மெதடிஸ் மிஷன் த.க. பாடசாலை).

*முப்பாய்ச்சல்:* கு.அனோசன் (அளவெட்டி அருணோதயாக் கல்லூரி), ம.திருவாரன் (அளவெட்டி அருணோதயாக் கல்லூரி), யோ.அகிலன் (மிருசுவில் அ.த.க. பாடசாலை).

*4x100 மீற்றர் அஞ்சலோட்டம்:* அளவெட்டி அருணோதயாக் கல்லூரி, யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரி, பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி.

*4x400 மீற்றர் அஞ்சலோட்டம்:* அளவெட்டி அருணோதயாக் கல்லூரி, யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரி, பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி. (4-86)

(தொடரும்)




# பரபரப்பான கபடி இறுதிப்போட்டியில் தெல்லிப்பழையை வென்றது நல்லூர்

வலி.வடக்கு,ஜூன்3

யாழ்.மாவட்டச் செயலக விளையாட்டுப் பிரிவினால் வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் ஆதரவுடன் யாழ்.மாவட்டப் பிரதேச செயலகங்கள், உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுக்கிடையே நடைபெற்ற பெண்களுக்கான கபடிப் போட்டியில் நல்லூர் பிரதேச செயலக அணி மாவட்டச் சம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் இடம்பெற்ற இறுதிப்போட்டியில் தெல்லிப்பழைப் பிரதேச செயலக அணியும் நல்லூர் பிரதேச செயலக அணியும் மோதிக்கொண்டன.

இரு அணி வீராங்கனைகளும் ஒருவருக்கொருவர் சளைத்தவர்கள் இல்லையென்பதை நிரூபிப்பது போன்று மிகவும் கடுமையாகப் போட்டியில் மோதிக்கொண்டார்கள்.

முதல்பாதி ஆட்டத்தில் 18:08 புள்ளிகள் என்ற நிலையில் செயலக அணியின் கைகள் ஓங்கி நின்றது.

இப்போட்டியின்போது தெல்லிப்பழைப் பிரதேச செயலக அணியின் வீராங்கனை ஒருவர் கைமுறிந்த நிலையில் வெளியேற்றப்பட்டதால் போட்டியின்போது ஒரு பரபரப்பு ஏற்பட்டது.

இரண்டாம்பாதி ஆட்டம் ஆரம்பமாகியதும் தெல்லிப்பழை பிரதேச செயலக அணி வீராங்கனைகள் வீறுகொண்டெழுந்து விளையாடியதால் இரண்டாம் பாதி ஆட்டத்தில் 15:08 புள்ளிகள் என்ற அடிப்படையில் தெல்லிப்பழைப் பிரதேச செயலக அணி இரண்டாம் பாதி ஆட்டத்தில் முன்னிலை பெற்றது.

எனினும் ஆட்ட நிறைவில் நல்லூர் பிரதேச செயலக அணி 26:23 புள்ளிகள் என்ற அடிப்படையில் தெல்லிப்பழை பிரதேச செயலக அணியை வெற்றி பெற்று யாழ்.மாவட்டச் சம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்டது. (4-86)



யாழ்.மாவட்டச் செயலக விளையாட்டுப் பிரிவு வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் ஆதரவுடன் யாழ்.மாவட்டப் பிரதேச செயலகங்கள், உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுக்கு இடையே நடைபெற்ற பெண்களுக்கான இறுதிப்போட்டியில் நல்லூர் பிரதேச செயலக அணியும் தெல்லிப்பழை பிரதேச செயலக அணியும் மோதிக்கொள்வதைப் படங்களில் காணலாம். (படங்கள்: நேசன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறுதிக் கட்டப் போரின் போது வன்னியில் 3000 தடவைகள் விமானத் தாக்குதல்கள்!

## ஆனால் பாகிஸ்தான் விமானிகளின் உதவி பெறப்படவில்லையாம்

கொழும்பு, ஜூன்3

வன்னியில் நடைபெற்ற இறுதிக் கட்டப் போரின் போது சுமார் மூவாயிரம் தடவைகள் விமானத் தாக்குதல்கள் நடத்தப்பட்டன. விடுதலைப் புலிகளின் 1,900 நிலைகள் மீதும் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

எனினும் இந்தத் தாக்குதல்களை நடத்துவதற்கு பாகிஸ்தானிய விமானிகளின் எவ்வித உதவியும் பெறப்படவில்லை.

இவ்வாறு விமானப்படையின் தளபதி எயார் சீவ் மார்ஷல் றொகான் குணதிலக கூறியதாக இணையத்தளத் தகவல்கள் தெரிவித்தன.

இது குறித்து விமானப்படைத் தளபதி கூறியதாக இணை யத்தளங்கள் மேலும் தெரிவித்திருப்பதாவது:

இறுதிக் கட்டப் போரின்போது விடுதலைப் புலி களின் ஆயிரத்து 900 நிலை கள் மீது சுமார் 3 ஆயிரம் விமானத் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

எனினும், இந்தத் தாக்குதல்களை பாகிஸ்தானிய விமானிகள் மேற்கொள்ளவில்லை.

விடுதலைப் புலிகளுடனான யுத்தத் தின் போது பாகிஸ்தானிய அரசு பல்வேறு வழிகளில் ஒத்துழைப்பு வழங்கியிருந்தமை மறுக்க முடியாத உண்மை என்றபோதிலும், விமானிகள் போராட்டத்தில் களமிறக்கப்படவில்லை.

ஆயுதப் பயிற்சி, ஆயுத விநியோகம், புலனாய்வுத் தகவல்கள் எனப் பல்வேறு வழிகளில் பாகிஸ்தானிய பாதுகாப்புத்துறை ஒத்துழைப்பு வழங்கியது என்றும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

இதேவேளை, வன்னி யுத்தத்தின்போது பாகிஸ்தானிய விமானிகள் நேரடியாகத் தாக்குதல்களை மேற்கொண்டன என அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (அ)




## மரண அறிவித்தல்



### திருமதி ஜெகதீஸ்வரன் புவனேஸ்வரி (கலா)

யாழ்ப்பாணம், காங்கேசன்துறை வீதி, இல.612 என்னும் முகவரியைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஜெகதீஸ்வரன் புவனேஸ்வரி (கலா) 28.05.2009 வியாழக்கிழமை ஜேர்மனியில் காலமானார்.

அன்னார் இரத்தினம்- செல்லம்மா தம்பதியரின் அன்பு மகளும் ஜெகதீஸ்வரனின் அன்பு மனைவியும் கணேசன், சாந்தா (ஜேர்மனி), வசந்தி (கனடா), மகேசன் (லண்டன்), நளினி (லண்டன்), சபேசன் (இந்தியா) ஆகியோரின் அன்புச்சகோதரியும் திருமதி செல்வராணி (வல்வெட்டி), பாலசிங்கம் (ஜேர்மனி), யோகராசா (கனடா), ஜெயா (லண்டன்), திருமதி தாரணி, திருமதி லதா (லண்டன்) ஆகியோரின் அன்பு மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.06.2009) புதன்கிழமை ஜேர்மனியில் நடைபெறுகின்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

612, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
சீனியர் இரத்தினம் [illegible]
(தந்தை).

(85862)

# இடம்பெயர்ந்தோர் முகாம்கள் பலவற்றின் நிலைமை படுமோசம்

## ஆனந்தசங்கரி ஆதாரம்

கொழும்பு, ஜூன் 3

மோதல்கள் காரணமாக இடம்பெயர்ந்தவர்களுக்காக ஏற்படுத்தப்பட்டுள்ள முகாம்கள் பலவற்றில் நிலைமை படுமோசமாகக் காணப்படுகின்றது. பல்லாயிரக்கணக்கான மக்கள் இடம்பெயர்ந்துள்ளதால், அவர்களின் பிரச்சினைகளுக்கு அரசால் தனித்து தீர்வுகாண முடியாது.

-இவ்வாறு தமிழர் விடுதலை கூட்டணியின் தலைவர் வி.ஆனந்தசங்கரி பி.பி.ஸிக்குத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

முகாம்களில் உள்ள மக்களிடமிருந்து எனக்குக் கிடைத்த தகவல்களின்படி சில முகாம்கள் சிறப்பாக உள்ளன. பல முகாம்கள் மிக மோசமாகவுள்ளன.

குடிதண்ணீர், சுகாதார வசதிகள் மிக மோசமானவையாக காணப்படுகின்றன. தண்ணீர் பற்றாக்குறையால் முகாம்களில் உள்ள பலருக்கு பல நாள்களாக குளிப்பதற்கான சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. இதனால் பலர் தோல் வியாதியால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கடும் வெயில் காரணமாக முகாம்களில் உள்ள கர்ப்பிணித் தாய்மாரும், புதிதாகப் பிறந்த குழந்தைகளும் மோசமான சூழ்நிலையை எதிர்கொள்கின்றனர்.

விடுதலைப் புலிகளின் துப்பாக்கிப் பிரயோகத்துக்கு மத்தியிலும் மக்கள் தமது உயிர்களை பணயம் வைத்து அங்கிருந்து வெளியேறி அரச பகுதிக்கு வந்தனர்.

இந்த மக்களை விடுதலைப் புலிகள் என அரசு சந்தேகப் படுமானால், கிளிநொச்சி, முல்லைத்தீவின் அனைத்து மக்களும் சந்தேகத்துக்குரியவர்களாகக் கருதப் படவேண்டும். அரசின் இந்த அணுகுமுறை பிரச்சினைக்குத் தீர்வுகாண உதவாது. மக்களை மீள குடியமர்த் துவதற்கு முன்னர் கண்ணிவெடிகளை அகற்றவேண்டும் என அரசு தெரிவிப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது.

நான் முகாமில் உள்ள மக்கள் பலருடன் தொடர்ந்தும் தொடர்பிலிருக்கிறேன். எங்கு கண்ணிவெடிகள் புதைக்கப்பட்டுள் ளன என நான் அவர்களை கேட்டதற்கு 75 சதவீதமான பகுதிகள் கண்ணிவெடிகள் அற்றவை என அவர்கள் எனக்குத் தெரிவித்தனர்.

இடம்பெயர்ந்த மக்களுக்கு நிவாரண உதவிகளை வழங்குவதில் படையினர் பாராட்டத்தக்க விதத்தில் செயற்படுகின்றனர். எனினும், அது போதுமானவை அல்ல.

இடம்பெயர்ந்தவர்களின் பிரச்சினைக்கு அரசால் தனித்துத் தீர்வுகாண முடியாது - என்றார். (சி)

### மாவட்டக் கண்காணிப்புக் குழுக் கூட்டம்

சுகாதாரத் திணைக்களத்தின் கீழ் இயங்கும் வைத்திய நிறுவனங்களுக்கும், அரச சார்பற்ற நிறுவனங்களுக்குமான மாதாந்த மாவட்ட கண்காணிப்புக் குழுக்கூட்டம் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்குப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும் எனச் சுகாதார சேவைகள் பதில் பிராந்தியப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

இதேவேளை மேற்படி கூட்டம் நாளை வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்குப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை மாநாட்டு [illegible] பெறும் என அறிவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (201)

## நெஞ்சை விட்டகலா
## ஓராண்டு நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 22 ★ 03 ★ 1946 | 14 ★ 06 ★ 2008 |

### அமரர் திரு.கந்தையா தர்மலிங்கம்

(திதி: ஏகாதசி)

இன்ப வாழ்வில் இதயம் மகிழ
துன்பச்சுவடே தெரியாமல்
தூய உள்ளத்துடன் வாழ்ந்தீரே!..
இன்று உமைப்பிரிந்து தவிக்கிறோம்
உமது உடல்தான் மறைந்தது
உருவம் மறையவில்லை!
கண்ணயர்ந்து போனாலும்
கலையவில்லை உன் உருவம்
நாட்கள் பல கடந்தாலும் நீங்காது
உம் நினைவு எம்மை விட்டு.

No: 28, Grairo Place
Havelock Road,
Pamankada,
Colombo - 06
Tel: 2581927

பிரிவுத்துயரால் வாடும்
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பெறாமக்கள்,
சகோதரங்கள்

## 12ஆம் ஆண்டு நினைவலைகள்

மலர்வு 22 • 11 • 1954

உதிர்வு 17 • 05 • 1997



### செல்லத்துரை மனோரஞ்சன்

திதி: பூர்வபக்க ஏகாதசி

பாராட்டி சீராட்டி பக்குவமாய் வழிகாட்டி
பாசமது கொண்டெம்மை பண்பு காட்டி
இன்பமாய் எம்மோடு வாழ்ந்த நினைவை
ஈராறு ஆண்டுகள் இழந்து தவிக்கின்றோம்.

தங்கள் ஆத்மா சாந்திபெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

சங்குவேலி தெற்கு,
மானிப்பாய்.

நீங்காத நினைவுடன்:
குடும்பத்தினர்.

(85794)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







மறைந்த யாழ். பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி பேராசிரியர் கிருஷ்ணராஜாவின் பூதவுடல் நேற்று யாழ். பல்கலைக் கழக கைலாசபதி கலையரங்கில் அஞ்சலிக்காக வைக்கப் பட்டிருந்த போது எடுக்கப்பட்ட படங்கள்.

அன்னாரின் பூதவுடல் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருப்பதையும் அஞ்சலி நிகழ்வில் கலந்து கொண்டோரில் ஒரு பகுதியினரையும் அஞ்சலி நிகழ்வு நிறைவில் அன்னாரின் பூதவுடல் அவரது இல்லத்திற்கு எடுத்துச் செல்லப்படுவதையும் முதல் வரிசைப் படங்களில் காணலாம். அஞ்சலி நிகழ்வில் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் எஸ். சண்முகலிங்கன், பதில் கலைப்பீடாதிபதி எஸ். சிவலிங்கராசா, உயர்பட்டப் படிப்புக்கள் பீடாதிபதி எஸ். சத்தியசீலன், விஞ்ஞானபீடாதிபதி பேராசிரியர் க. குமாரவடிவேல், வணிகத்துறை பீடாதிபதி பேராசிரியர் க. தேவராசா, விவசாயத்துறை பீடாதிபதி திருமதி சிவமணிசிவச்சந்திரன், யாழ்.பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பொ.பாலசுந்தரம்பிள்ளை, முன்னாள் பேராயர் எஸ். ஜெபநேசன், செஞ்சொற்செல்வர் ஆறு. திருமுருகன் ஆகியோர் அஞ்சலியுரை நிகழ்த்துவதை கீழே உள்ள இரண்டு வரிசைகளிலும் காணலாம். (படங்கள்: கவிநேசன்)

# அறிஞர்கள் வரிசையில் வைத்து மதிக்கத்தக்க கிருஷ்ணராஜா சிறந்த மனிதத்தன்மை நிறைந்த பெருமனிதனாவார்

## பல்கலைக்கழக அஞ்சலி நிகழ்வில் பேராயர் ஜெபநேசன்

யாழ்ப்பாணம், ஜூன் 3

யாழ்ப்பாணத்தில் உள்ள அறிஞர்கள் வரிசையில் வைத்து மதிக்கத்தக்க பேராசிரியர் சோ.கிருஷ்ணராஜா சிறந்ததொரு மனிதத்தன்மை நிறைந்த பெருமனிதனா[illegible].

தென்னிந்தியத் திருச்சபையின் முன்னாள் பேராயர் கலாநிதி எஸ்.ஜெபநேசன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கலைப்பீடாதிபதி பேராசிரியர் எஸ் கிருஷ்ணராஜாவுக்கு அஞ்சலி நிகழ்வு நேற்று நண்பகல் யாழ்.பல்கலைக் கழகத்தில் இடம் பெற்ற போது அஞ்சலி உரையாற்றுகையில் பேராயர் இப்படிக்கூறி னார்.

கடந்த வெள்ளிக்கிழமை காலமான யாழ் பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி பேராசிரியர் சோ. கிருஷ்ணராஜாவின் அஞ்சலி நிகழ்வுகள் நேற்று மதியம் 12 மணியளவில் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெற்றன.

மதியம் 12 மணியளவில் அன்னாரின் பூதவுடல் அவரது வீட்டிலிருந்து யாழ். பல்கலைக் கழகத்திற்கு எடுத்துவரப்பட்டது.

பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் அன்னாரின் பூதவுடல் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்தது.

அப்போது பல்கலைக்கழக துணைவேந்தர், அனைத்துப் பீடங்களின் பீடாதிபதிகள், விரிவுரையாளர்கள், மாணவர்கள், கல்வியலாளர்கள் என நூற்றுக்கணக்கானோர் மலர்தூவி கண்ணீர் அஞ்சலி செலுத் தினர்.

தொடர்ந்து பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் என் சண்முகலிங்கன் தலைமையில் அஞ்சலி உரைகள் இடம் பெற்றன.

அஞ்சலி நிகழ்வில் பேராயர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

யாழ்ப்பாணத்தில் உள்ள அறிஞர்கள் வரிசையில் பேராசிரியர் சோ.கிருஷ்ணராஜாவும் ஒருவராவார்.

நகைச்சுவை ததும்பும் பேச்சும், எதிலும் திறன்படச் செயற்படக்கூடிய ஆளுமை பொருந்தியவரும், இன்னும் சொல்லப் போனால் சிறந்ததொரு மனிதத் தன்மை நிறைந்த பெருமனிதனுமாவார் - என்றார்.

### துணைவேந்தர்

பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் நா.சண்முகலிங்கன் அஞ்சலி உரை நிகழ்த்துகையில் - பெறுமதியான வர்களை இழந்து நிற்கும் இந்தக் காலகட்டத்தில் யாழ்.பல்கலைக்கழக சமூகம் பேராசிரியர் கிருஷ்ணராஜாவை இழந்து நிற்கிறது.

பேராசிரியர் கிருஷ்ணராஜா கலைப் பீடத்தின் துரித வளர்ச்சிக்காக நிறைந்த திட்டங்களை தனது சிந்தையில் வைத்திருந்தார். குறிப்பாக இராமநாதன் நுண்கலைக் கழகத்தின் வளர்ச்சிக்காக அரும்பணியாற்றினார்.

சிறந்த நண்பனாக, குடும்பத் தலைவனாக பல்கலைக்கழகத்தின் வழிகாட்டியாக விளங்கிய பேராசிரியர் கிருஷ்ணராஜாவை நாம் இன்று இழந்து நிற்கின்றோம்.

இறுதிநேரத்தில் யாழ்.பல்கலைக்கழக சமூகத்திற்கு எத்தனையோ விடயங்களைச் செய்ய வேண்டும் என்பதில் துடிப்பாக இருந்தார். பல ஆலோசனைகளை வழங்கிக் கொண்டிருந்தவர். அவரது இழப்பு பல்கலைக்கழக சமூகத்திற்கு மட்டுமன்றி கல்விச்சமூகத்திற்கும் பேரிழப்பாகும் - என்றார்.

### பதில் கலைப் பீடாதிபதி

யாழ்.பல்கலைக்கழகத்தின் பதில் கலைப்பீடாதிபதி பேராசிரியர் எஸ்.சிவலிங்கராசா தனது அஞ்சலி உரையில் தெரிவித்ததாவது-

பேராசிரியர் கிருஷ்ணராசா சுகயீனமுற்று சிகிச்சைக்காக கொழும்பு செல்கின்ற போது தனது சுமைகளை என்னிடத்தில் ஒப்படைத்துச் செல்லும் போது, நான் மீண்டும் வருவேன் என்று கூறிச்சென்றார். இன்று இப்படியான கோலத்தில் வந்துள்ளார். அவருக்கு அஞ்சலி உரையாற்ற வேண்டிய [illegible]ல் நாம் இன்று நிற்கிறோம். இவரது இழப்பு பல்கலைக் கழகத்தின் கலைப்பீடத்திற்கு மட்டு மன்றி கல்விச் சமூகத்திற்குமே பேரிழப்பாகும் - என்றார்.

யாழ்.பல்கலைக்கழக வணிகத்துறை பீடாதிபதி கே.தேவராசா தனது அஞ்சலி உரையில்-

நான் மாணவனாக இருந்த காலத்தில் சிறந்ததொரு விரிவுரையாளராக பணியாற்றியவர்.

இளம் விரிவுரையாளர்கள் ஆராய்சிகளில் ஈடுபட வேண்டும் என்பதில் அதீத அக்கறை கொண்டவர்.

கலைப்பீடத்தின் வளர்ச்சிக்கு மட்டுமன்றி ஏனைய பீட வளர்ச்சிக்கும் தன்னாலான பணிகளைப்புரிந்தவர் பேராசிரியர் சோ.கிருஷ்ணராசா. அவரது இழப்பு தமிழ்ச் சமூகத்தின் பேரிழப் பாகும் - என்றார்.

### முன்னாள் துணைவேந்தர்

யாழ்.பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் பொ.பாலசுந்தரம்பிள்ளை தனது அஞ்சலியுரையில் -

பேராசிரியர் கிருஷ்ணராஜா விமர்சனத் துறையில் மிகுந்த ஈடுபாடு கொண்டவர். சமய இலக்கியங்களில் நன்கு புலமை தேர்ந்தவர். யாழ்.பல்கலைக்கழகத்தில் ஊடகத்துறையின் வளர்ச்சிக்கு என்னோடு தோளோடு தோள் நின்று உழைத்தவர். அவரது இழப்பு யாழ்ப்பாணக் கல்விச் சமூகத்திற்கு பேரிழப்பாகும் - என்றார்.

யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞான பீடாதிபதி எஸ். குமாரவடிவேல், செஞ்சொற் செல்வர் ஆறு.திருமுருகன், விவசாயப் பீடாதிபதி திருமதி சிவமணி சிவச்சந்திரன், உயர்பட்டப்படிப்புக்கள் பீடாதிபதி பேராசிரியர் எஸ். சத்தியசீலன், யாழ்.பல்கலைக் கழக நிர்வாகத்துறை சார்பாக கே.ஜெயக்குமார், ஊழியர் சங்கத்தின் தலைவர் ரி.தனேந்திரன், கலைப்பீட மாணவர் ஒன்றியத் தலைவர் எஸ். காண்டீபன், மாணவர் ஒன்றயத் தலைவர் எஸ்.பிரதீபன், மூத்த கலைஞர் அ.அரசையா ஆகியோரும் அஞ்சலியுரை நிகழ்த் தினார்.

அஞ்சலி நிகழ்வுகளை அடுத்து பிற்பகல் 2 மணியளவில் பேராசிரியர் சோ. கிருஷ்ணராசாவின் பூதவுடல் பல்கலைக் கழக சமூகம் கண்ணீர் மல்கி நிற்க அங்கிருந்து எடுத்துச் செல்லப்பட்டு நல்லூரில் உள்ள அவரது இல்லத்தில் இறுதிஅஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளது.யாழ் பல்கலைக்கழக சமூகம், பேராசிரியர் சோ. கிருஷ்ணராஜா விற்குநேற்று அஞ்சலிகளைச் செலுத்தி கண்ணீர் மல்க நேற்று சோகமயமாக நின்றது.

(1-9-86)

# பேராசிரியரின் இறுதிக்கிரியைகள் இன்று

யாழ்ப்பாணம், ஜூன் 3

கலைப் பீடாதிபதி சோ.கிருஷ்ணராஜாவின் இறுதிக்கிரியைகள் இன்று பிற்பகல் 2.30 மணிக்கு இடம்பெறவுள்ளன.

நல்லூர் கோயில்வீதியில் உள்ள அவரது வீட்டில் வைக்கப்பட்டுள்ள பேராசிரியரின் பூதவுடலுக்கு பெரும் எண்ணிக்கையானவர்கள் நேற்று அஞ்சலி செலுத்தினார்கள்.

இன்று காலை இறுதிக்கிரியைகள் இடம் பெற்று பூதவுடல் கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்பட இருக்கிறது.

பேராசிரியரின் இறுதிக்கிரியைகளை ஒட்டி யாழ். பல்கலைக்கழகத்துக்கு இன்று விடு முறை வழங்கப்பட்டுள்ளதாக பல் கலைக் கழக நிர்வாகம் அறிவித்துள்ளது. (1)

## முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ள

# பிரி. பிரஜையான தமிழ்ப் பெண்ணை வவுனியா அரச அதிபர் பார்த்தார்

கொழும்பு, ஜூன் 03

வவுனியாவில் இடம்பெயர்ந்தவர்களுக்கான முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ள பிரிட்டனைச் சேர்ந்த தமிழ் மருத்துவ உதவியாளர் தமிழ்வாணி ஞானகுமாரை வவுனியா மாவட்ட அரச அதிபர் சார்ள்ஸ் நேரில் சென்று சந்தித்துள்ளார். இது தொடர்பாக அவர் பி.பி.சிக்குக் கருத்துத் தெரிவிக்கையில் குறிப்பிட்டவை வருமாறு:-

முகாமிற்குத் தனிப்பட்ட முறையில் சென்று அவரது ஆவணங்களைப் பார்வையிட்டேன்.

ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் பஸில் ராஜபக்ஷவின் உத்தரவின் பேரிலேயே அங்கு சென்றேன்.

நான் முகாமிற்குச் சென்று தமிழ்வாணியைச் சந்தித்தேன். இராமநாதன் நிவாரணக் கிராமத்திலுள்ள முகாமொன்றில் அவர் தங்கியுள்ளார். அவர் தனது உறவினர்கள், நண்பர்களுடன் அங்கு உள்ளார். நல்ல ஆரோக்கியத்துடன் உள்ளார்.

தமிழ்வாணியின் உடலில் எவ்வித காயங்களும் இல்லை. அவர் பாதுகாப்பாக, மகிழ்ச்சியாக இ[illegible] டனுக்குத் திரு[illegible] டிக்கை எடுத்துள்ளோம் - என்றார். (அ-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## பேராசிரியர் சோமசுந்தரம் கிருஷ்ணராஜா

### (பீடாதிபதி, கலைப்பீடம், யாழ்.பல்கலைக்கழகம்)



யாழ்ப்பாணம்,நல்லூர் கோயில்வீதியை வதிவிடமாகக்கொண்ட பேராசிரியர் சோமசுந்தரம் கிருஷ்ணராஜா (கலைப்பீடாதிபதி,யாழ்.பல்கலைக்கழகம்) 29.05.2009 அன்று கொழும்பில் இறையடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம் - நல்லம்மா தம்பதியினரின் இரண்டாவது புதல்வனும் சுதுமலை கந்தையா - பாக்கியம் தம்பதியினரின் மருமகனும் இராசலட்சுமியின் (ஓய்வு பெற்ற பிரதி அதிபர், வேம்படி மகளிர் கல்லூரி) அன்புக் கணவரும் கவிதா(கனடா), மாறன் (Managing Director, Marsha Systems (PVT) Ltd.) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஜனகன் (பொறியியலாளர், கனடா), ரதிவதனி (ஆசிரியை , யாழ்.சன்மார்க்க வித்தியாலயம்) ஆகியோரின் மாமனாரும் ஸ்ருதி (கனடா), பவித்திரன் (கனடா), மைத்ரேய ஆகியோரின் அன்புப் பேரனும் சுந்தரராஜா,ஸ்ரீகந்தராஜா,சண்முகராஜா, கமலாதேவி, சுவர்ணலதா, பவானி ஆகியோரின் அன்புச் சகோதரனும் திரு.திருமதி ஈஸ்வரலிங்கம் (ஏழாலை), காலஞ்சென்ற சின்னையா, மற்றும் கோகிலாதேவி ஆகியோரின் சம்பந்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.06.2009) புதன்கிழமை நல்லூரில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 2.30 மணியளவில் கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

383/14, கோயில் வீதி,
நல்லூர்.

தகவல்
மனைவி, பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தேசிய பாதுகாப்பு ஆலோசகர் பதவியில் தொடர எம்.கே.நாராயணனுக்கு உத்தரவு

புதுடில்லி, ஜூன் 03

தேசிய பாதுகாப்பு ஆலோசகர் எம்.கே. நாராயணன் மற்றும் பிரதமரின் முதன்மைச் செயலாளர் டி.கே.ஏ. நாயர் ஆகியோர் மறு உத்தரவு வரும் வரை பதவியில் தொடரும்படி கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர் என பிரதமர் அலுவலக வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

உளவுத்துறையின் முன்னாள் தலைவரான எம்.கே. நாராயணன் 2005இல் தேசிய பாதுகாப்பு ஆலோசகராக நியமிக்கப்பட்டார்.

பஞ்சாப் பிரிவைச் சேர்ந்த ஐ.ஏ.எஸ். அதிகாரியான டி.கே.ஏ.நாயர் 2004இல் பிரதமரின் முதன்மைச் செயலாளராக நியமிக்கப்பட்டார்.

இவர்கள் இருவரின் பதவிக்காலமும் இம்மாதம் முடிவு பெறுகிறது. இந்த நிலையில், மறு உத்தரவு வரும் வரை பதவி யில் தொடரும்படி அவர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (சி)

# கருணாநிதிக்கு இன்று 86ஆவது பிறந்தநாள்



முதல்வர் கருணாநிதியின் 86ஆவது பிறந்தநாள் இன்று (புதன்கிழமை) கொண்டாடப்படுகிறது. இதையொட்டி, பல்வேறு நிகழ்ச்சிகளில் அவர் பங்கேற்கிறார்.

இன்று காலை 7 மணிக்கு அண்ணா நினைவிடம் சென்று மலர் வளையம் வைத்து மரியாதை செலுத்துகிறார். 7.15 மணிக்கு பெரியார் நினைவிடத்தில் அஞ்சலி செலுத்துகிறார்.

இதுதவிர தி.மு.க. சார்பில் தமிழகம் முழுவதும் முதல்வர் கருணாநிதியின் பிறந்தநாள் விழா கொண்டாடப்படுகிறது.

# சோனியா, ராகுலுக்கு புலிகளால் ஆபத்து; தமிழகத்துக்கு செல்லவேண்டாம் என்று அறிவிப்பு

## இந்திய உளவுத்துறை எச்சரிக்கை

புதுடில்லி, ஜூன் 3

இலங்கையிலிருந்து அகதிகள் என்ற போர்வையில் புலிகள் இந்தியாவுக்குள் ஊடுருவி உள்ளனர் எனவும், சோனியா காந்தி, ராகுல்காந்தி ஆகியோர் தமிழ்நாட்டுக்குச் சுற்றுப்பயணம் செய்ய வேண்டாம் என்றும் இந்திய உளவுத்துறை எச்சரிக்கை விடுத்துள்ளது.

இலங்கையில் நடைபெற்ற போரின்போது உயிர்தப்பிய சுமார் 300 முதல் 400 விடுதலைப் புலிகள் இந்தியாவுக்குள் அகதிகள் என்ற போர்வையில் ஊடுருவியுள்ளனர் என இந்திய உளவுத்துறை எச்சரிக்கை விடுத்துள்ளது. இவர்கள் அனைவரும் இந்தியாவில் உள்ள அனைத்து மாநிலங்களிலும் பரவலாக தங்கியிருக்கலாம் என்றும் தெரிவித்துள்ளது.

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் கொல்லப்பட்டார் என இலங்கை இராணுவம் அறிவித்தது. ஆனால், விடுதலைப் புலிகளின் உளவுப்பிரிவுத் தலைவர் பொட்டு அம்மானைப் பற்றிய தகவல் யாருக்கும் தெரியவில்லை. எனவே, தமிழ்நாடு உள்ளிட்ட அனைத்து கடலோர மாநிலங்களில் பாதுகாப்பை மேலும் பலப்படுத்தும் வகையில் இந்திய கப்பற்படை, கடலோரப் பாதுகாப்புப் படையினர் உஷார் படுத்தப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில் இந்திய உளவுத்துறையின் தகவல் அடிப்படையில், அகில இந்திய காங்கிரஸ் கட்சி தலைவர் சோனியாகாந்தி, அவரது மகன் ராகுல் காந்தி ஆகியோருக்கு விடுதலைப் புலிகளால் ஆபத்து ஏற்படக் கூடும் என்ற எச்சரிக்கைத் தகவலும் அளிக்கப்பட்டு உள்ளது. எனவே அவர்கள் 2 பேரும் தமிழ் நாட்டுக்குச் சுற்றுப்பயணம் மேற்கொள்ள வேண்டாம் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.


## யா/மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பழை
## நூற்றாண்டு விழாச் சபை அங்குரார்ப்பணம்

மேற்படி அங்குரார்ப்பணக் கூட்டம் எமது பாடசாலையில் பாவலர் துரையப்பாபிள்ளை மண்டபத்தில் 14.06.2009 ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு பாடசாலை அதிபர் திருமதி சிவமலர் அனந்தசயனன் அவர்களின் தலைமையில் நடைபெறவுள்ளது என்பதனை மகிழ்ச்சியுடன் தெரியத்தருகின்றோம்.

மேற்படி கூட்டத்திற்கு பெற்றோர்கள், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள், முன்னாள் அதிபர்,ஆசிரியர்கள், நலன்விரும்பிகள் அனைவரும் கலந்துகொண்டு நூற்றாண்டு விழா சிறக்க தங்கள் பங்களிப்பினை நல்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

யா/ மகாஜனக் கல்லூரி,
தெல்லிப்பழை.

பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
பழைய மாணவர் சங்கம்.

உலக அகதிகள் தினத்தினை முன்னிட்டு UNHCR நிறுவனத்தின் அனுசரணையுடன் அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தினால் யாழ். மாவட்ட ரீதியாக நடத்தப்படும் ஆண்கள்,பெண்களுக்கான

## மரதன் ஓட்டப்போட்டி - 2009

மாதிரி விண்ணப்பப்படிவம்

முழுப்பெயர்- ..............................
விலாசம் -..............................
பிறந்ததிகதி...................... பால்......................
அடையாள அட்டை இல..................
கிராம சேவையாளர் பிரிவு.......... பிரதேச செயலர் பிரிவு............
தொலைபேசி இலக்கம்...........
திகதி..........

..............................
விண்ணப்பதாரியின் கையொப்பம்

குறிப்பு - மேற்படி போட்டிகள் ஜூன் மாதம் 20.06.2009 தினத்தன்று காலை 6.30 மணிக்கு கரவெட்டி பிரதேச செயலக காரியாலயத்துக்கு முன்பாக ஆரம்பிக்கப்படவுள்ளது. ஆண்களுக்கான மரதன் ஓட்டப்போட்டி 10KM கொண்டதாகவும் பெண்களுக்கான மரதன் ஓட்டப் போட்டி 5KM கொண்டதாகவும் நடைபெறும் இவ்விருபோட்டிகளிலும் 15 வயதுக்கு மேற்பட்டவர்கள் மட்டுமே பங்குபற்ற அனுமதிக்கப்படுவார்கள்.

இதற்கான விண்ணப்படிவங்களை தயாரித்து பூர்த்தி செய்து 10.06.2009 இற்கு முன்னராக பின்வரும் விலாசத்துக்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

இணைப்பாளர்,
அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம்,
106, 4ஆம் குறுக்குத்தெரு,யாழ்ப்பாணம்.
தொ.பே.: 021 222 2416

| இடம் | பரிசு | பெறுமதி | இடம் | பரிசு | பெறுமதி |
|---|---|---|---|---|---|
| 1ஆம் | ஆண் | 15,000.00 | 1ஆம் | பெண் | 15,000.00 |
| 2ஆம் | ஆண் | 10,000.00 | 2ஆம் | பெண் | 10,000.00 |
| 3ஆம் | ஆண் | 7,500.00 | 3ஆம் | பெண் | 7,500.00 |

## கலைப்பீடம், யாழ்.பல்கலைக்கழகம்
## விசேட மீள் பரீட்சைகள் -2008

நான்காம் வருட முதலாம் அரையாண்டு(பழைய பாடத்திட்டம்)
நான்காம் வருட இரண்டாம் அரையாண்டு (பழைய பாடத்திட்டம்)
இரண்டாம் மொழி ஆங்கிலம் I,II,III

கலைப்பீடத்தில் பழைய பாடத்திட்டத்தின்கீழ் (Semester system) நான்காம் வருட முதலாம், இரண்டாம் அரையாண்டு பரீட்சைகளிலும், இரண்டாம் மொழியாகிய ஆங்கிலத்திலும், சித்தியெய்தத்தவறியதன் மூலம் தமது பட்டப்படிப்பை பூர்த்தி செய்யாத மாணவர்களுக்கான விசேட மீள் பரீட்சைகள் 29.06.2009 திகதியியிலிருந்து 10.07.2009 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளன.மீள் பரீட்சார்த்திகள் தமது பரீட்சை விண்ணப்பங்களை 15.06.2009 ஆம் திகதிக்கு முன்பாக சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

வெளி மாவட்டங்களில் வசிக்கும் மாணவர்கள் தமது பெயர், மாணவர் பதிவு இலக்கம், தேசியஅடையாள அட்டை இலக்கம், பரீட்சையின் பெயர், பாட அலகுகளின் விவரம் ஆகியவற்றை தபால் மூலமாகவோ, 021 222 3091 எனும் தொலை நகல் ஊடாகவோ அறியத்தரவும்.

பதிவாளர்,
யாழ். பல்கலைக்கழகம்.


# காணாமற்போன விமானத்தை கண்டுபிடிக்கத் தேடுதல்

பரிஸ், ஜூன் 3

காணாமற்போயுள்ள பிரான்ஸ் விமான நிறுவனத்தின் விமானத்தை கண்டுபிடிப்பதற்கான நடவடிக்கைகள் துரிதமடைந்துள்ளன. தேடுதல் நடவடிக்கையில் பல நாடுகளின் கப்பல்களும், விமானங்களும் ஈடு படுத்தப்பட்டுள்ளன.

அட்லாண்டிக் சமுத்திரப் பிராந்தியத்தில் தேடுதல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. பிரான்ஸ், ஸ்பெயின், செனகல், பிரேஸில் ஆகிய நாடுகளின் கப்பல்கள் தேடுதல் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

காணாமற் போயுள்ள விமானத்தை கண்டுபிடிக்கும் முயற்சிக்கு அமெரிக்கா பெரிதும் உதவும் என அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா தெரிவித்துள்ளார். செய்மதி மூலமான தகவல் பெறுவதற்கும் உதவி செய்யப்படும் என அமெரிக்கா தெரிவித்துள்ளது.

பிரேஸிலிருந்து 228 பேருடன் பிரான்ஸை நோக்கிப் புறப்பட்ட இந்த விமானத்தில் 216 பயணிகளும், 12 சிப்பந்திகளுமிருந்தனர். பயணிகளில் ஒரு கைக்குழந்தை உட்பட 8 சிறுவர், சிறுமிகளும் அடங்குவர்.

பிரான்ஸ் விமான நிறுவனத்தைச் சேர்ந்த 'ஏ.எவ்.447' என்னும் இவ்விமானம்; பிரேஸிலுள்ள ரியோ டி ஜெனிரோ நகர விமான நிலையத்திலிருந்து ஞாயிற்றுக்கிழமை உள்ளூர் நேரப்படி இரவு 7 மணிக்கு பிரான்ஸின் தலைநகரான பரிஸை நோக்கிப் புறப்பட்டது.

ரியோ டி ஜெனிரோவுக்கும்; பரிஸுக்குமிடையிலான தூரம் 9.145 கிலோ மீற்றர் ஆகும். இவ்விமானம் பரிஸ் நகரிலுள்ள சார்ள்ஸ் டி கார்லே விமான நிலையத்தை மறுதினமான திங்கட்கிழமை பிற்பகல் 2.45 மணிக்குச் சென்றடைந்திருக்க வேண்டும். எனினும், இவ்விமானம் புறப்பட்டுச் சென்ற 6 மணி நேரத்தில் மாயமாக மறைந்துவிட்டது.

இவ்விமானம் அட்லாண்டிக் கடலுக்கு மேலே 35 ஆயிரம் அடி உயரத்தில் பறந்து கொண்டிருந்தபோது, திடீரென மாயமானது. விமானத்துடனான தொடர்பு துண்டிக்கப்பட்டது. விமானப் போக்குவரத்தினதும், இராணுவ 'ரடார்' பார்வையிலிருந்தும் விமானம் மறைந்து விட்டது.

இதனால் ரியோ டி ஜெனிரோ விமான நிலையத்திலும், பரிஸ் விமான நிலையத்திலும் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. இதையடுத்து, பிரான்ஸ் விமான நிறுவன தகவல் தொடர்புத்துறை இயக்குநர் பிரான் கா காய்ஸ் பிரவுஸ், ''விமானம் மின்னலால் தாக்கப்பட்டு விபத்துக்குள்ளாகியிருக்கலாம்'' என சந்தேகம் தெரிவித்தார்.

அதேவேளை, ''இந்த விமானம் கடத்தப்பட்டிருக்கலாம் என்றும் சந்தேகம் கொள்ள முடியாது. அதற்கான வாய்ப்பு இல்லை'' என பிரான்ஸ் அமைச்சர் ஜீன்லூயிஸ் பார்லோ தெரிவித்தார். அத்துடன் தேடுதல் நடவடிக்கையும் [illegible]


We deeply regret the demise of our beloved Dean, Faculty of Arts



**Prof.S.Krishnarajah**

May his soul rest in peace

Blessed are the pure at heart

English Language Teaching Centre,
University of Jaffna.

Head & staff.

## கண்ணீர் அஞ்சலி



எமது நிறுவன உரிமையாளரின் சகோதரன் ஜெகதீஸ்வரன் அவர்களின் மனைவியார்

**திருமதி ஜெகதீஸ்வரன் புவனேஸ்வரி**

ஜேர்மனியில் காலமானதையிட்டு அதிர்ச்சியடைந்துள்ளோம். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மாசாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

[illegible]


## மரண அறிவித்தல்



### சண்முகராசா மனோரஞ்சிதம்

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகராசா மனோரஞ்சிதம் நேற்று (02.06.2009)செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சண்முகராசா - மனோன்மணி தம்பதியரின் அன்பு மகளும் மகாலக்சுமி, இராசலக்சுமி, இராசரெத்தினம், மனோகரன், ஈஸ்வரி, தையல்நாயகி, ஸ்ரீதேவி ஆகியோரின் பாசமிகு சகோதரியும் சிவஞானவதி காலஞ்சென்ற பரமேஸ்வரன் காலஞ்சென்ற இராஜேந்திரன் மற்றும் பாலேஸ்வரன் கணாதீபன் ஆகியோரின் மைத்துனியும் கலைச்செல்வன், அனுசியா, சுரேன், ஜெயகிருஷ்ணா, பாஸ்கர், பானுஜா, கஜனன், சயந்தன் ஆகியோரின் பெரியம்மாவும் ஜனார்த்தனி, ஜனகோபன், ஜலதாரிணி, ஜெய கபில் ஆகியோரின் அன்பு அத்தையும் ஆவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.06.2009) புதன் கிழமை பி.ப. ஒருமணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

185, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:-
ச.இராசரெத்தினம் (சகோதரன்).

### சின்னத்துரை ஆறுமுகம்



(ஓய்வு பெற்ற ஆசிரியர்)

காலையடி, பண்டத்தரிப்பைப் பிறப்பிடமாகவும்வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை ஆறுமுகம் (கற்கண்டு மாஸ்ரர்) நேற்று (02.06.2009) செவ்வாய்க்கிழமை இரவு 8.30 மணியளவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்துரை - தெய்வானை தம்பதியரின் மூத்த புதல்வரும் காலஞ்சென்ற சிவபாக்கியத்தின் அன்புக் கணவரும் சிறிதரன், பாஸ்கரன், யோகேஸ்வரன், ஆனந்தன், நற்குணேஸ்வரன், நாகபுஸ்பம், கேதீஸ்வரன் ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.06.2009) புதன் கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் சம்பில் துறை மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

காலையடி,
பண்டத்தரிப்பு.

தகவல்:-
ஆ.நற்குணேஸ்வரன் (மகன்)
விரிவுரையாளர்,
தொழில்நுட்பக்கல்லூரி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாநகர சபை, யாழ்ப்பாணம்



# இடம்பெயர்ந்தவர்களில் 2,317 பேர் காயமடைந்தவர்கள் எனத் தகவல்

## மொத்தம் 2,76,785 பேர் நலன்புரி நிலையங்களில்

கொழும்பு, மே 03

வன்னியிலிருந்து 2 லட்சத்து 76 ஆயிரத்து 785 பேர் இடம்பெயர்ந்து யாழ்ப்பாணம், திருகோணமலை, மன்னார், வவுனியா ஆகிய மாவட்டங்களில் உள்ள நலன்புரி நிலையங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர் எனப் புள்ளிவிவரத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இவர்களில் 2 ஆயிரத்து 317 பேர் பல்வேறு வைத்திய சாலைகளில் காயங்களுக்காகச் சிகிச்சை பெற்று வருகின்றார்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வவுனியா மாவட்டத்திலேயே அதிக எண்ணிக்கையானவர்கள் தங்க வைக்கப்பட்டுள்ளனர் என்றும், மனிக்பாம் பகுதியிலுள்ள நிவாரண கிராமங்களில் கணிசமான எண்ணிக்கையானவர்கள் தங்க வைக்கப்பட்டிருக்கின்றனர் எனவும் அந்த புள்ளிவிவரத் தகவல்கள் தெரிவித்துள்ளன. அந்தத் தகவலின்படி, 2 லட்சத்து 56 ஆயிரத்து 287 பேர் வவுனியாவில் உள்ள 29 நிலையங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர் எனவும், மனிக்பாம் பகுதியில் உள்ள ஆறு நிலையங்களில் மாத்திரம் 2 லட்சத்து 16 ஆயிரத்து 361 பேர் தங்க வைக்கப்பட்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில் யாழ்ப்பாணத்தில் 11 நிலையங்களில் 11 ஆயிரத்து 86 பேரும், திருகோணமலையில் 6,892 பேரும், மன்னாரில் 398 பேரும் தங்க வைக்கப்பட்டுள்ளனர். இதைவிட காயமடைந்தவர்கள் மன்னார் வைத்தியசாலையில் ஆயிரத்து 539 பேரும், அனுராதபுரம் மாவட்டம் பதவியா வைத்தியசாலையில் 413 பேரும், பொலன்னறுவை வைத்தியசாலையில் 83 பேரும், கொழும்பு தேசிய வைத்திய சாலையில் 57 பேரும், கண்டி வைத்திய சாலையில் 29 பேரும், மகரகம வைத்திய சாலையில் ஒருவரும் சிகிச்சை பெற்று வருகின்றனர் எனவும் புள்ளிவிவரத் தகவல்கள் தெரிவித்துள்ளன.

மனநலம் மோசமாகக் குன்றியவர்கள், முதியவர்கள் மற்றும் இயலாதவர்கள் என 1,537 பேர் உறவினர்களிடமும், பராமரிப்பு இல்லங்களிலும் ஒப்படைக்கப்பட்டுள்ளனர் என்றும் அந்தத் தகவல்கள் தெரிவித்துள்ளன. (சி)

# மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்துக்கு அச்சுறுத்தலாம்

கொழும்பு, ஜூன் 03

அரசை அதன் செயற்பாடுகளுக்காக கடுமையாக விமர்சித்து வரும் கொழும்பின் முன்னணி அரச சார்பற்ற அமைப்பான 'மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம்' அது செயற்படும் விதத்தைச் சரிசெய்து கொள்ள வேண்டுமென இனந்தெரியாத நபர்கள் மிரட்டல் விடுத்துள்ளனர்.

சிங்கள மொழியில் எழுதப்பட்ட கடித மொன்றின் மூலம் இந்த அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது என மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் தெரிவித்துள்ளது.

அண்மையில் இராணுவத்தின் வெற்றியை முழுநாடும் கொண்டாடியபோது, மாற்றுக் கொள்கை நிலையம் தேசிய கொடியைக் கூட தனது அலுவலகத்தில் ஏற்றாதது குறித்து அக்கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மேலும் குறிப்பிட்ட கடிதத்தில் மாற்று கொள்கை நிலையம் இராணுவத்தினரை கௌரவிக்க வேண்டுமெனவும் 'நமக்காக நாம்' நிதியத்திற்கு நிதி வழங்க வேண்டுமெனவும்அந்த அச்சுறுத்தல் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாற்றுக் கொள்கை நிலையம் இலங்கையின் இறைமை, ஐக்கியம், கௌரவம் என்பனவற்றுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் திட்டங்களைக் கைவிட வேண்டும் என்றும் கடிதம் மூலம் மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளது.



தேசிய வெற்றித் தின நிகழ்வுகளுக்கான ஒத்திகைகள் நேற்று காலி முகத்திடலில் இடம்பெற்றபோது பல்குழல் ஏவுகணைகளுடன் அணிவகுத்துச் செல்லும் படையினர்.

# தலிபான்கள் கடத்திய மாணவர்கள் பாகிஸ்தான் இராணுவத்தால் மீட்பு

இஸ்லாமாபாத், ஜூன் 03

பாகிஸ்தானில் தலிபான் தீவிரவாதிகளால் கடத்தப்பட்ட இராணுவப் பயிற்சிக் கல்லூரி மாணவர்கள் மீட்கப்பட்டார்கள். பாகிஸ்தானிலுள்ள வடக்குப் பாகிஸ்தானில் இராணுவப் பயிற்சிக் கல்லூரி உள்ளது. இதில் படித்த 80 மாணவர்கள் கல்லூரி பஸ்களில் அங்குள்ள கொரயாப் பகுதிக்குச் சென்றனர். அப்போது தலிபான் தீவிரவாதிகள் அவர்களைச் சுற்றிவளைத்து பஸ்களுடன் கடத்திச் சென்றனர்.

உடனே அந்த இடத்தை இராணுவத்தினரும் பொலிஸாரும் முற்றுகையிட்டனர். தீவிரவாதிகளைச் சுற்றிவளைத்தனர். இதைப் பார்த்ததும் தீவிரவாதிகள் மாணவர்களை விடுவித்து விட்டு அங்கிருந்து தப்பி ஓடி விட்டனர். 80 பேரில் 79 பேர் பத்திரமாக மீட்கப்பட்டனர். ஒரு மாணவரின் கதி மட்டும் என்னவென்று தெரியவில்லை.

பாகிஸ்தானில் ஆதிக்கம் செலுத்தி வரும் தலிபான் தீவிரவாதிகளை விரட்டி அடிக்க சமீபகாலமாக இராணுவத் தாக்குதல் நடத்தப்பட்டு வருகிறது. சுவாத் பள்ளத்தாக்கில் பதுங்கியிருந்த பெரும் பகுதி தீவிரவாதிகளை இராணுவத்தினர் கொன்றுவிட்டனர். ஆயிரக்கணக்கான தீவிரவாதிகள் அங்கிருந்து தப்பி ஓடிவிட்டனர்.

எனவே, இதற்குப் பழிக்குப் பழி வாங்கும் திட்டத்திலேயே தீவிரவாதிகள் மாணவர்களை கடத்திச் சென்றுள்ளனர். ஆனால், இராணுவம் அவர்களை மீட்டுவிட்டது.

## எல்-சல்வடோரில் புதிய ஜனாதிபதி

எல்-சல்வடோரின் புதிய ஜனாதிபதியாக மவுரிசியோ பியூன்ஸ் பதவியேற்றுள்ளார், இவர், கியூபாவுடனான உறவு புதுப்பிக்கப்படும் என அறிவித்துள்ளார்.

மவுரிசியோ பியூன்ஸ், 1992 ஆம் ஆண்டு வரை,கெரில்லா போர் நடத்திவந்தார். பின்னர் ஆயுதங்களை ஒப்படைத்து விட்டு, ஜனநாயக முறைப்படி போராடத் தொடங்கினார்.

அதேவேளை, மாற்றத்துக்கு வித்திட்ட அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவோடு இவர் தம்மையும் ஒப்பிட்டுப் பேசியுள்ளார்.

## இடம்பெயர்ந்த..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புடைத்தான தீர்வே அவசியம்.

* ஆகையால் எமது நாட்டில் அரசியல் பேச்சுக்களின் மூலம் உருவாக்கப்படும் தீர்வையே அமுல் செய்வோம். அதற்கான செயற்பாடுகள் ஏற்கனவே ஆரம்பமாகி விட்டன. தீர்வு ஒன்று எட்டப்படுவதற்கு ஏதுவாக நல்லிணக்க முறையிலான நட வடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளோம்.
* முன்னாள் போராளிகளை தேசிய நீரோட்டத்தில் இணைத்துக் கொள்வதற் கான நடவடிக்கைகளை செயற்படுத்தும் பொருட்டு எனது அமைச்சின் அனுசரணையில் நிபுணத்துவக் குழு ஒன்று விசேடதிட்டத்தை வகுத்து வருகின்றது. நாட்டு மக்கள் சகலரையும் ஐக்கியப்படுத்துவதை இலக்காகக் கொண்டே இத்திட்டம் வகுக்கப்படுகின்றது. (அ)

## இலங்கைக்குக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரிட்டன், பிரான்ஸ் மற்றும் சுவீடன் போன்ற நாடுகள் ஐரோப்பிய ஒன்றியம் கடன் வழங்குவதை நிறுத்த ஒபாமா அரசிற்கு அழுத்தம் கொடுத்து வருகின்றன எனத் தெரிவிக்கப்படுகிறது.

## தமிழ்த் தேசிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யல் தீர்வின் தேவை இல்லாது செய்யப்படவில்லை.

அரசியல் தீர்வின் தேவை இப்போது தான் வலுவடைந்துள்ளது. இந்தத் தீர்வைப் பெறுவதற்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசுடனும் சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுவுடனும் இணைந்து செயற்பட முன்வரவேண்டும்.

மீண்டும் பயங்கரவாதம் ஏற்படாதிருக்கவேண்டும் என்றால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எமது இந்தக் கோரிக்கையை ஏற்றுச்செயற்பட வேண்டும்.

## படையினரின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வதற்கான சகல ஏற்பாடுகளும் செய்யபட்டுள்ளன. இதன் போது, முப்படையினரின் அணி வகுப்பு இடம் பெறுவதுடன், யுத்த களத்தில் படையினரால் பயன்படுத்தப்பட்ட கனரக ஆயுதங்களின் பவனியும், கடல் மற்றும் விமானப் படையினரின் சாகச நிகழ்வுகளும் இடம்பெறுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

சபாநாயகர், பிரதமர், அமைச்சர்கள், எம்.பிக்கள், நீதியரசர்கள் மற்றும் இராஜதந்திரிகள், சமூக - சமயப் பெரியார்கள், பிரமுகர்கள் எனப் பலரும் பங்குபற்றும் இந் நிகழ்வைக் கண்டுகளிக்க பெரும் எண்ணிக்கையானோர் இன்று காலிமுகத் திடலில் கூடுவர் என எதிர்பார்க்கப்படுகின்றது.

பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ, இராணுவ கடற்படை, விமானப் படை தளபதிகள், பொலிஸ் மா அதிபர் மற்றும் சிவில் பாதுகாப்புப் பிரிவின் பணிப்பாளர் நாயகம் ஆகியோரும் இந்த நிகழ்வில் கலந்து கொள்ளவுள்ளனர். வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த நிகழ்வில் வடக்கு, கிழக்கு மீட்பு நடவடிக்கைகளின் போது கள முனையிலிருந்து செயற்பட்ட படை சிப்பாய்கள் மற்றும் படைத் தளபதிகளுக்கும் விசேட கௌரவிப்பு வழங்கப்படவுள்ளது எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை இந்த நிகழ்வை முன்னிட்டு நேற்று முதல் இன்று வரை கொழும்பிலுள்ள பல பிரதான வீதிகள் மூடப்படும் என பொலிஸ் தலைமையகம் தெரிவித்தது.

(அ[illegible])

## ஜனாதிபதியின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வாறு கூறினார். அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு:-

வன்னியிலிருந்து இடம்பெயர்ந்து வவுனியா அகதி முகாம்களில் தங்கியுள்ள மக்களுக்குத் தேவையான அனைத்து உதவிகளையும் அரசு அவர்களுக்கு வழங்கி வருகின்றது. இருப்பினும், அந்த மக்களைக் கூடிய விரைவில் மீள்குடியமர்த்துவதே அரசின் ஒரே நோக்கம்.

இதற்காக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ சர்வதேச நாடுகளிடமும் அங்கெல்லாம் வசிக்கும் எம் நாட்டவர்களிடமும் உதவியைக் கோரியிருக்கின்றார்.

**அரசு எதிர்நோக்கியுள்ள பாரிய சவால்**

பயங்கரவாதிகளிடமிருந்து மக்களைப் பாதுகாக்கும் நோக்கில்தான் ஜனாதிபதி இந்த யுத்தத்தைத் தொடங்கினார். யுத்தம் இப்போது வெற்றி பெற்றதுடன் இ[illegible] அரசின் கடமை முடிந்துவிடவில்லை.

யுத்தத்தால் இடம்பெயர்ந்த மக்களை மீள்குடியமர்த்துவதே எமது அரசு இப்போது எதிர்நோக்கியிருக்கும் பாரிய சவாலாகும். இந்தச் சவாலை எம்மால் மிக இலகுவாக வெற்றிகொள்ள முடியும் என நம்புகிறோம்.

கிழக்கு மாகாணத்தில் இடம்பெயர்ந்த மக்களை மீள்குடியமர்த்த நாம் எடுத்த நடவடிக்கையில் எமக்கு நல்ல அனுபவம் ஏற்பட்டுள்ளது. நாம் திட்டமிட்ட காலத்திற்கு முன்னதாகவே அவர்களை மீள்குடியமர்த்தினோம்.

அதேபோல் வடக்கு மக்களையும் எம்மால் துரிதமாக மீள்குடியமர்த்த முடியும். இதற்காக நாம் பல நாடுகளினதும் உதவிகளைக் கோருவதுபோன்றே இந்தியாவின் உதவியையும் கோருகின்றோம்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இந்த நோக்கத்திற்காகத்தான் இந்தியாவுக்கு விஜயம் செய்யவுள்ளார். இந்திய அரசு பல கோடி ரூபாவை எமக்குத் தந்து உதவியிருக்கின்றது. இந்த மீள்குடியேற்ற நடவடிக்கைக்கு உதவுவதற்கு இந்திய வெளிவிவகார அமைச்சர் விருப்பம் தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் கூட தமிழ்நாட்டுக்குச் சென்று முதல்வர் கருணாநிதியைச் சந்தித்து இந்த மக்களின் மீள்குடியேற்றத்துக்கு உதவுமாறு கோரியிருக்கின்றனர். தனிநாடு ஒன்றை அமைக்க உதவுமாறு அவர்களால் இனிக் கோரமுடியாது. மீள்குடியேற்றத்துக்குத் தான் உதவிகோர முடியும் - என்றார்.

(அ-சி)


**உயர் கலைக் கல்லூரி**

**HIGH COLLEGE OF ARTS**

குளப்பிட்டிச் சந்தி, கொக்குவில்

யாழ்ப்பாணப் பிரபல ஆசிரியர்களின் ஒருங்கிணைந்த சேவையில்

**A/L 2011**

03.06.2009 புதன்கிழமை பிற்பகல் 4 மணி

புதிய பிரிவு ஆரம்பம்

| | |
|---|---|
| தமிழ் - R.S.சந்திரசேகர் | அரசியல் - K.S.இளங்கோ |
| இந்துநாகரிகம் - S.ஸ்ரீதரன் | வரலாறு - K.சுதன் |
| இந்துசமயம் - S.ஸ்ரீதரன் | நாடகமும் அரங்கியலும் - |
| புவியியல் - P.S.குமரன் | பிரபல ஆசிரியர் |

* 2011 A/L பிரிவுக்கென அனைத்துப் பாடங்களும் ஆரம்பம் முதல் கற்பிக்கப்படும்.
* 2010 A/L பிரிவுக்கும் மேற்படி ஆசிரியர்களின் ஒருங்கிணைந்த சேவையில் வகுப்புகள் நடைபெறும்.

'அறிவை அறிவால் அறிவோம்'



**யாழமுது சைவ உணவகம்**

சூடான சுவையுடன் கூடிய சகல சைவ உணவு வகைகளும் இங்கே கிடைக்கும். தினமும் காலை, மாலை, இரு வேளையும் சுடச்சுட சுவைமிகு பால்அப்பம் பெற்றுக்கொள்ளலாம். விசேட ஓடர்களும் ஏற்றுக்கொள்ளப்படும்.

இல.87, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.

T.P.NO:0779847117



**விற்பனையாகின்றது**

மத்திய வங்கிஆண்டறிக்கை 2008

பூபாலசிங்கம் புத்தகசாலை, இல.4. ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.



**படிவங்கள் விற்பனையாகின்றன**

* தொழில் நுட்பக் கல்லூரிகளில் அனுமதிக்கான படிவம் (2009/2010 கல்வியாண்டு)
* 2010இல் முதலாம் தரத்திற்கான படிவம் புதியது.

பூபாலசிங்கம் புத்தகசாலை, இல.4. ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 03.06.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.